விலை : 20.00
பக்கங்கள் : இருபது

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 14 வள்ளுவர் ஆண்டு 2044 ஆவணி 20 வியாழக்கிழமை (05.09.2013) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 260

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

# ஐ.நாவின் நடவடிக்கை தொடரும்

## பான் கீ மூன் தெரிவிப்பு

(நியூயோர்க்)

இலங்கையில் மனிதாபிமான நடவடிக்கைகளைப் பலப்படுத்துவதற்கான ஐக்கிய நாடுகள் சபையின் நடவடிக்கைகள் தொடரும் என்று ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ மூன் தெரிவித்துள்ளார். (19ஆம் பக்கம் பார்க்க)


கோப்பு படம்


இலட்சக்கணக்கான பக்தர்கள் புடைசூழ நல்லூர்க் கந்தனின் இரதோற்சவ பவனி.

# துன்புறுத்துவது அருவருக்கத்தக்கது


(லண்டன்)

இலங்கைக்கு விஜயம் செய்திருந்த ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளையைச் சந்தித்தவர்களை படையினர் விசாரணைக்கு உள்ளாக்குவதாக வெளிவந்திருக்கும் குற்றச்சாட்டுக்கள் குறித்து அரசாங்கம் உடனடியாக விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும் என மனித வுரிமைகள் கண்காணிப்பகம் வலியுறுத்தி இருக்கின்றது.

இலங்கையில் ஒருவார கால விஜயத்தை தான் மேற்கொண்டிருந்த காலப்பகுதியில் தன்னைச் சந்தித்த குடும்ப உறுப்பினர்கள், செயற்பாட்டாளர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் துன்புறுத்தல்களுக்கும் அச்சுறுத்தல்களுக்கும் உள்ளாக்கப்பட்டதாக நவநீதம்பிள்ளை தன்னுடைய பயணத்தின் இறுதியில் கொழும்பில் நடத்திய ஊடகவியலாளர் மாநாட்டில் தெரிவித்திருந்தார். (20ஆம் பக்கம் பார்க்க)

# நல்லூர்க்கு சென்றவேளை வீட்டினுள் புகுந்து திருட்டு

## 10 இலட்சம் ரூபாய் வரை பறிபோனது



(யாழ்ப்பாணம்)

வீட்டின் யன்னலை உடைத்து உள்நுழைந்த திருடர்கள் சுமார் 10 இலட்சம் ரூபாய் பெறுமதியான தங்க நகைகள் மற்றும் இலத்திரனியல் சாதனங்களைத் திருடிச் சென்றுள்ளதாக யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் தேசிய கல்வியற் கல்லூரியின் விரிவுரையாளர் ஒருவரினால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

நல்லூர்க் கந்த சுவாமி கோவில் தேர்த்திருவிழாவான நேற்று வீட்டிலிருந்த அனைவரும் சென்றிருந்த (19ஆம் பக்கம் பார்க்க)

# 108 முன்னாள் போராளிகள் 9ஆம் திகதி விடுதலை

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் முன்னாள் போராளிகள் சிலர் விடுவிக்கப்படவுள்ளதாக புனர்வாழ்வு ஆணையாளர நாயகம் அலுவலகம் தெரிவித்துள்ளது.

அதன்படி புனர்வாழ்வு பெற்ற 108 முன்னாள் போராளிகள் சமூகத்துடன் இணைக்கப்படவுள்ளதாக புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் அலுவலகம் தெரிவித்துள்ளது. (02ஆம் பக்கம் பார்க்க)

# இந்திய தூதுவர் சின்ஹா நேற்று யாழ்.விஜயம்




(யாழ்ப்பாணம்)


இலங்கைக்கான இந்தியத் தூதுவராகப் பதவியேற்றுள்ள வை.கே.சின்ஹா யாழ்ப்பாணத்திற்கு நேற்றையதினம் முதன்முறையாக வருகைதந்ததோடு வடக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறியை சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

வடக்கு மாகாண ஆளுநரின் அலுவலகத்தில் நேற்று முற்பகல் 11 மணி (19ஆம் பக்கம் பார்க்க)

ஐக்கிய தேசியக் கட்சி



தியாகராஜா
துவாரகேஸ்வரன்
வடமாகாண சபை
முதலமைச்சர் வேட்பாளரும்
முதன்மை வேட்பாளரும்



X 5

மாதாந்தம் 250000/- வருமானம். உணவு, இருப்பிடம், ரிக்கெற் இலவசம்

முற்றிலும் புதிய வரவு ...

- 6 மாதத்திற்கு ஒரு தடவை இலவசமாக ஊர் வந்து போகலாம்.
- 2 வருட விசா, நீடிக்கப்படக் கூடிய உத்தரவாதம்.

வாரத்தில் 4 பேர் மட்டுமே இணைக்கப்படுவர்.

டென்மார்க்கில் படிக்க, உழைக்க அரியவாய்ப்பு

திசைகாட்டி (பிறைவேற்) லிமிற்
175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி 0212219016, 0215689090

(காலை 8.30 - மாலை 6.30 வரை)

(C-4600)

# இராணுவக் கருத்தரங்கில் சுப்பிரமணியன் சுவாமி

(கொழும்பு)

கொழும்பில் இலங்கை இராணுவத்தின் மூன்றாவது பாதுகாப்புக் கருத்தரங்கில் பாரதிய ஜனதா கட்சியின் தலைவர்களுள் ஒருவரான சுப்பிரமணியன் சுவாமி உட்பட்ட 20 இந்திய பிரதிநிதிகள் கலந்து கொண்டுள்ளனர்.

போருக்குப்பின் இலங்கை- சவாலகளும் பிராந்திய உறுதிப்பாடும் என்ற தலைப்பில் 3 நாள் கருத்தரங்கை இலங்கை இராணுவம் நடத்தி வருகிறது. இதில் 66 நாடுகளின் பிரதி நிதிகள் கலந்து கொண்டிருக்கின்றனர்.

இந்தியாவில் இருந்து கடும்போக்கு தமிழ் தேசிய எதிர்ப்பாளரான பாரதிய ஜனதா கட்சியின் தலைவர் சுப்பிரமணியன் சுவாமி உட்பட 20பேர் இந்த கருத்தரங்கில் கலந்து கொண்டிருக்கின்றனர். (19ஆம் பக்கம் பார்க்க)

# NEW SCIENCE WORLD

VICTORY MUST

Navalar road junction , Brown road , Jaffna.

Web : www.physicsocean.com Email : info@physicsocean.com

For 2013A/L......

## Day Classes

Physics : R.Kugen

R.Kumaran

Chemistry : Dias

S.Sivakumar

Biology : S.Ponthivakaran

From 09-09-2013(MONDAY) at 09.30 am

(C-4607)



# இந்தியத் திருத்தல யாத்திரை

**நாட்கள் 12, யாத்திரிகர் 10, ஆரம்பம் : 20.10.2013**

## தரிசிக்கும் ஆலயங்கள்:

மலைக்கோட்டை விநாயகர், திருப்பதி-வேலூர் பொற்கோயில், கல்கி பகவான், அலமேலு மங்கா, பழனி திருவண்ணாமலை, மாங்காடு, திருவேற்காடு, காளகஸ்திரி, திருத்தணி, கபாலீஸ்வரர், அஷ்டலட்சுமி, ஆறுபடை முருகன் ஒரே இடத்தில், மீனாட்சி சுந்தரேஸ்வரன், பழமுதிர்ச்சோலை, அழகர் கோயில், திருச் செந்தூர், ஸ்ரீரங்கம், திருவானைக்காவல், இராமேஸ்வரம், நவபாஸணம், மேல் மருவத்தூர், உத்தி சகோச மங்கை, பிரசின்ன வெங்கடாசலப் பெருமான், ஸ்ரீ நவசாயிபாபா மந்திர் (சீரடி பாபா), 35 இற்கும் குறையாத ஆலயங்களைத் தரிசிக்கலாம்.

நேரம் இருந்தால் சதுரகிரி, சுந்தர மகாலிங்கேஸ்வரரையும் தரிசித்து சித்தர்கள் மலையில் வாழ்ந்த இடங்களுக்கும் செல்லலாம். அத்துடன் சென்னையில் ஒருநாள் சொப்பிங் செய்யலாம்.

## எமது சேவை :

இருவழி விமான ரிக்கெட், மூன்று வேளை உணவு, இரண்டு பேருக்கு குளியலறையுடன் கூடிய அறைகள், AC வாகன வசதி, ஒரு நாளுக்கு 1 லீற்றர் சுத்தமான குடிநீர், விமான நிலையத்திற்கு சென்றுவர வாகன வசதி, 4மணிக்கு கோப்பி, தேநீர் இவை அனைத்தும் தங்களிடம் இருந்து பெறும் பணத்திற்கான எமது சேவைகள்.

மேல் விபரங்கள் தேவையானால் கேட்டறிந்து பதிவு செய்க

**கலாநிதி T.ஸ்ரீரெங்கநாதன்**

59 3/3, செட்டியார் தெரு, கொழும்பு 11.

தொ.பே: 0777680102, 0724222989

Web: www.sridevipilgrims.com

**முக்கிய கவனிப்பு:**

13.09.2013 இற்கு முன்னதாகவும் தவறின் 4.10.2013 இற்கு பின்னரும் தொடர்புகொண்டு உங்கள் பதிவுகளை மேற்கொள்ளலாம்.

(4592)



வாழ்வில் உன்னதமான தருணங்களில் சிறந்த நிறுவனத்தை தெரிவு செய்வதன் மூலம் உங்கள் உயர்ந்த இலக்கை அடையுங்கள்.

After A/L... | IT | English | Engineering

75% அனைவருக்கும் நேரடிக் கட்டணக் கழிவு

**IT Diplomas**

- Information Technology
- Hardware & Networking
- Web Designing & Development
- Video Production & Editing
- Graphics Designing & Multmedia
- Computerized Accounting
- TAlly Accounting | AutoCAD

வேலை வாய்ப்பு உத்தரவாதத்துடனான கற்கைநெறிகள்

DMI COMPUTER EDUCATION



யாழில் முதற்தர ஆங்கில பயிற்சி மையத்தில் இருந்து

**English Diploma**

ஆங்கிலம் பேச, எழுத, வாசிக்க யாழில் பெருமளவு மாணவர்கள் தெரிவு செய்யும்

ஓரே ஒரு முழுமையான ஆங்கிலக்கற்கைநெறி.

புதிய பிரிவுகள் ஆரம்பம்

Batch i - 6/9/2013

Batch ii - 7/9/2013

Batch iii - 9/9/2013

Time 9.30 am.

முதலில் இணையும் 100 மாணவர்களுக்கு Pen drive அல்லது T-Shirt இனை இலவசமாக பெற்றுக்கொள்ளமுடியும்.

சர்வதேசத்தாலும், இலங்கை மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற் கல்வி ஆணைக்குழு (TVEC) ஆலும் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம்

# DMI COMPUTER EDUCATION

| யாழ்ப்பாணம் | நெல்லியடி | சாவகச்சேரி | சுன்னாகம் |
|---|---|---|---|
| No.113. கன்னாதிட்டி வீதி, (சயன்ஸ் ஹோல் அருகாமை) Tel.: 021-222 4403 | M.M.V. வீதி, (மத்திய மகாவித்தியாலயம் முன்பாக) Tel. : 021-226 2470 | No.174, கண்டி வீதி, (HNB வங்கி அருகில்) Tel. : 021-227 0775 | No.130, K.K.S.வீதி, (NSB வங்கி அருகில்) Tel. : 021-224 1970 |

(4606)


## 108 முன்னா...

எதிர்வரும் 9ஆம் திகதி வவுனியா நகர மண்டபத்தில் இதற்கான நிகழ்வு இடம்பெறவுள்ளது.

இறுதிக் கட்ட யுத்தத்தின்போது 12 ஆயிரம் போராளிகள் அரச படைகளிடம் சரணடைந்தனர். அதில் 11 ஆயிரத்து 651 பேர் புனர்வாழ்வின் பின் சமூகத்துடன் இணைக்கப்பட்டுள்ளனர்.

அதன்படி இன்னும் 241 பேர் புனர்வாழ்வு பெற்று வருவதாக புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் அலுவலகம் குறிப்பிட்டுள்ளது.

(செ-11)


# உடனடி வேலைவாய்ப்பு

## யாழ்ப்பாணத்தில்

பதவி : முகாமையாளர், விற்பனை உத்தியோகத்தர்

அனுபவம் : வியாபார சந்தைப்படுத்தல் துறையில் 2 வருடத்திற்கு மேல் அனுபவம் உள்ளவர்களிற்கு முன்னுரிமை

**பின்வரும் இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்**

**0716840786, 0716791744**

(சி-4602)



**தொடர்ந்தும் மேலதிக சேவையில்...**

இலங்கையின் எப்பாகத்திற்கும் குறைந்த செலவில் உங்கள் அன்புக்குரியவர்களுக்கு கடிதங்கள், அன்பளிப்புப் பொருட்கள், உடுபுடைவைகள் மற்றும் எதுவித பார்சல் ஆயினும் மறுநாள் **(24 மணித்தியாலயம்)** உரிய முகவரிக்கு (Door to Door) ஒப்படைக்கப்படும்.

**குறிப்பு:** விசுவமடு, புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு, ஒட்டுசுட்டான், நெடுங்கேணி, மல்லாவி, துணுக்காய், பூநகரி ஆகிய வன்னி மாவட்டங்களுக்கும் எமது சேவை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

WESTERN UNION MONEY TRANSFER

ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பகம்

303, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.

(C-4560) T.P. No.:-021 222 5392


# அரசாங்கப் பெறுகை அறிவித்தல்

## சமூக சேவைகள் திணைக்களம் - வட மாகாணம்

**ஒப்பந்த அடிப்படையில் தினசரி பால் சேவையை பெற்றுக் கொள்ளல் 2013/14**

2013/14 ஆம் ஆண்டு காலப்பகுதிக்கு வட மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தின் கீழ் உள்ள **கைதடி அரச முதியோர் இல்லத்திற்கு** ஒப்பந்த அடிப்படையில் **01.10.2013** தொடக்கம் **30.09.2014** ஆம் திகதி வரையான காலப்பகுதிக்கு தினசரி பால் விநியோக சேவையினை மேற்கொள்வதற்கான பெறுகைகள் கோரப்படுகின்றன.

விருப்பமுள்ள கேள்விதாரர்கள் ஒவ்வொரு பெறுகை பத்திரத்திற்கும் **ரூபா 200** வீதம் பணம் செலுத்தி 19.09.2013 ஆம் திகதி வரை அலுவலக நாட்களில் காலை 9 மணி முதல் 15 மணி வரை எமது திணைக்களத்தில் பெற்றுக் கொள்ளலாம். மேற்படி பெறுகை பத்திரங்கள் யாவும் 23.09.2013 ஆம் திகதி திங்கட்கிழமை 12.30 மணி வரை ஏற்றுக் கொள்ளப்பட்டு 14.30 மணிக்கு திறக்கப்படும்.

பெறுகைகள் உரியவாறு உறைகளில் இடப்பட்டு பெறுகைக் கடிதத்தின் இடதுபக்க மேல் மூலையில் பெறுகையின் விபரம் தெளிவாக எழுதப்பட்டு முடிவுத் திகதிக்கு முன்பாக பதிவுத் தபாலில் அல்லது மூடிய கடித உறையில் இட்டு அலுவலகத்தில் நேடியாக சமர்ப்பிக்குமாறு தயவுடன் கேட்டுக் கொள்கின்றேன்.

பதிவுத் தபாலாயின் **பணிப்பாளர், சமூக சேவைகள் திணைக்களம், வட மாகாணம், கண்டி வீதி, கைதடி.** என்னும் முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும். பெறுகைகளின் தாமதத்திற்கு எம்மால் பொறுப்பேற்றுக் கொள்ளப்படமாட்டாது. அத்துடன் பெறுகைகள் தொடர்பான இறுதித் தீர்மானம் கேள்விச் சபைக்கே உரியது. கேள்விப் பத்திரங்களையும் மேலதிக விபரங்களையும் அலுவலக நேரத்தில் எமது திணைக்களத்தில் பெற்றுக் கொள்ள முடியும். பெறுகைகள் திறக்கப்படும்போது கேள்விதாரர் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதி கலந்து கொள்ள முடியும்.

**ந.இன்பராஜ், பணிப்பாளர்,**
**சமூகசேவைகள் திணைக்களம்,**
**வட மாகாணம்.**

(சி-4606)


# துருக்கி வேலை அனுமதியைப் பெற்றுக் கொள்வதற்குரிய விளக்கம்

(துருக்கி ஐரோப்பிய யூனியனில் உள்ள ஓர் நாடு)

- ஆண், பெண் இருபாலாருக்கும் வெற்றிடங்கள் உள்ளன.

## WORK PERMIT VISA

- புதுப்பித்துக் கொள்ளக்கூடிய இரண்டு வருட வேலை ஒப்பந்தம்
- மாதாந்த சம்பளம் 690 Euro (690 x 180 = 124,200/=)

**வேலை: பொதி செய்தல் (Packing Section)**

- மேலதிக விபரங்களுக்கு நேரில் வரவும்

(வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தில் பதிவு செய்து சட்டரீதியான பயணம்)

- நிபந்தனைகளுக்கு உட்பட்டது.

**முன்பதிவுகளுக்கு மட்டும் : 0214921831, 0214921832**

**அனி இன்டர்நஷனல் எடியுகேஷன் கன்சல்டன்சி சர்விஸ், இல.72, இலுப்பையடிச் சந்தி, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.**


(3378)

# சம்பூர் கைத்தொழில் பேட்டை மூலம் 10 ஆயிரம் இளையோருக்கு வேலை

## பிரதியமைச்சர் முரளிதரன் தெரிவிப்பு

(கொழும்பு)

**சம்பூர் கைத்தொழில்பேட்டை மூலம் அப்பிரதேச மக்களே அதிக நன்மை அடையவுள்ளனர். இதனூடாக 10 ஆயிரம் இளைஞர், யுவதிகளுக்கு தொழில்வாய்ப்பு கிடைக்கவுள்ளது. தமிழ் மக்கள் மீது தமிழ்த்தேசிய கூட்டமைப்பிற்கு உண்மையான பற்று இருந்தால் இவ்வாறான அபிவிருத்திகள் தொடர்பில் தவறான குற்றச்சாட்டுகள் கூறுவதை நிறுத்த வேண்டும் என மீள்குடியேற்ற பிரதி அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் தெரிவித்துள்ளார்.**



பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் உரையாற்றிய அவர், முதலீட்டாளர்களுக்கு வரிச்சலுகை வழங்குவதனூடாகவே அவர்கள் இங்கு முதலிட முன்வருவர். சிங்கப்பூர், மலேசியா போன்ற நாடுகள் முதலீட்டாளர்களுக்கு ஊக்குவிப்பு வழங்கியமையால் அங்கு முதலீடுகள் அதிகரித்து வளர்ச்சி ஏற்பட்டது.

சம்பூர் தொழிற்பேட்டை பாரிய நிலப்பரப்பில் நிர்மாணிக்கப்படவுள்ளது. இதனூடாக அப்பகுதி இளைஞர், யுவதிகள் 10 ஆயிரம் பேருக்கு தொழில்வாய்ப்பு கிடைக்க இருக்கிறது. 10 ஆயிரம் குடும்பங்களின் வாழ்வில் மலர்ச்சி ஏற்படவுள்ளது.

ஆனால், சம்பூர் தொழில் பேட்டை குறித்து எதிர்க்கட்சிகள் தேவையற்ற விமர்சனங்களைச் செய்து வருகின்றன. அபிவிருத்தி என்ற பெயரில் தமிழ் பிரதேசங்களைக் கைப்பற்றுவதாக தமிழ்த்தேசிய கூட்டமைப்பு குற்றஞ்சாட்டி வருகிறது.

தொழிற்பேட்டை அமைக்க வாய்ப்பான உகந்த பகுதி சம்பூர் பகுதி என்பதாலேயே அது தெரிவு செய்யப்பட்டுள்ளது. இறங்குதுறை அமைப்பதற்கு கடலை அண்டிய பகுதி தேவை.

மட்டக்களப்பு மாவட்டம் கடந்த 6 வருட காலத்தில் பாரிய அபிவிருத்தி கண்டு வருகிறது. இங்கு பாரிய மாற்றம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாறான பாரிய முன்னேற்றங்களை ஏற்படுத்தியது தொடர்பில் ஜனாதிபதியின் பெயர் வரலாற்றில் பதியப்படுவது உறுதி.ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சியிலே வீதிப் போக்குவரத்தில் பாரிய வளர்ச்சி மேற்கொள்ளப்பட்டது. ஆனால், எதிர்க்கட்சிகள் தேவையற்ற விமர்சனங்களை மேற்கொள்கின்றன.

சம்பூர் பிரதேசத்திலுள்ள 1272 குடும்பங்களை வேறு இடத்திற்கு மாற்றி வருகிறோம். 342 குடும்பங்கள் முகாம்களில் உள்ளதோடு அவர்களுக்கு சொந்த நிலங்கள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஏனையவர்களுக்கு காணி வழங்கி வீடுகள்கட்டப்பட்டுவருகிறன இந்த அபிவிருத்தியினூடாக சம்பூர் பிரதேச மக்களே அதிகம் நன்மை அடைய உள்ளனர். இலங்கைக்கு வருகை தந்த நவநீதம்பிள்ளையும் கூட எதிர்காலத்தில் இலங்கையில் இடம்பெறவிருக்கும் சிறப்பான மாற்றங்கள் குறித்து உணர்ந்துகொள்வார்.

நாட்டில் இடம்பெறும் முன்னேற்றங்கள் மற்றும் மாற்றங்கள் குறித்து வடக்கு, கிழக்கு பிரதேச மக்களும் உணரத் தொடங்கியுள்ளனர் என்றார். (அ-2)

# கொழும்பு மேல் நீதிமன்றத்தில் மொழிபெயர்ப்புப் பிரிவு

நீதிமன்றங்களில் தமிழ் மொழி மூலம் தாக்கல் செய்யப்படும் வழக்குகளை ஆங்கிலம் அல்லது சிங்கள மொழிகளில் மொழி பெயர்ப்பு செய்வதற்காக கொழும்பு மேல் நீதிமன்றத்தில் மொழிபெயர்ப்பு பிரிவொன்றை பிரதம நீதியரசர் ஜனாதிபதி சட்டத்தரணி மொஹான் பீரிஸ், நீதியமைச்சரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவருமான ரவூப் ஹக்கீம் ஆகியோர் நேற்று முன்தினம் திறந்து வைத்தனர்.

தமிழ் மொழியிலுள்ள வழக்குகள் தொடர்பான அறிக்கைகளை ஆங்கிலம் அல்லது சிங்களம் ஆகியவற்றுக்கு மொழிமாற்றம் செய்வதில் ஏற்படும் தாமதம் மற்றும் சிரமம் காரணமாக சிறைகளில் கைதிகளின் எண்ணிக்கை அதிகரித்திருப்பதாகவும் கண்டறியப் பட்டுள்ளது:

இத்தகைய காரணங்களால் எழும் பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வு கண்டு வழக்கு விசாரணைகளை துரிதமாக நடத்தி முடிப்பதற்கு ஏதுவாக இந்த மொழிபெயர்ப்பு பிரிவு நிறுவப்பட்டுள்ளது. ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நிதியம் இதற்கான அனுசரணையை வழங்கியுள்ளது. (அ-2)


வடமாகாண சபைத் தேர்தல் 2013
யாழ். மாவட்டம்
கே.என்.விந்தன் கனகரத்தினம்(MMC)
(யாழ்.மாநகர சபை உறுப்பினர்)



யாழ். மாவட்ட மக்கள் சேவைக்கு மகத்தான ஒரு மனிதனாக வினைத்திறன் கொண்ட செயல் வீரனாக இருந்து மக்களுக்காக பணியாற்றக் கூடிய ஆற்றல் மிக்க சக்தியாக....
12
இலங்கைத் தமிழரசுக் கட்சி X 12
(E-016)



வட மாகாண சபைத் தேர்தல் – 2013
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு
(இலங்கைத் தமிழரசுக் கட்சி)
யாழ் மாவட்ட வேட்பாளர்
சீ.வீ.கே.சிவஞானம்



பட்டயச் செயலாளர்
ஓய்வுநிலை மாநகர ஆணையாளர்
துணைப் பொதுச்செயலாளர் - இ.த.அ.க
X 8
(E/009)
சலுகைக்கு முடிவும்
உரிமைக்கு விடிவும்!!!








வடமாகாண சபைத் தேர்தல் 2013
கிளிநொச்சி மாவட்டம்
அகிம்சையையும் சகிப்புத் தன்மையையும் மேம்படுத்தும் "யுனேஸ்கோ" விருது பெற்ற இலங்கையின் ஒரே ஒரு அரசியல்வாதி
வீ. ஆனந்தசங்கரி



தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு (இலங்கைத் தமிழரசுக் கட்சி)
X 2
(EC/4956)

# மாகாணசபைத் தேர்தல் 2013
யாழ்ப்பாண மாவட்டம்




"அபிவிருத்தி
சுதந்திரம்
ஜனநாயக உரிமை
என்பவற்றுக்காக
உழைக்கும்..."

## ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி சார்பாக போட்டியிடும் வேட்பாளர்கள்



**அந்தோனிப்பிள்ளை அகஸ்ரின்**
ஓய்வு பெற்ற ஆசிரியர்
வடகடல் நிறுவன கண்காணிப்பாளர்
**3**




**ஐயாத்துரை ஸ்ரீரங்கேஸ்வரன்(ரங்கன்)**
பருத்தித்துறை
பிரதேச சபை உறுப்பினர்
**5**



**சின்னத்துரை தவராஜா**
முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்
முதன்மை வேட்பாளர்
**7**



**அலெக்ஸான்டர் சூசைமுத்து(சார்ள்ஸ்)**
சாவகச்சேரி
நகரசபை உறுப்பினர்
**8**




**கந்தசாமி கமலேந்திரன்(கமல்)**
யாழ் மாவட்ட
பிரதம அமைப்பாளர்
**10**



**கோடீஸ்வரன் றுஷாங்கன்**
ஊடகவியலாளர்
ஊடக ஆய்வாளர்
**12**



**ஞானசக்தி சிறீதரன்**
முன்னாள் வடக்கு கிழக்கு
மாகாணசபை உறுப்பினர்
**13**



**நாகன் கணேசன்**
பனை, தென்னை வள
கூட்டுறவு சமாச தலைவர்
**15**



**பாலகிருஸ்ணன் சிவகுரு (ஜீவன்)**
வலி. மேற்கு
பிரதேச சபை உறுப்பினர்
**17**



**சுந்தரம் திவகலாலா**
முன்னாள் செயலாளர்
கல்வியமைச்சு, வடக்கு கிழக்கு மாகாணம்
**19**

## ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி

# ச.ச. நிலையங்களை மாகாணத்தின் முக்கிய அலகாக மாற்றுவேன்

## ஐ.ம.சு.மு.வேட்பாளர் சுந்தரம் டிவகலாலா



உங்களுடன் உங்கள் இல்லங்களிலும் உங்களின் சன சமூக நிலைய மண்டபங்களிலும் இரவு, பகல் பாராது பல வேளைகளிலும் சமூகத்தின் மேம்பாடு குறித்து நான் கலந்துரையாடியுள்ளேன் என ஈழமக்கள் ஜனநாயக கட்சியின் சார்பில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் வட மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடும் சுந்தரம் டிவகலாலா தெரிவித்துள்ளார். சனசமூக நிலையங்களுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்திலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அக் கடிதத்தில் மிக நீண்ட நாட்களாக எதிர்பார்த்திருந்த சர்ச்சைகள் வாதப்பிரதிவா தங்களுக்குட்பட்ட வடக்கு மாகாண சபைக்கானதேர்தலில் போட்டியிடுகிறேன். உங்களுடன் உங்கள் இல்லங்களில் உங்க ளின் சனசமூக நிலைய மண் டபங்களில் இரவு ,பகல் பாராமல் பல வேளை களிலும் சமூகத்தின் மேம்பாடு குறித்து கலந்துரையாடியுள் ளேன். இதனை உங்கள் சனச மூக நிலையத்தின் மூத்த உறு ப்பினர்கள் மகிழ்வுடன்நினைவு கூறுவார்கள்.

நான்கடமையாற்றியகாலப் பகுதியில் மக்களே எஜமானர்களாக இருந்தார்கள். எனது மக்களிடம்கற்றவைதான்எனது சமூக விடுதலை ஆர்வத்துக்கு உந்துசக்தியாக இருந்தது. மக்களிடம் கற்றவைகளிலிருந்தே மக்களுக்கு சேவையாற்றினேன். நீங்கள் என்னுடன் இருந்து அன்று நாம் நடத்திய தமிழ் இன்பக் கண்காட்சியின் வெற்றியை அனைவரும் கண்டுகளித்தீர்கள்.

சன சமூக நிலையங்கள் கிராம அடிமட்ட ஜனநாயக அமைப்புக்களாகும். சன சமூக நிலையங்கள் அவை சார்ந்த பிரதேசங்களின் அபிவிருத்தி அலகாகச்செயலாற்றும்வலிமை மிக்கவை. இவற்றினை மீளவும் ஒருங்கிணைத்து புனருத்தாரணம் செய்து மாகாண நிர்வாகத்தின் முக்கிய அலகாக மாற்றுவதற்கு நான் பெரிதும் விரும்புகின்றேன்.

இத்த கைய செயற்பாடுகளை முன்னெடுக்கும் நோக்கத்துடனேயே நான் தேர்தல் களத்தில் ஒரு வேட்பாளராக முன்வந்துள்ளேன் என்றுள்ளது. (அ)




# வடக்கில் தமிழரசை நிறுவ ஆணை தாருங்கள்

## த.தே.கூட்டமைப்பு வேட்பாளர் திருலோகமூர்த்தி



தமிழினம் தலை நிமிர்ந்து வாழவும் நல்லதோர் ஆட்சியை ஏற்படுத்தி தமிழன் ஆளவும் வடமாகாண சபை தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குவாக்களித்து தமிழ் அரசு ஒன்றை நிறுவ ஆதரவு தாருங்கள் என கிளிநொச்சி மாவட்ட த.தே.கூட்டமைப்பு வேட்பாளர் க.திருலோகமூர்த்தி தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி விநாயகபுரம் பொதுநோக்கு மண்டபத்தில் இடம்பெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் பிரசார கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

யுத்தத்தை திணித்து தமிழர் வாழ்வில் இருளை ஏற்படுத்தி எமது மக்களை நிர்க்கதியாக்கிய இன்றைய அரசு எந்த முகத்துடன் எங்கள் மக்களிடம் வாக்கு கேட்கிறது.

ஐ.நா. சபையில் இருந்து எமது மக்களை சந்திக்க வந்த நவநீதம்பிள்ளை அம்மையாரை சந்திக்கவிடாது தடுத்த கொடுமையைத்தான் பரந்தனில் கண்டோம். இந்த மக்கள்தமது பிள்ளைகள் எங்கே? உறவுகள் எங்கே? என்று தானே கேட்கின்றனர்.

காணாமற் போன உறவுகளுக்கு அரசுஎன்னபதில்சொல்லப் போகின்றது. இன்று யுத்தத்தால்பாதிக்கப்பட்டுஉறவுகளை இழந்து உடல் ஊனமுற்று நிற்கும் மக்களுக்கு இன்று வரை அரசு எந்தவிதமான நட்ட ஈடுகளையும் வழங்கவில்லை.

வீட்டுத்திட்டம் என்ற போர்வையில் சொற்ப பணத்தை வழங்கியுள்ளது. இதனால் மக்கள் வீட்டுத்திட்டங்களை பூர்த்தி செய்ய முடியாது கடன் சுமையில் தவிக்கின்றனர்.

ஆனால், அரசு எங்கள் மக்களிடம் வாக்கு கேட்கிறது.

எமது வடமாகாண சபையின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆட்சியில் கிளிநொச்சி மாவட்டத்தில் அரச ஊழியர்களுக்கு விடுதி வசதிகளும் வீட்டுத்திட்டங்களும் காணி அற்ற அரச ஊழியர்களுக்கு காணிகளும் வழங்க நடவடிக்கை எடுப்பேன் என அவர் மேலும் தெரிவித்தார். (அ)



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வடமராட்சி பிரதேசத்துக்கான முதலாவது வடமாகாண சபை தேர்தல் பிரசாரக் கூட்டம் அண்மையில் மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றபோது... (படம்:–எஸ்.செல்வதீபன்)



வடமாகாண சபைத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் சார்பில் போட்டியிடும் எம். என். சிராஸின் தேர்தல் பிரசாரக் கூட்டம் அண்மையில் யாழ். நகரப் பகுதியில் இடம்பெற்றபோது...



## இன்று ஒரு தகவல்

# அம்மா பிள்ளைகள்

சிலபேர்குழந்தைகளிடம் பேசும் போது குழந்தை மாதிரியே பேசுவார்கள். அதாவது மழலை மொழியிலேயே பேசுவார்கள். அப்படிப் பேசினால்தான் குழந்தைக்கு பிடிக்கும்–புரியும்–என்பது இவர்களின் எண்ணம்.

ஆனால் அப்படிப் பேசுவது தவறு என்கிறார்கள் ஆராய்ச்சி யாளர்கள்.

நாம் பேசுவதை பார்த்துத்தானே குழந்தைகள் பேசக் கற்றுக் கொள்ளும். நாமே குழந்தை மாதிரி பேசிக் கொண்டிருந்தால் அவர்கள் நல்ல விதமாக பேசக் கற்றுக் கொள்வது எப்படி?

இதனால் குழந்தை பேசக் கற்றுக் கொள்ளும் வேகம் தடைப்படும்.

குறித்த 10 குழந்தைகளிடம் உனக்கு அம்மாவைப் பிடிக்குமா? அப்பாவைப் பிடிக்குமா? என்று கேட்டால் அரைவாசிக் குழந்தைகளுக்கு மேல் அம்மாவைப் பிடிக்கும் என்று தான் சொல்லும்.

குழந்தை தாய் வயிற்றில் ஏழு மாதக் குழந்தையாக இருக்கும் போதே அம்மாவின் குரலைக் கேட்குமாம். தாயின் வயிற்றுக்குள் ஒரு சிறிய 'மைக்' வைத்து ஒலிப்பதிவு செய்து பார்த்திருக்கிறார்கள்.

மற்றவர்கள் பேசுவதை விட அம்மா பேசும் குரல் தான் மிகவும் தெளிவாகக் கேட்கிறதாம்.

ஆக ஒரு குழந்தை ஆரம்பத்திலிருந்தே கேட்கும் குரல் அம்மாவின் குரல். அதனால் தான் அம்மா என்றால் ஒரு தனிப்பாசம். தாயின் பேச்சைக் கேட்டுத் தான் வயிற்றில் இருக்கும் குழந்தை பேசக் கற்றுக் கொள்கிறது. பிறக்கும் போதே நமக்கெல்லாம் தாய் மொழிப்பற்று உண்டு என்று ஆராய்ச்சியாளர்கள் சொல்கிறார்கள்.

பிரெஞ்சு மொழி பேசும் ஒரு குடும்பத்தில் ஆராய்ச்சி நடத்தினார்களாம். பிறந்து நான்கு நாட்கள் ஆவதற்குள் குழந்தை ரஷ்ய மொழியை விட பிரெஞ்சு மொழியை விரும்புகிறது என்பதை தெளிவுபடுத்தியிருக்கிறார்கள்.

எட்டு வயதுக்கு மேல் புதிதாக கற்றுக் கொள்ளும் எந்த மொழியுமே தாய் மொழியை விட கஷ்டமாகத்தான் இருக்குமாம். ஒருகுழந்தை பிறந்து 8 மாதம் ஆனதுமே நாம் பேசும் பேச்சு புரிய ஆரம்பித்து விடும். அதனால் அதன் பின்னரும் சின்னக் குழந்தை மாதிரி உட்கார்ந்து மழலை மொழி பேசிக் கொண்டிருக்காதீர்கள்.

தெளிவாக நல்ல தமிழில் பேசுங்கள். அது புரிந்து கொள்ளும்– கற்றுக் கொள்ளும். அந்த நேரத்திலெல்லாம் நாம் பேசுவதை நாம் பேசுவது மாதிரியே குழந்தை திருப்பிச் சொல்லும். தானே யோசித்துப் பேச 2–3 வருடங்கள் ஆகும்.

ஜான்லாக் என்ற அமெரிக்க விஞ்ஞானி இது பற்றி ஆராய்ச்சி செய்திருக்கிறார். அவர் சொல்கிறார்.

குழந்தை தாயின் வயிற்றில் 7 மாதமாக இருக்கும் பொழுதே பேசக் கற்றுக் கொள்ள ஆரம்பிக்கிறது. விரைவாக பேச ஆரம்பிக்கும் குழந்தை புத்திசாலியாக இருக்கும் என்று சிலர் சொல்லுவதுண்டு.

அதுவும் ஒரு பொய்யான நம்பிக்கைதான் என்கிறார் இந்த ஆராய்ச்சியாளர்.

பிறந்த குழந்தைக்கு அப்பாவை விட ஏன் அம்மாவைப் பிடித்திருக்கிறது? என்ற கேள்விக்கு இவருடைய ஆராய்ச்சி விடை சொல்கிறது.

அப்பா குழந்தைகளிடம் கெட்ட பெயர் வாங்குவதற்கு வேறு பல காரணங்களும் உண்டு.

ஒரு அப்பா தன் பிள்ளையைப் பார்த்து "உங்கள் கணக்கு வாத்தியார் 'Home work' கொடுத்திருப்பதாக சொன்னாயே... அதற்கு நான் ஏதாவது உதவி செய்யவா? அந்தக் கணக்கை நான் செய்து காட்டவா?" என்று கேட்டார்.

"வேணாமப்பா! நானே அதை தப்பாக போட்டுக் கொள்கிறேன்" என்றான் பையன்.

*தென்கச்சி கோ.சுவாமிநாதன்*

# இலங்கைக்கு போதைப்பொருள் கடத்தல்; மாபியா அமைப்புக்கும் தொடர்பு

(கொழும்பு)

இலங்கையில் அண்மையில் கைப்பற்றப்பட்ட 250கிலோ கிராம் பிரவுண் சுகர் ஹெரோயின் போதைப் பொருளுடன் இந்தியாவில் தேடப்பட்டு வரும் பிரபல பாதாள உலக தலைவரும் மும்பாய் தொடர்குண்டு வெடிப்புச் சம்பவத்துடன் தொடர்புடைய தாவூத் இப்ராஹிமின் மாபியா அமைப்புக்கு தொடர்புள்ளதாக தெரிய வந்துள்ளது.

பாகிஸ்தானின் கராச்சி துறைமுகத்தில் இருந்து இலங்கைக்கு கொண்டு செல்லப்பட்ட கொள்கலன் பெட்டியின் உரிமையாளரது பெயரைத் தாவூத் இப்ராஹிமின் அமைப்பு மாற்றியுள்ளதாக புலனாய்வு பிரிவின் விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

தற்போது இந்த கொள்கலன் உரிமையாளராக ஜமால் என்பவர் இருந்த போதும் இதற்கு முன்னர் தாவூத் இப்ராஹிமின் குழுவினர் பாகிஸ்தானைச் சேர்ந்த வேறு ஒருவரின் பெயரை பயன்படுத்தியதாக பாகிஸ்தான் புலனாய்வு பிரிவினர் கண்டுபிடித்துள்ளனர்.

எனினும் இலங்கையில் தற்போது கைது செய்யப்பட்டுள்ள பாகிஸ்தானின் ஜமால் என்பவர் இரண்டு வருடங்களுக்கு முன்னர் இப்படியான கொள்கலன் ஒன்றை இலங்கைக்கு கொண்டு சென்றுள்ளதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

எவ்வாறாயினும் இலங்கைக்கு கொண்டு வரப்பட்ட கொள்கலன் பெட்டியில் பாகிஸ்தான் போதைப் பொருள் தடுப்பு பிரிவினர் பரீட்சித்தனர்என்ற ஸ்டிக்கர் ஒட்டப்பட்டிருந்தது.

எனினும் இந்த ஸ்டிக்கர் பாகிஸ்தான் போதைப்பொருள் தடுப்பு பிரிவினரின் ஸ்டிக்கரா என்பது சந்தேகத்துக்குரியது என இலங்கை விசாரணையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் இந்த ஹெரோயின் வர்த்தகத்தில் மாளிகாவத்தை பகுதிக்கு வழங்கப்பட்ட 20 கிலோகிராம் ஹெரோயினை இரண்டு மாதங்களுக்கு முன்னர் கொல்லப்பட்ட மாமஸ்மி என்ற பாதாள உலக தலைவரே கொள்வனவு செய்துள்ளதாக தெரிய வந்துள்ளது.

மாமஸ்மி கொள்வனவு செய்த ஹெரோயின் போதைப் பொருளில் பல தூள்கள் கலப்படம் செய்யப்பட்டு விநியோகிக்கப்பட்டுள்ளதாக புலனாய்வு பிரிவினரின் விசாரணைகளில் உறுதி ப்படுத்தப்பட்டுள்ளது.

தாவூத் இப்ராஹிம் குழுவினர் உலகிலுள்ள முஸ்லிம்பழைமைவாத அமைப்புக்களுக்கு உதவி வருகின்றனர்.

இந்த அடிப்படையில் இலங்கையில் மாமஸ்மிக்குதாவூத் இப்ராஹிம் குழுவினர் பணம் மற்றும் வேறு வகையான உதவிகளை செய்து வந்துள்ளமையும் கண்டறியப்பட்டுள்ளது.

தாவூத் இப்ராஹிம் குழுவினர் டி கம்பனி என அழைக்கப்படுவதுடன் உலகிலுள்ள மிகப்பெரிய மாபியா அமைப்பு எனவும் கூறப்படுகிறது.

தாவூத் இப்ராஹிம் இந்தியாவின் மும்பாய் தொடர் குண்டு வெடிப்பு உட்பட பல குண்டு வெடிப்புச் சம்பவங்களுடன் சம்பந்தப்பட்டுள்ளார்.

அதேவேளை கிரிக்கெட் சூதாட்டத்திலும் அவர் சம்பந்தப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

இவருக்கு எதிராக ஏற்கனவே சர்வதேச பொலிஸ் (இண்டர் போல்) ஊடாக சிவப்பு அறிவித்தல் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இவரது அமைப்பின் தலைமையகம் சிங்கப்பூரில் இயங்குவதாகவும் தெரியவந்துள்ளது.

அதேவேளை தாவூத் இப்ராஹிமின் மாபியா அமைப்புக்கு சொந்த மான ஆயுதங்கள் மற்றும் ஹெரோயின் களஞ்சியங்கள்பாகிஸ்தானின்பெஷாவர் நகரில் இருப்பதாக பேசப் படுகிறது.

கைது செய்யப்பட்டுள்ள ஜமால் வழங்கியுள்ள தகவல்களின் படி இலங்கையில் இருந்து தப்பிச் சென்றுள்ள சர்தார் என்பவர் இலங்கையில் பல இடங்களுக்கு ஹெரோயினை விநியோகிக்குமாறு அறிவித்திருப்பதாகவும் விசாரணைகளில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக இலங்கை புலனாய்வு பிரிவினர் தெரிவித்துள்ளனர்.(அ–2)

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 40 | 50 | 60 | 40 |
| உருளைக்கிழங்கு | 90 | 120-140 | 100 | 100 |
| பச்சைமிளகாய் | 60 | 60 | 80 | 80 |
| தக்காளி | 40 | 40 | 40 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 50 | 50 | 50 |
| கோவா | 60 | 60 | 80 | 80 |
| கரட் | 60 | 70 | 120 | 120 |
| பூசணி | 20 | 30 | 40 | 40 |
| புடோல் | 20 | 40 | 40 | 50 |
| வாழைக்காய் | 60 | 40 | 60 | 60 |
| சின்ன வெங்காயம் | 150 | 100-140 | 140-160 | 160-200 |
| பெரிய வெங்காயம் | 110 | 120 | 140 | 120 |
| பாகற்காய் | 60 | 40 | 60 | 80 |
| வெண்டிக்காய் | 20 | 30 | 40 | 40 |
| கருணைக் கிழங்கு | 60 | 60 | 80 | 80 |
| பயற்றங்காய் | 40 | 30 | 40 | 50 |
| லீக்ஸ் | 90 | 70 | 100 | 120 |
| பீற்றூட் | 10 | 20 | 40 | 40 |
| கறிமிளகாய் | 60 | 60 | 80 | 80 |
| முருங்கைக்காய் | 40 | 80 | 160 | 100 |
| போஞ்சி | 100 | 120 | 100 | 160 |
| கீரை – 1 பிடி | 10 | 25 | 30 | 25 |
| தேசிக்காய் | 300 | 250 | 350 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 50 | 40 | 40 |
| இராசவள்ளி | 80 | 90 | 120 | 120 |

## இராசி பலன்

*05.09.2013*
*(ஆவணி 20, வியாழக்கிழமை)*
*சூரிய உதயம் காலை 6.03 மணிக்கு*
*அமாவாசை மாலை 5.54 மணி வரை*
*மகம் முற்பகல் 7.56 மணிவரை*
*இராகுகாலம் 1.35–3.05 மணிவரை*
*சுபநேரம் 7.35–9.05 மணிவரை*
*அமாவாசை விரதம்*

**மேடம்** சுய முயற்சிகள் மூலம் சுகம் காண வேண்டிய நாள், பிள்ளைகள் வழியில் பெருமைக்குரிய சம்பவங்கள் இடம்பெறலாம், குல தெய்வ வழிபாட்டில் ஈடுபாடு காட்டுவீர்கள்.

**இடபம்** பணி புரியும் இடத்தில் பெயரும் புகழும் கூடும், முன்னோர் வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், தொலைபேசி வழியில் ஆச்சரியமான தகவல்கள் வந்து சேரலாம்.

**மிதுனம்** பொதுநல ஈடுபாட்டால் புகழ் பெறுவீர்கள், சகோதரர் ஒத்துழைப்பால் பாகப் பிரிவினைகள் சுமூகமாக முடியும், தொழில் முன்னேற்றம் உண்டு, முயற்சிகள் கைகூடும்.

**கடகம்** கொடுத்த வாக்கை காப்பாற்றும் எண்ணம் மேலோங்கும், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், தூரதேசத்து செய்திகள் மகிழ்ச்சி தரும், வருமானம் திருப்தி தரும்.

**சிங்கம்** குடும்பத்தில் பொறுப்புகளும் சுமைகளும் கூடலாம், கற்பனை மிகுதியான நாள், போசன சுகமுண்டு, உஷ்ண சம்பந்தமான ரோகங்கள் ஏற்படலாம், சயன சுகமுண்டு.

**கன்னி** விரதங்களில் நம்பிக்கை கூடும் நாள், சுபசெலவுகள் அதிகரிக்கும், குடும்பத்தில் அனைவரையும் அனுசரித்து செல்ல வேண்டிய நாள், வரம் தரும் தெய்வங்களை வழிபாடு செய்ய வேண்டிய நாள்.

**துலாம்** ஆடம்பரப் பொருட்களில் அதிக விருப்பம் காட்டுவீர்கள், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், போசன சுகமுண்டு, கௌரவமான நாள்.

**விருச்சிகம்** தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், தூர தேசச் செய்திகள் மகிழ்ச்சி தரும், போசன சுகமுண்டு, பொதுநல ஈடுபாடு அதிகரிக்கும், ஆரோக்கியமான நாள்.

**தனுசு** புத்திசாதுரியமாகப் பேசி காரியம் சாதிக்க வேண்டிய நாள், பித்த சம்பந்தமான ரோகங்கள் ஏற்படலாம், திடீர் பயணங்களால் நன்மையுண்டு, ஆன்றோர் சந்திப்புண்டு.

**மகரம்** எடுத்த காரியங்களை முடிப்பதில் சில சிரமங்களை எதிர்கொள்ள வேண்டிவரலாம், குடும்பத்தில் கோபமாக பேசிவிட்டு பின்னர் வருத்தமடைய நேரிடலாம், போசன சுகமுண்டு.

**கும்பம்** சென்ற இடத்தில் செல்வாக்கு மேலோங்கும், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், புதிய தொழில் வாய்ப்புக்கள் தேடிவரலாம், அபூர்வ சந்திப்புண்டு.

**மீனம்** தேக நலன் சீராகும், வருமானம் திருப்தி தரும், காரிய அனுகூலமுண்டு, செய்தொழில் மேன்மையுண்டு, பகைவர்கள் விலகுவர், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர்.

வளவன்

## தேவார பண்ணிசை பயிற்சி வகுப்பு

அகில இலங்கைத் திருமுறை மன்றத்தால் நடத்தப்படும் தேவாரப் பண்ணிசைப் பயிற்சி வகுப்புக்கள் ஒவ்வொரு சனி, ஞாயிறு கிழமைகளில் பிற்பகல் 3 மணி முதல் 4.30 மணி வரை யாழ். இந்து மகளிர் கல்லூரியில் இடம் பெற்று வருகின்றன. .

இலவசமாக வழங்கப்படும் இப் பயிற்சியில் ஆண், பெண் இருபாலாரும் கலந்து கொள்ள முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-5)

# தேர்தல்களை நடத்துவதால் மட்டும் சிறந்த தலைவராகிவிட முடியாது

### ரவி எம்.பி.தெரிவிப்பு

(கொழும்பு)

தேர்தல்களை நடத்துவதால் மாத்திரம் ஒருவர் சிறந்த தலைவராகவோ அல்லது அந்த நாடு ஜனநாயகம் மிக்க நாடாகவோ அமைந்துவிடப் போவதில்லை.

சர்வாதிகாரிகளான ஹிட்லர் மற்றும் சிம்பாவேயின் றொபேட் மொஹபே ஆகியோரும்கூட தேர்தல்களை நடத்தியிருக்கின்றனர். அந்த பாணியில்தான் இலங்கையும் உள்ளது என்று ஐக்கிய தேசியக்கட்சியின் கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற அமர்வின் போது, ஏற்றுமதிகள் இறக்குமதிகள் கட்டளைச் சட்டத்தின் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து கூறுகையில்,

இந்நாட்டில் இளைஞர்களை இல்லாதொழிக்கும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன. மதுபான உற்பத்திக்கான எதனோல் கடத்தல், கொள்கலன்களில் ஹெரோயின் கடத்தல் என்பதெல்லாம் இதன் வெளிப்பாடுதான். இவற்றை கொண்டு வருபவர்கள் யாராக இருந்தாலும் அவர்களுக்கு மரண தண்டனை விதிக்க வேண்டும்.

எதனோல், ஹெரோயின் கடத்தல் தொடர்பில் சபையில் விவாதமொன்று நடத்தப்பட வேண்டும். அதற்கு எமக்கு அனுமதி தர வேண்டும்.

தேர்தல்களை நடத்துவதால் மட்டும் ஒருவர் சிறந்த தலைவராகவோ அல்லது அந்நாடு ஜனநாயகம் மிக்க நாடாகவோ இருந்துவிட முடியாது. சர்வாதிகாரிகள் ஹிட்லர் , முகாபே போன்றவர்களும் தேர்தல்களை நடத்தியவர்கள்தான். தேர் தல்களை நடத்தினால் மட்டும் அது ஜனநாயகமாகிவிடாது. இன்று அந்த நிலைதான் இலங்கையிலும் உள்ளது.

நாய்களுக்கு திருமணம் செய்து வைத்து அவற்றை தேனிலவுக்கு அனுப்புவதுதான் இன்று மஹிந்த சிந்தனையாகிவிட்டது. இவைதான் இன்று இலங்கை ஆசியாவின் ஆச்சரியமாக மாறுவதற்கான அதிசயங்கள் என்றார். (அ-2)

# நவிபிள்ளை அம்மையாரை பான் கீ மூன் விசாரிக்க வேண்டும்

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளையின் செயற்பாடுகள் தொடர்பில் ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ மூன் விசாரணை நடத்த வேண்டும்.

இவ்வாறு வெகுஜன ஊடகத்துறை அமைச்சின் கண்காணிப்பு பாராளுமன்ற உறுப்பினர் ஏ.எக்ஸ்.எம். அஸ்வர் தெரிவித்தார்.

இலங்கை வந்து சென்றிருக்கும் நவநீதம்பிள்ளை பக்கச்சார்பாக செயற்பட்டிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இறக்குமதி, ஏற்றுமதி சட்டத்திருத்தம் மற்றும் செயல் நுணுக்க அபிவிருத்தி கருத்திட்ட சட்டத்தின் கீழான கட்டளை திருத்தம் மீதான பாராளுமன்ற விவாதத்தில் நேற்று முன்தினம் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கொண்டவாறு கூறினார்.

தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

இலங்கைக்கு விஜயம் மேற்கொண்ட நவநீதம்பிள்ளைக்கு காத்தான்குடி, அறந்தலாவ, அனிஞ் சிப் பொத்தானை ஆகிய இடங்களுக்குச்சென்று புலிகளால்மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிக ளைப் பார்வையிட பாதை தெரியவில்லையா? வடக்கிலிருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லிம் மக்கள் பற்றி அவர் கவனம் செலுத்தவில்லை. இவ்வாறு பக்கச் சார்பான முறையில் செயற்படும் இவர் எவ்வாறு இலங்கை தொடர்பில் பக்கச் சார்பற்ற அறிக்கையை முன்வைப்பார்.

இவரின் செயற்பாடுகள் குறித்து விசாரணை நடத்த வேண்டுமென ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ மூனிடம் கேட்டுக் கொள்கிறேன். நவநீதம்பிள்ளை இன்னும் சிறுபிள்ளை அல்ல வளர்ந்தவர் என்பதை நான் அவருக்கு நினைவுபடுத்த விரும்புகின்றேன்.

வடக்கில் தேர்தல்களை நடத்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச எடுத்திருக்கும் நடவடிக்கை ஜனநாயகத்தை நிலை நாட்டும் அரசின் கொள்கைக்கு கிடைத்த வெற்றியாகும் என்றார். (அ-2)

# நவிபிள்ளையை சந்தித்தவர்களுக்கு பாதிப்பு ஏற்படாது–அமைச்சர் பீரிஸ்

(கொழும்பு)

கடந்தவாரம் இலங்கைக்கு விஜ யம் செய்திருந்த ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளையை சந்தித்தவர் களுக்கு எதிரான நடவடிக்கைகள் எதுவும் இடம்பெறாது என இலங்கை அரசாங்கம் உத்தரவாதம் அளித் துள்ளது.

இலங்கை விஜயத்தை முடித்துக் கொண்ட தினத்தன்று கொழும்பில் ஊடகவியலாளர்களை சந்தித்த நவி பிள்ளை, தன்னை சந்தித்தவர்கள் அச்சுறுத்தப்பட்டுள்ளதாக கூறியிருந்தார்.

லண்டனில் கடந்த திங்கட்கிழமை ஊடகவியலாளர் சந்திப்பொன்றை நடத்திய இலங்கை வெளியுறவு அமைச்சர் ஜீ.எல்.பீரிஸிடம் தமிழோசை சேவை இதுபற்றி கேள்வி எழுப்பியது.

நவிபிள்ளை தனது முறைப் பாடுகளை அரசாங்கத்திடம் உத்தி யோகபூர்வமாக முன்வைக்காவிட் டாலும் அவ்வாறு யாரும் அச்சுறுத்தப்பட்டுள்ளார்களா? என்று விசா ரிக்க நடவடிக்கை எடுப்பதாக ஜீ.எல். பீரிஸ் கூறினார்.

இலங்கை தொடர்பில் நவி பிள்ளை கொழும்பில் வெளியிட்ட கருத்துக்கள் பக்கச்சார்பானவை என்றும் அவர் தெரிவித்தார்.

இலங்கை எதேச்சதிகார பாதை யில் செல்வதாக நவிபிள்ளை கூறி யுள்ளமை அடிப்படையற்ற குற்றச் சாட்டு என்றும் அமைச்சர் கூறினார். (அ-2)















# சிறுவர் அரங்கம்

567

## முட்டா...! குட்டா...!



முல்லைக் காட்டில் முட்டா, குட்டா என இரண்டு குரங்குகள் இருந்தன. மற்ற குரங்குகள் போல இல்லாமல் இந்த இரண்டும் சரியான சோம்பேறிகள். குரங்குகள் கூட்டமாக பழங்கள் தேடி காடு முழுவதும் சுற்றித் திரியும். ஆனால், இவை இரண்டும் ஏதாவது மரத்தில் ஜாலியாக படுத்து நாள் முழுக்க உறங்கும். "அலைஞ்சு திரிஞ்சு மரம் ஏறி இறங்கினால் கால் வலிக்கும். வெயில் வேற அதிகமாக இருக்கு. யார் போய் காடெல்லாம் சுத்துறது" என்று சாக்கு போக்கு சொல்லிக் கொண்டு எப்போதும் ஒரேமரத்தில் உறங்கிக்கொண்ருந்தன.


ஆனால், அந்த இரண்டு குரங்குகளுக்கும் மூன்று வேளையும் பசிக்குமே...என்ன செய்வது? யார் வீட்டிலாவது திருடவேண்டியதுதான். அப்படித்தான் ஒருநாள் யானையாரின் வீட்டில் தம் கைவரிசையைக்காட்டின. யானையார், வீட்டில் தன்

### பஞ்சதந்திரக் கதைகள்

குட்டிகளுக்காக சமைத்து வைத்திருந்த சோளப்பொரி உருண்டையை திருடி உண்டன. வீட்டில் இருந்த பாத்திரங்களையும் போட்டு உடைத்துவிட்டு ஓடிச்சென்று விட்டன.

மாலைநேரம் யானையாரின் குட்டிகள் வெளியே விளையாடிவிட்டு வீட்டிற்கு வந்து பார்த்தன. வீடே அலங்கோலமாக கிடந்தது. சாப்பாடும் இல்லை. யானையார் வந்துபார்த்து அதிர்ச்சி அடைந்தார். உடனே நேராக சிங்கராஜாவிடம் சென்று புகார் கொடுத்தார். "இதை நான் பார்த்துக்கொள்கிறேன். நீங்கள் நிம்மதியாக போய்வாருங்கள் " என சிங்கராஜாகூறினார். நரியார் நந்து துப்பறிவதில் பலே





கில்லாடி. முல்லைக்காட்டில் யார் தப்பு செய்தாலும் அதைத் துப்பறிந்து கண்டு பிடித்து சரியான தண்டனையை பெற்றுத்தருவார் நம் நரியார் நந்து. அதனால் யானையார் வீட்டில் திருடிய திருடனையும் கண்டுபிடிக்கும் பொறுப்பும் நரியாரிடம் தரப்பட்டது.

நரியார் நந்து நேராக யானையாரின் வீட்டிற்கு சென்றார். வீட்டை சுற்றிச் சுற்றிப்பார்த்தார். யானையாரின் குட்டிகளை அழைத்து விசாரித்தார். தன்னுடைய பூதக்கண்ணாடியால் வீட்டிற்கு உள்ளே சென்று சோதனை செய்தார். சாப்பாடு இருந்த இடம், பாத்திரங்கள் கீழே விழுந்த இடம் என எல்லா இடங்களையும் ஒன்றுவிடாமல் பார்த்தார்.

அங்கே குரங்குகள் வந்து போனதற்கான கால் தடங்கள் இருப்பதைக் கண்டார். அது இரண்டு வெவ்வேறு குரங்குகளின் கால்தடங்கள். நேராக சிங்கராஜாவிடம் சென்று "வணக்கம்! சிங்கராஜா... யானையார் வீட்டில் பார்த்தில் இரண்டு குரங்குகள் தான் இந்த வேலையை செய்திருப்பதாகத் தெரிகிறது. அந்தக் குரங்குகள் இரண்டு குட்டிகளாக இருக்கவேண்டும். காட்டிலிருக்கும் அனைத்து குரங்குக்குட்டிகளையும் வரச்சொல்லுங்க! நான் விசாரிக்கணும்" என்றார்.

"குட்டிகள் என்றால் ஏகப்பட்டது இருக்குமே. எப்படி அந்த இரண்டு குட்டிகளைக் கண்டு பிடிக்கப்போறீங்க நரியாரே?" என்று கேட்டார் சிங்கராஜா. "அதற்கு ஒரு சூப்பர் ஐடியாவைத் தருகிறேன். மதியம் பாருங்க என்ன நடக்குதுன்னு" என்று சிரித்தார் நரியார் நந்து. அனைத்து குரங்குகளும் வரவழைக்கப்பட்டன. வரிசையாக நிற்கவைக்கப்பட்டன.

"குரங்குகுட்டீஸ் அனைவருக்கும் வணக்கம். உங்களில் யாரோ இரண்டு பேர் யானையார் வீட்டில் திருடிவிட்டார்கள். அதுயார் என்று கண்டு பிடிக்கவே உங்களை இங்கே வரவழைத்தேன்" என்றார் நரியார். முட்டாவுக்கும் குட்டாவுக்கும் பயமாகிவிட்டது.


"ஆஹா இவரு கில்லாடியாச்சே கண்டு பிடிச்சிட்டாரா... மாட்டிகிட்டோம் போலிருக்கே என பயந்தபடி நின்றனர். ஒவ்வொருவராக அருகில் சென்று பார்த்தார் நம்ம நரியார் நந்து. மீண்டும் வெளியே வந்து "உங்களில் யார் திருடியவர் என கண்டு பிடித்து விட்டேன்.


அந்த இரண்டு திருடர்களும் யானையார் வீட்டில் சோளப்பொரி உருண்டையை சாப்பிட்டு விட்டு வாயைத் துடைக்காமல் இருக்கின்றனர். அவர்களது வாயில் ஒட்டியிருந்த சோளப் பொரிகளைப் பார்த்து நானே கண்டுபிடித்து விட்டேன் என்று சொன்னார்."

உடனே முட்டாவும், குட்டாவும் அவசரமாக வாயைத் துடைத்துக் கொண்டன. ஆனால், வாயில் எதுவுமே இல்லை. அப்போதுதான் இரண்டு குட்டிகளுக்கும் நரியாரின் தந்திரம் புரிந்தது. நரியார்நந்து வேண்டுமென்றே திருடனைக் கண்டுபிடிப்பதற்காகத்தான் அப்படிச் சொல்லியிருக்கிறார்.

அவசரப்பட்டு வாயைத் துடைத்து மாட்டிக் கொண்டோமே என நினைத்த முட்டாவும் குட்டாவும் தப்பியோட முயன்றன. அருகிலிருந்த மரத்திற்கு தாவ நினைத்தன.







"முட்டா... குட்டா:.. இரண்டு பேரையும் பிடியுங்கள்" என நரியார் நந்து உத்தரவிட ,கரடியார் பாய்ந்து சென்று தப்பி ஓட முயன்ற முட்டா, குட்டா இருவரையும் பிடித்தார்

சிங்கராஜா, "முட்டா, குட்டா உங்கள் இரவரையும் குட்டிப்பையன்களாக இருப்பதால் இந்த முறை மன்னித்து விடுகிறேன். இனிமேல் திருடக்கூடாது மீறித் திருடினால் உங்களுக்கு கடுமையான தண்டனை கொடுப்பேன்" என்றார்.

"சிங்கராஜா எங்களை மன்னித்துவிடுங்கள் இனி மேல் திருடமாட்டோம்" என மனம் வருந்தி மன்னிப்பு கேட்டனர் முட்டாவும், குட்டாவும். ஆனால், சிங்கராஜா அவர்களிடம், தவறு செய்தால் நிச்சயம் தண்டனை அனுபவிக்கவேண்டும்" எனக்கூறி "இரண்டு மாதங்கள் நீங்கள் இருவரும் கிணற்றில் தண்டனை அனு பவியுங்கள் என ஆணையிட்டார். சமயோசிதமாக செயல்பட்டு திருடர்களைப் பிடித்துக் கொடுத்த நரியார் நந்துவை அனைவரும் பாராட்டினர்.

*அடுத்தவர் பொருளைத் திருட நினைத்தால் நிச்சயம் தண்டனை கிடைக்கும்.*

# ஐக்கிய நாடுகள் சபையின் தீர்மானத்திற்கு மாறாக இலங்கை செயற்படுகிறது

## கம்யூனிஸ்ட் கூட்டத்தில் கண்டனம்

(சென்னை)

**ஐ.நா.சபையின் மனித உரிமைகள் ஆணையத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு முரணாக நடந்து கொள்ளும் இலங்கையை வன்மையாக கண்டிக்கிறோம் என மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் மாநிலக்குழு கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற் றப்பட்டுள்ளது.**

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலக் குழுக் கூட்டம் நேற்றுமுன்தினம் திருச்சியில் மாநில செயற்குழு உறுப்பினர் எஸ். நூர்முகமது தலைமையில் நடைபெற்றது.

இக் கூட்டத்தில், இலங்கை அரசு 50 ஆண்டுகளுக்கு மேலாக நீடித்து வரும் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண எவ்வித முயற்சியையும் மேற்கொள்ள மறுத்து வருகிறது.

அரசியல் தீர்வை முன்வைப்பதற்குப் பதிலாக, அதை மறுக்கும் வகையில் 13 ஆவது சட்ட திருத்தத்தை நீர்த்துப் போகச் செய்யும் முயற்சிகளில் ஈடுபட்டும் வருகிறது.

இந்நிலையில் ஐக்கிய நாடுகள் சபை மனித உரிமை ஆணையத்தின் குழுவின் நவநீதம்பிள்ளை இலங்கை அரசு சர்வாதிகாரத்தை நோக்கி நகர்கிறது என்று குறிப்பிட்டிருக்கிறார்.

இவ்வாண்டு பங்குனியில் ஐ.நா. சபையின் மனித உரிமைகள் ஆணையத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்குமாறாக இலங்கை அரசாங்கம் நடந்து கொள்கிறது என்பதையே இது வெளிப்படுத்துகிறது.

இலங்கை அரசாங்கத்தின் இந்தப் போக்கை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலக்குழு வன்மையாகக் கண்டிக்கிறது.

இலங்கைத் தமிழ் மக்களின் வாழ்வாதாரம் மற்றும் ஜனநாயக உரிமைகளைப் பாதுகாக்க ஐ.நா. மனித உரிமை ஆணையம் நிறைவேற்றிய தீர்மானத்தை அமுலாக்க இலங்கை அரசை மத்திய அரசு நிர்ப்பந்திக்க வேண்டுமென மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலக் குழு வலியுறுத்துகிறது. (அ-2)

## 'இணுவில் ஒலி' சஞ்சிகை வெளியீடு

(யாழ்ப்பாணம்)

**இணுவில் ஒலி** இருமாத சஞ்சிகையின் புரட்டாதி, ஐப்பசி மாதத்துக்கான பிரசுரம் வெளிவந்துள்ளது.

லண்டன் சிறப்பிதழாக வெளிவந்துள்ள இச் சஞ்சிகையில் கட்டுரை, இலக்கியம்,கவிதை, சிறுகதை, நேர்காணல் மற்றும் மாணவர்களுக்கான படைப்புக்கள், லண்டன் மாநகர் தொடர்பான தகவல்கள், அறிவியல், வர லாற்றுத் தகவல்கள் என்பன இடம் பெற்றுள்ளன. (அ-5)

# சுபீட்சமான அரசியல் அணுகுமுறையையே பின்பற்றி வருகின்றோம்– சந்திரகுமார் எம்.பி.

(கிளிநொச்சி)

வடமாகாணசபைத் தேர்தலில் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி வெற்றி பெறத்தவறின் மக்கள் தோற்றுவிடுவார்கள் என பாராளுமன்ற உறுப்பினரும் பாராளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான மு.சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்களின் எதிர்காலத்திற்கு நிலையான அடித்தளமிடக்கூடிய கல்வித்துறையை வளர்ப்பதற்கான செயற்பாடுகள் துரிதப்படுத்தப்பட்டுள்ள நிலையில், குறிப்பிடத்தக்க முன்னேற்றமும் எட்டப்பட்டுள்ளது.

அத்தோடு பிரதேசங்களின் கட்டுமானங்களும் தொழிற்றுறைகளும் மேம்பட்டுவருகின்றன. இவ்வாறு ஏற்படுத்தப்பட்டுள்ள மாற்றங்கள் அனைத்தும் ஒரு யுத்தமற்ற இயல்புச் சூழலைத் தளமாக கொண்டே ஏற்படுத்தப்பட்டுள்ளன. இருப்பி னும் இவை மட்டும் எமது மக்களுக்கு போதுமானதாக இல்லை.

இந்நிலைமை தொடர்ந்தும் முன்னேறிச் செல்ல வேண்டும்.

ஏற்படுத்தப்பட்டுவரும் அபிவிருத்தியின் பயன்களை பெறக்கூடிய வகையில் பொருளாதார வருமான மார்க்கங்களும் மேம்படுத்தப்பட வேண்டும்

குடும்பங்களின் சுமைகளை சுமக்க நிர்ப்பந்திக்கப்பட்டிருக்கும் இளையதலைமுறையினருக்குவேலை வாய்ப்புக்கள் வழங்கப்பட வேண்டும். எனவே, மக்களின் மேம்பாட்டுக்கான சூழல் தொடர்ந்தும் தக்கவைக்கப்பட வேண்டும். தவறின் நடைபெற்று வரும் இம் முன்னேற்றகரமான செயற்பாடுகள் அனைத்தும் தடைப்படுவதற்கான வாய்ப்புக்களே உருவாகும்.

எமது மக்களின் அரசியல் தீர்வு சார்ந்த எண்ணங்களுக்கு நாம் மதிப்பளிக்கின்றோம். அதற்காக நாம் எமது மக்களுக்கு எவ்வித ஆபத்துக்களையும் விளைவிக்காத சுபீட்சமான அரசியல் அணுகு முறையையே பின்பற்றுகின்றோம். அதனால் அது சரணாகதி அரசியல் அல்ல. அது எமது மக்களுக்கு அமைதியான நிரந்தர அர சியல் தீர்வை பெற்றுத்தரக் கூடிய மதிநுட்பமான அரசியல் அணுகு முறையாகும் என்றார். (அ-2)

## இசை நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் முருகன் ஆலய உற்சவ காலத்தை முன்னிட்டு நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீனத்தால் நடத்தப்படும் தீர்த்தோற்சவ விழா விசேட இசை நிகழ்ச்சிகள் இன்று வியாழக் கிழமை முற்பகல் 8.30 மணி முதல் பிற்பகல் 3 மணிவரை நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனக்கலா மண்டபத்தில் நடைபெறவுள்ளன. (அ-5)

## நல்லூர் உற்சவங்கள் நேரடி அஞ்சல்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கந்தசுவாமி ஆலய தீர்தோற்சவம், பூங்காவனம் ஆகிய சிறப்பு உற்சவ நிகழ்வுகள் இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபன யாழ். ஒலிபரப்பு சேவையூடாக நேரடி ஒலிபரப்பு செய்யப்படவுள்ளன.

இந் நேரடி ஒலிபரப்பை மதுரகவி காரைஎம்.பி.அருளானந்தம் தொகுத்து வழங்கவுள்ளார். (அ-5)

# நல்லூர் கந்தனின் இரத பவனி காட்சிகள்



படங்கள் : எஸ்.ஆர்.கரன்

# என்ன சொல்லப்போகிறார்...?



**மே 2009,** இனப்படுகொலை நடத்தி முடிக்கப்பட்டு மிகக் குறுகிய காலத்துக்குள் இலங்கைக்கு விஜயம் செய்த ஐ.நா பொதுச் செயலர் பான் கீ மூன் என்ன சொன்னார்? சர்வதேச சுயாதீன போர்க்குற்ற விசாரணை ஒன்று தேவை என்றாரா? இல்ல வேயில்லை. நாட்டில் நல்லிணக்கத்தை உருவாக் குங்கள் என்று கூறினார். நடந்தது நல்ல படியாக நடந்தது என்பது போலத் தான், அவரின் ஊடக நேர்காணல்கள் அமைந்திருந்தன.வவுனியா வதைமுகாம் களுக்கும் சென்று பார்வையிட்ட பான் கீ மூன், அரசை பாராட்டிவிட்டே சென் றார்.

சர்வதேச மனித உரிமைச் சங்கங் களின் தொல்லை தாங்க முடியாமல், மூவரடங்கிய நிபுணர் குழுவொன்றை வழமைபோல் அமைத்து நீண்ட அறி க்கை ஒன்றினையும் வெளியிட்டார்.

அதனை மனித உரிமைப் பேரவை யில் சமர்ப்பிக்காமல், நீண்டகாலமாக இழுத்தடிப்புச் செய்தார் பொதுச் செயலாளர் பான் கீ மூன்.

அறிக்கைக்கு என்ன நடந்தது? என்கிற கேள்வி பல மட்டங்களில் இருந்து எழுந்தது. அதனை சமாளிக்க ஒருவாறாக, பேரவையிடம் அதன் நகலை சமர்ப்பித்தது செயலாளர் நாயகத்தின் அலுவலகம்.

இன்றுவரை அந்த நிபுணர் குழு வின் அறிக்கை குறித்து எவருமே பேச விரும்பாத நிலையில், சார்ல்ஸ் பெற்றியின் உள்ளக அறிக்கை ஐ.நா. சபையின் மீது கடுமையான குற்றச் சாட்டினை முன்வைத்தது.

இனப்படுகொலை நிகழ்ந்த போது ஐ.ந. பொதுச் செயலாளரின் அலு வலகம், வேண்டுமென்றே அசமந்த மாக இருந்ததா? அல்லது அதன் மேல் மட்ட அதிகாரிகள், சில வெளிநாட்டு இராஜதந்திர அழுத்தங்களுக்கு அடி பணிந்து விட்டார்களா என்கின்ற சந் தேகத்தை பெற்றியின் அறிக்கை வெளிப்படுப்படுத்தியது. இவையெல் லாவற்றையும் கடந்து இப்போது ஐ.நா. மனித உரிமைப் பேரவையின்



ஆணையாளர் நவநீதம்பிள்ளை இலங்கைக்கு வந்து சென்றுள்ளார்.

ஐ.நா.சபை மீதான, இழந்துபோன நம்பகத் தன்மையை தூக்கி நிமிர்த்த நவநீதம்பிள்ளை முயற்சிப்பாரா என் கிற கேள்வியும் இங்கு எழுகிறது.

நவநீதம்பிள்ளை இலங்கைக்கு விஜ யம் செய்வதற்கு முன்பாக, ஒரு முக் கிய கேள்வி ஒன்றினை அவரது அலு வலகம் நோக்கி தொடுத்துள்ளார். பாது காப்புச் செயலாளர் கோத்தபாய ராஜ பக்ச.

நிபுணர்குழு அறிக்கையில் சொல் லப்பட்ட 40 ஆயிரம் பேர் விவகாரமே அச்சுறுத்திக் கொண்டிருக்கிறது.

ஆகவேதான், அந்த 40 ஆயிரம் பேர் விவகாரத்தை வலுவிழக்கச் செய்வ தற்கு அதற்கான ஆதாரங்களை முன் வையுங்கள் என்று நவநீதம் பிள்ளை யின் அலுவலகத்தை நோக்கி கோத்த பாய ராஜபக்ச சவால்விடத் தொடங்கி யுள்ளார்.

பாதுகாப்புச் செயலாளரின் இந் தத் தலைபோகும் கேள்வி, ஊடகவிய லாளர் சந்திப்பின்போது எழுப்பப் படுமென்று எதிர்பார்க்கலாம்.

அதேவேளை, இந்தக் கேள்விக்கு நவநீதம்பிள்ளை என்ன பதிலைக் கூறப் போகிறார் என்பதை தமிழ் மக் கள் ஆவலோடு எதிர்பார்க்கின்றார்கள்.

சாட்சிகளுக்கு பாதுகாப்பு உத்தர வாதம் வழங்கி, சுயாதீன சர்வதேச விசாரணை ஒன்றினை மேற்கொள்ள அனுமதித்தால்; கோத்தபாய ராஜபக்ச வின் சந்தேகங்கள் நிவர்த்தியாகும் என்று நவநீதம்பிள்ளை சொல்வார?

அதனைவிடுத்து, அமெரிக்கத் தீர் மானத்தில் சுட்டிக்காட்டப்பட்டது போல், வடமாகாணசபைத் தேர்தலை அரசு அறி வித்துவிட்டது. நல்லிணக்க ஆணைக் குழுப் பரிந்துரைகளை நிறைவேற்ற விசாரணைக் குழுக்களை அமைத்துவிட் டது. ஆகவே, எல்லாமே சுமுகமாக நடக்கிறது என்கிற தொனியில், நவநீதம் பிள்ளை அறிக்கை விட்டுத் தப்பித்து விடுவாரோ என்ற சந்தேகமும் ஏற்படு கிறது.

இவை தவிர, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை அச்சுறுத்தும் வகை யில், அரச தரப்பிலிருந்து போர்க் குற்றச்சாட்டு முன்வைக்கப்படுவதை கவனிக்க வேண்டும். விடுதலைப் புலி களோடு கூட்டமைப்பு இணைந்து செயற் பட்ட பல ஆதாரங்கள் தம்மிடம் இருப் பதாகவும், அதனை வைத்து கூட்டமைப் பின் மீது போர்க்குற்றச்சாட்டினைச் சுமத்த முடியுமென்று பேரினவாதி கள் கூற ஆரம்பித்துள்ளனர்.

நவநீதம்பிள்ளையிடம் முறைப் பாடுகளையும் தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பினர் முன்வைக்காமல் தடுப்ப தற்கு, இவ்வகையான வெருட்டல்களை அரச தரப்பு பிரயோகிக்கும் என்பதை புரிந்துகொள்வது கடினமான விடய மல்ல.

தமது ஆட்சியதிகாரங்களைக் காப் பாற்றிக் கொள்வதற்கு சகல வழி முறைகளையும் ஒடுக்கு முறையாளர் கள் பயன்படுத்துவார்கள் என்பது, வரலாறுகள் எமக்கு கற்றுக் கொடுத்த பாடங்கள்.

மாகாணசபைகள், தனிநாடாக மாறும் என்று அப்பட்டமான பொய் கள் அவிழ்த்து விடப்படுகின்றன.

அது அதன் நலனுக்கு உகந்ததாக வும் இருக்கிறது. திரும்பத் திரும்ப அப்பொய்களைச் சொல்வதன் ஊடாக, தனது இன அழிப்புச் செயற்பாடு களை மறைத்துவிடலாம் என்று நம்பு கிறது அரசு.

தான் கூறும் பொய்களை, தானே நம்புவது போன்றதொரு தோற்றப்பாட் டினை முதலில் உருவாக்க வேண்டும். இல்லாவிட்டால், அப்பொய்கள் மக் கள் மத்தியில் எடுபடாமல் போய்விடும்.

இவ்வாறான உளவியல் சார்ந்த அணுகுமுறையை சிங்கள மக்கள் மத்தியில் ஆட்சியாளர்கள் பிரயோ கித்தார்கள். அதில் முழுமையான வெற்றியையும் பெற்றுவிட்டார்கள்.

இதேவிதமான அணுகுமுறையை



சர்வதேச நாடுகள் மத்தியில் பிரயோ கிக்கும் முயற்சியில் அரசு ஈடுபட்டா லும் அவை ஓரளவுக்கு தோற்றுப்போன முற்சிகளாகவே மாறிவிட்டன.

இன்னமும் புலம்பெயர் அமைப்பு களினூடாக விடுதலைப்புலிகள் இயங்குகின்றார்கள் என்று பரப்புரை செய்து பார்த்தார்கள். புலிகள் கேட்ட தையே கூட்டமைப்பும் கேட்கிறது என்கிறார்கள்.

அதைவிட ஒருபடி கீழிறங்கி, 13 வது திருத்தச் சட்டத்தை நடைமுறைப் படுத்தினால், அது தமிழ் ஈழத்திற்கான பாதையை திறந்துவிடும் என்று, இந் தியாவினையும் அமெரிக்காவினையும் நோக்கி எச்சரித்தார்கள். ஆகவே, இந்த அச்சுறுத்தல்களும், அறிவுரைகளும் ஒரு சிறு அசைவினையும் இந்தப்பிராந் திய நலன் விரும்பும் வல்லரசாளர்கள் மத்தியில் உருவாக்கியதாகத் தெரிய வில்லை.

ஆகவேதான், அவசர அவசரமாக காணாமல் போகடிக்கப்பட்ட மக்கள் குறித்து விசாரணை செய்ய, மூவரடங் கிய விசாரணைக் குழுவொன்றினை ஜனாதிபதி அமைத்துள்ளார். இரண்டு மூன்று நாட்களுக்கு முன்பாகவே, இந்த ஆணைக்குழு உரு வாக்கம் பெற்றது.

அதேபோல, பொலிஸ் துறையை, பாதுகாப்புத் துறையிலிருந்து பிரித் தெடுத்து, சட்டம் ஒழுங்கு என்கிற அமைச்சின் கீழ் ஜனாதிபதி கொண்டு வந்துள்ளார். அதற்கு அவரே அமைச்



சர் அதன் செயலாளர் ஒரு முன்னாள் இராணுவ உயரதிகாரி.

இதுவும் நல்லணக்க ஆணைக் குழு வின் பரிந்துரையில் சுட்டிக்காட்டப் பட்ட விடயம்தான்.

சிவில் நிர்வாகத்தில் இராணுவத் தின் தலையீடு இருக்கக்கூடாது என் பதை கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கை வலியுறுத்தியிருந்தது குறிப் பிடத்தக்கது. ஆகவே, நவநீதம்பிள் ளையின் வருகையை ஒட்டி சந்திரிகா பண்டாரநாயக்காவால் ஒன்றிணைக் கப்பட்ட இந்த நிர்வாக முறைமை, மீண்டும் பிரிக்கப்பட்டுள்ளது.

ஆதலால், இவ்வாறான அதிரடி செயற்பாடுகள், மனித உரிமை ஆணை யாளரைச் சாந்தப்படுத்தும் என்று அரசு நம்புவதுபோல் தெரிகிறது. பொது நலவாய நாடுகளின் உச்சிமாநாடு ஆரம் பிப்பதற்கு முன்பாக ஐ.நா. மனித உரிமைப் பேரவையின் ஆணையாளர் அலுவலகத்திலிருந்து எந்தவிதமாக அழுத்தங்களும் வந்துவிடக்கூடாதென் பதில் மிகவும் அவதானமாகத்தான் ஆட்சியாளர்கள் இருக்கின்றார்கள்.

சிங்கள மக்கள் மத்தியில் வேரூன்றி கிளைபரப்பி வளர்ந்திருக்கும் பௌத்த சிங்கள பேரினவாத கருத்துநிலை பட்டுப்போகாமல் இருக்க வேண்டு மாயின், உரிமையைக்கோரு, விசா ரணைசெய் என்று எவர் வந்தாலும், அவர்களை இராவணா சக்தி, தேசப் பற்றுள்ள தேசிய இயக்கம், சிங்கள ராவய மற்றும் ஜாதிக ஹெல உறுமய போன்ற கைத்தடிகளை உசுப்பிவி ட்டு, அதற்கு நீர்பாய்ச்சிவிடப்படும்.

ஆனாலும், இந்தப் பின்னணி யில், இலங்கை வந்துள்ள நவநீதம் பிள்ளை, உள்நாட்டு விசாரணைப் பொறிமுறைக் குள் ஐ.நா.வையும் இணைத்துக் கொள்ள வேண்டும் என்கிற நிலைப் பாட்டினை எடுப்பாரா? அல்லது அனைத்துலக சுயாதீன விசாரணை முழு அளவில் நடைபெற வேண்டும் என்பதை வலியுறுத்துவாரா? என் பதை, 24வது கூட்டத்தொடரில், வாய்மூல அறிக்கை வாசிக்கப்படும் போதே தெரிந்துகொள்ளலாம். அதற் கும் அப்பால், நல்லிணக்க ஆணைக் குழுவின் முக்கியமான 6 பரிந்துரை களை நிறைவேற்ற வேண்டும் என்ப தோடு முடிவுக்கு வருமா என்பதை பொறுத்திருந்து பார்க்கவேண்டும். இருப்பினும் ஐ.நா. சபையின் மனித உரிமை பேரவையின் ஆணையாள ரைச் சந்திப்பதற்கு பாதிக்கப்பட்ட மக்கள் கூட்டம், தடைகளையும் தாண்டி வீதிக்கு வந்த நிகழ்வு, உரி மைக்காக போராட மக்கள் தயார் என்பதை உணர்த்துவது போலுள் ளது. ஆதலால், பான்கீமூன் நியமித்த நிபுணர்குழு வெளியிட்ட அறிக் கையில் உள்ள பல விடயங்கள், அதில் சொல்லப்படாத துன்பங்கள், என்பவற்றின் நேரடிச் சாட்சியாக நவநீதம்பிள்ளை இருப்பார் என் பதை அவர் வெளியிடப்போகும் அறிக்கையே கூறும்.

-இதயச்சந்திரன்-

# சதுரகிரி மகாலிங்கம் மலை



ஆன்மீகம் 107

அப்படியா என்று ஆச்சரியப்பட்டவர் டிக்கட் பணம் கொடுத்து டிக்கட் எடுத்தார். அடியேன் இரண்டாம் வகுப்பில் பயணம் செய்வதால் அவரும் அதிலேயே வருவதாய் கூறினார். அடியேன் தான் வேண்டாம். இறைவன் உங்களுக்குக் கொடுத்த உயர்ந்த பதவிக்குத் தகுந்தாற்போல் வேடம் போடுங்கள் என்றேன்.

நீங்கள் முதல் வகுப்பில் வாருங்கள். அதே போல் இறைவன் அன்பிலும் முதலாய் இருக்க முயற்சி செய்ய என்னால் 100 சதவீதம் உதவி செய்வேன் என்றதும் என்னுடன் அதிகாரிகள் புடை சூழ அரசுச் செயலர் மதுரையை நோக்கிப் பயணம் என்ற தகவல் மதுரை டிசி கனகய்யாவுக்குப் போனது. குறைந்தது முப்பது அதிகாரிகள் அரசுச் செயலரைப் பாதுகாக்க முதல் வகுப்பில் கூடி விட்டனர். அவர் கீழே இறங்கியதும் அடியேன் இருக்கும் இரண்டாம் வகுப்பு பெட்டிக்கு என்னைத் தேடி வர! உடன் வந்தவர்கள் ஆச்சரியத்துடன் அரசுச் செயலர் யாரையோ தேடுவதாகச் சிந்தித்திருக்க! அடியேன் வண்டியை விட்டு இறங்கியதைப் பார்த்த டிசி கனகய்யா ஓடி வந்து என்னை சாமி இவரைக் கொண்டு வந்துவிட்டீர்கள் என்று சிரித்துக் கொண்டே பிர்லா கெஸ்ட்கவுஸ்க்கு அழைத்துச் சென்றார்.

அரசுச் செயலர் அறிவுரைப்படி எல்லோரும் என்னிடம் வந்தனர். டி.சி, எ.சி இன்ஸ்பெக்டர் எல்லாம். பரமசிவன் கழுத்தில் பாம்பு கேட்டது கருடா சௌக்கியமா, என்பதுபோல் இருந்தது. அவர்கள் கொடுத்த போலி மரியாதை. சதுரகிரிக்கு இரண்டு காரில் பயணம். அங்கு அனைத்து டிபார்மெண்ட் ஆட்களும் செகரெட்டரியை, பாதுகாக்க வந்து விட்டனர். ஏன் என்றால் அவர் புலி மாதிரி.

புறப்படுவதற்கு முன்னால் முப்பது அதிகாரிகளும் ஒரே இடமாய் அமர அந்த மலையின் ரகசியத்தை அடியேன் சொல்ல குரு சீடர்களுக்குக் கதை சொல்வது போல் இருந்தது. திடீர் என்று அரசுச் செயலரைப்பார்த்து, நாம் மேலே பகவானைப் பார்க்கப் போகிறோம்! இங்கு மேலே போகும்போது நான் பெரியவன், நீ சிறியவன் என்ற பாகுபாடு இருக்கக் கூடாது.



சதுரகிரி மலையில் திரு.வி.ராமதாஸ் கமிசனருடன் (இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை) அன்னை சித்தர் யாகம் செய்தல். உடனே மழை வருதல்

ஆகையால் அங்கு இருக்கும், வாட்ச்சுமென் மணியைக்கூப்பிட்டு அரசுச் செயலரைப்பார்த்து, போலாம்மா சண்முகசிகாமணி போகலாம்மா என்று கேள் என்றேன். எல்லோரும் ஆடிப் போய் அசந்து விட்டனர். போயும்போய் அரசுச் செயலர் அதிலும் ஒரு சிங்கத்தைப் பார்த்து சண்முகசிகாமணி என்று சுண்டெலி கூப்பிட அனுமதிப்பதா? என்று டி.சி கனகய்யா மற்றும் அதிகாரிகள் நினைத்திருப்பார்கள்.

சரி!சரி! என்னை சாமி சொல்வது போலே கூப்பிடவும் என்றார். அரசுச் செயலர். சற்றுத்தயக்கத்துடன் போலாம்மா சண்முக சிகாமணி என்று கூப்பிட! எல்லோரும் பய்ணம் ஆனோம். மகா சக்தி வாய்ந்த மலையில் அறநிலைத்துறை கொஞ்சம் கூட சாதுக்களை மதிப்பது இல்லை.

ஒரு நிர்வாக அதிகாரி ஒரு பணக்கார செட்டில் தங்கிக் கொண்டு கோழிக்கறியும் பிராந்தியும் சாப்பிடுவதைக் கேள்விப்பட்டு அதிர்ச்சியுற்றேன். மேலே மக்கள் தங்குவதற்கு கமிஷனர் கூறியபடி கட்டாமல் ஏதோ மாளிகை போல் அதிகாரிகள் தங்குவதற்கு கட்டிடம் கட்டப்பட்டுள்ளது. பாத்ரூம், டாய்லட் இல்லாமல் கட்டியுள்ளனர். சந்தன மகாலிங்க பட்டு கட்டியதிலும் ஊழல் வாங்கி, இலவச தண்ணீர் தொட்டி கட்டியும் மக்களிடம் வாளி தண்ணீர் ஒரு பாய் வாங்கி தண்ணீர் ஊற்றவும், எல்லா அட்டுழியமும், ஏக போகமாய் நடப்பதைக் கண்ட என் மனம் கலங்கியது.

இதெல்லாம் டி.சி.யின் கவனக்குறைவே! ஈ.ஓ.வின் ஆணவ அகம்பாவமே. எல்லாம் மனத்தில் வைத்துக் கொண்டு, அரசுச் செயலரைத் தவசிப்பாறைக்கும், சித்தர்கள் தவம் செய்யும் பாம்பாட்டி சித்தரின் குகைக்கும் அழைத்துப்போனேன். அங்கு இரவு அரசுச் செயலருக்கு உடல் எல்லாம் தன் சஞ்சீவித் தைலத்தைப்பூசினேன். அவருக்கு உடல் வலி குணமானது. அங்கு மக்கள் படும் அவஸ்தை பற்றி அரசுச் செயலரிடம் எடுத்துக் கூறினேன்.

ஆடி அமாவாசை கழித்து முருகன் சிலை அருகே போகர் வழிபட்ட பெட்டியில் உள்ள பச்சைக்கற்கள், மரகதம் உள்ளக பெட்டி எங்கே? என்று அரசுச் செயலாளர் கேட்க அங்கிருந்தவர்கள் விழித்த விழி இருக்கிறதே! அரசுச் செயலர் விடவில்லை. இருந்தாலும் அவர் அவர் பாட்ஷா ஒன்றும் பலிக்கவில்லை. ஏற்கனவே அந்தப் பொருட்கள் அபேஷ்!

அன்னை சித்தர் இராஜ்குமார் குருஜி

தொடரும்

# நவிபிள்ளையின் இலங்கை விஜயம்



மேற்படி வெளியுறவு மற்றும் பாதுகாப்பு தொடர்பிலான நடவடிக்கைகள் யாவும் ஒரு குறுகிய கால இடைவெளிக்குள் தான் மேற்கொள்ளப் பட்டிருக்கினறன. இவையனைத்தும் இலங்கை பொறுத்து அதன் பிரதான பாட விதானதத்துடன் தொடர்புடைய வீட்டு வேலைகள் ஆகும். ஒரு புறம் சீனாவுடன் பாதுகாப்பு உடன்படிக்கை இன்னொருபுறம் இந்தியா மற்றும் மாலைதீவுகளுடன் உடன்படிக்கை ஒருபுறம் அரசாங்கத் தலைவர் சீனாவுக்குப்போகின்றார். சீனாவின் உதவியுடன் கொள்கலன் முனையம் திறக்கப்படுகிறது. இன்னொருபுறம் அமெரிக்காவுடன் படைத்துறை ஒத்திகை நடக்கிறது. அதாவது இலங்கைத்தீவில் சக்திமிக்க நாடுகள் எல்லாவற்றுக்கும் ஏதாவது ஒன்று கிடைத்திருக்கின்றது. தென்னாசியாவின் கவர்ச்சிக் கன்னியான இச்சிறு தீவு தனது கேந்திரமுக்கியத்துவம் காரணமாக எல்லாப் பலசாலிகளையும் தனது கண்ணைசைவுக்குள் கொண்டுவர முயற்சிக்கிறது.

எனவே, சக்தி மிக்க நாடுகளுடன் ஏதாவதொரு எல்லை வைர சுதாகரிப்பது போன்ற ஒரு தோற்றத்தை வெளிக்காட்டு அதேசயம் தனது கவர்ச்சி கருதி சக்திமிக்க நாடுகள் தங்களுக்கிடையில் ஒருவித நிழல்போட்டியில் ஈடுபட்டத்தக்க நுட்பமான மோதுகளத்தை அரசாங்கம் திறந்து வைத்திருக்கின்றது. இதன் மூலம் அரசாங்கம் வெளி அழுத்தங்களை ஒரளவுக்குக் கையாளமுடிகிறது. அதேசயம் பலசாலி நாடுகளிற்கு ஏதோகிடைக்கின்றது. ஆனால், வெளியாருக்காக காத்திருக்கும் தமிழர்களுக்கும் காத்திருக்கும் தமிழர்களுக்கு என்ன கிடைக்கும்?

ஆயுதமோதல்கள் முடிவுக்கு வந்தவுடன் இலங்கை அரசாங்கம் இந்தியத் தலைவர்களுக்கு 13 பிளஸ் தொடர்பாக சில நம்பிக்கைகளைக் கொடுத்ததாக அறிய முடிகிறது. ஆனால், இப்பொது 13 சயை விட 13 கிடைத்தாலே போதும் என்ற ஒரு நிலைக்கு இந்தியா இறங்கி விட்டதுபோலத் தோன்றுகிறது. அண்மையில் அமைச்சர் பீரிஸ் புதுடில்லியில் பிரதமர் மன்மோகன்சிங்கைச் சந்தித்தபோது 13 இலிருந்து முன்னோக்கி நகரவேண்டும் என்றே இந்திய தரப்பில் கூறப்பட்டது. அதாவது 13 பிளஸ் எனப்படும் தூரமான ஒரு செற்பிரயோகத்திற்குப் பதிலாக முன்னோக்கி என்று அரூபமாகக் கூறப்பட்டுள்ளது.

அண்மையில் மேனன் இலங்கைக்கு வந்தபோது ஊடகங்கள் பெரியளவுக்கு எதிர்பார்ப்புக்களை கட்டியெழுப்பின. சீனாவுடன் பாதுகாப்பு உடன்படிக்கை செய்யப்பட்டிருந்த ஒரு பின்னணியில் 13 ஆவது திருத்தத்தை அரசாங்கம் நீர்த்துப்போகச் செய்யக்கூடும் என்றவாறான ஊகங்களின் மத்தியில் தான் மேனன் கொழும்புக்கு வரவிருந்தார். ஆனால், அவர் இங்கு வருவதற்கிடையில் அரசுத் தலைவரின் சகோதரர் டில்லிக்குச் சென்றார். அதன் பின் கொழும்பு வந்த மேனன் இலங்கை மாலைதீவு மற்றும் இந்தியா வுடனான முத்தரப்பு கடல் சார் பாது காப்பு உடன்படிக்கையில் கையெழுத்து வைத்துவிட்டு 13 பிளஸ் பற்றி பெரிதாக எதுவும் பிரஸ்தாபிக்காது திரும்பிச்சென்றுவிட்டார். இதில் இந்தியாவுக்கு கிடைத்தது ஒரு பாதுகாப்பு உடன்படிக்கை. ஆனால், ஈழத்தமிழர்கள் இழந்தது 13 பிளஸ் மட்டுமல்ல 13 மைனஸ் கிடைக்காவிட்டால் சரி என்ற ஒரு நிலைக்க இந்தியா கீழிறங்கியமைதான்.

எனவே, ஜெயிவாக் கூட்டத்தொடரிற்குப் பின் இலங்கை அரசாங்கம் தனது கட்டாயப் பாடங்களிலும் வீட்டு வேலைசெய்து வருகிறது. உபபாடங்களிலும் வீட்டு வேலைகள் செய்து வருகிறது. இதன் விளைவாக சக்தி மிக்க நாடுகளிற்கு உடனடிக்கு நன்மைகள் கிடைக்கக்கூடும். அரசாங்கமும் தன்னை ஓரளவுக்கு சுதாகரித்துக்கொள்ள இது உதவும். ஆனால், பாதிக்கப்பட்ட தரப்பாகிய தமிழர்களுக்கு தேர்தல் நடந்தால் படைப்பிரசன்னம் குறைந்தால் கொமன் வெல்த் மாநாட்டோடு அனைத்துலக ஊடகங்கள் நாட்டுக்குள் வந்தால் ஒப்பீட்டளவில் இப்போதிருப்பதை விடவும் ஒரு கொஞ்சமாவது ஜனநாயக வெளி அதிகரிக்கும். சிவில் வெளி அதிகரிக்கும். அதற்குமப்பால் நீண்ட கால நோக்கில் கூட்டிக்கழித்துப் பார்த்தால் மெய்யான இழப்புத் தமிழர்களுக்கே. ஏனெனில் அரசாங்கத்தின் நெகிழ்வின்மை தான் தமிழ் அரசியலின் பிரதான பலங்களில் ஒன்று ஆகும்.

அரசாங்கமும் அதன் நண்பர்களும் நம்பிக்கையோடு வீட்டு வேலைகளைச் செய்து வருகின்றார்கள். நவிப்பிள்ளையின் வருகையை முன்னிட்டு வீட்டு வேலைகள் பகிந்தளிக்கப்பட்டன. ஆனால், அரசற்ற தரப்பாகிய தமிழர்களோ இறந்தவர்களையும் காணாமற் போனவர்களையும் இன்னமும் எண்ணிக் கொண்டிருக்கின்றார்கள். வெளியாருக்காகக் காத்துக் கொண்டிருக்கின்றார்கள். தேர்தல் தினம் அறிவிக்கப்பட்டதிலிருந்து இந்நாள் வரையிலும் ஒரு தேர்தல் விஞ்ஞாபனத்தை வெளியிட முடியாத அளவிற்காக தமிழர்கள் வீட்டு வேலை செய்து கொண்டிருக்கின்றார்கள்.

குளோபல் தமிழ்

முற்றும்

# இலங்கை அரசாங்கத்திற்கு புலிகளின் வலையமைப்பு சவாலாகவேயுள்ளது

## இராணுவ தளபதி தெரிவிப்பு

(கொழும்பு)

**இலங்கையின் தேசிய பாதுகாப்பிற்கு சர்வதேச நாடுகளில் விஸ்தரித்துள்ள விடுதலைப் புலிகளின் வலையமைப்பு சவாலாக வேயுள்ளது. இச்சவால்கள் இன்று நாட்டிற்கெதிராக பல்வேறு கோணங்களில் முன்னெடுக்கப்படுவதாக இராணுவ தளபதி லெப்டினன் ஜெனரல் தயா ரட்னாயக்க தெரிவித் துள்ளார்.**

எந்தவொரு சந்தர்ப்பத்திலும் நாட்டை பிளவுபடுத்தவோ, நாட்டிற் கெதிரான நடவடிக்கைகளை முன் னெடுக்கவோ அனுமதிக்கப் போவ தில்லை.

தேசிய பாதுகாப்பை கருத்திற் கொண்டு புதிய பாதுகாப்பு பொறி முறைகளை கையாண்டுள்ளதாக வும் அவர் குறிப்பிட்டார்.

சர்வதேச பாதுகாப்பு செயலமர் வின் அங்குரார்ப்பண நிகழ்வு நேற்று முன்தினம் கலதாரி ஹோட்டலில் நடைபெற்றது.

இதில் கலந்து கொண்டுவர வேற்புரை நிகழ்த்துகையிலேயே அவர் மேற்கண்ட வாறு கூறினார்.

அவர் இங்கு தொடர்ந்தும் உரை யாற்றுகையில்,

நாட்டில் பயங்கரவாதப் போர் முடிவடைந்ததன் பின்னர் நிலை யான சமாதானம் மற்றும் அமைதி காணப்பட்ட போதிலும் இலங்கைக் கெதிரான சவால்கள் தொடர்கின் றன.

புலம்பெயர்ந்த விடுதலைப் புலி கள் ஆதரவாளர்களும் தப்பிச் சென்ற புலி உறுப்பினர்களும் இலங்கைக் கெதிராக ஒன்றிணைந்து செயற்படு கின்றனர்.

இவர்கள் இலங்கையின் அரசி யல், சமூக மற்றும் பொருளாதார மையங்களைக் குறிவைத்து செயற் படுகின்றனர்.

இலங்கைக்கு எதிராக பாரிய மனித உரிமைகள் குற்றச்சாட்டுக் களை முன்வைப்பதுடன் மாத்திர மின்றி இராணுவத்துக்கெதிராக போர்க்குற்றச்சாட்டுக்களையும் சுமத்துகின்றனர்.

இது நாட்டை பிளவுபடுத்தி தமது இலக்குகளை அடைவதற்கான முயற் சிக ளாகும். ஆகவே இவ்வாறான சவால்களை எதிர்கொள்ள வேண் டிய தேவை காணப்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார். (அ-2)

# நல்லூர் ஆலய சூழலில்...

நல்லூர் முருகன் மஹோற்சவத்தை முன்னிட்டு தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தான அனுசரணையுடன் நல்லூர் இளங்கலைஞர் மன்றம் நடத்தும் தெய்வீக இசையரங்கு மாலை 6.45 முதல் இரவு 8.15 மணிவரை நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் நடைபெற்று வருகின்றது.

இதற்கமைய இன்று வியாழக்கிழமை கலாநிதி எஸ்.வி.எம்.நவரத்தினம், என்.பரந்தாமன் ஆகியோ ரின் இசையரங்கம் இடம்பெறும். இந் நிகழ்வில் அணி செய் கலைஞர்களாக வயலின்எஸ்.கோபிதாஸ், மிருதங்கம் எம்.லோகேந்திரன், கெஞ்சிரா ஆர்.சிவராமன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

---

நல்லூர் மஹோற்சவத்தை முன்னிட்டு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நடத்தும் ஆன் மீக சிந்தனை, சமயச் சொற்பொழிவு, கலை நிகழ்வுகள் என்பன உற்சவகாலத்தில் தினமும் பிற்பகல் 3 மணிமுதல் 6 மணிவரை நல்லூர் ஸ்ரீல ஸ்ரீ ஆறுமுக நாவலர் மணிமண்டபத்தில் நடைபெற்று வருகின்றன.

இன்றைய நிகழ்வுகளாக காலை சு.விஸ்வநாதன் வழங்கும் **மெய்ஞ்ஞானம் காட்டும் விஞ்ஞானம்,** ஜெய.கோபாலசாமி வழங்கும் **பாதம் தொழுவார் பாவம் தீர்ப்பார்** என்னும் விடயப் பொருளிலான சொற்பொழிவு இடம்பெறும். தொடர்ந்து நல்லூர் பஜனைக் குழுவினரின் முருகநாமம் பஜனை இடம்பெறும். மாலை பிரம்மச்சாரி ஜாக்கிரத சைதன்ய சுவாமிகள் வழங்கும் **யார் பெறுவார் அச்சோவே** என்னும் விடயப் பொருளிலான சொற்பொழிவு இடம்பெறும். அத்துடன் தெல்லிப்பழை அண்ணமார் அறநெறிப்பாடசாலை சுதுமலை ஸ்ரீஞான வைரவர் அறநெறிப்பாடசாலை ஆகியவற்றின் மாணவர்கள் வழங்கும் கலை நிகழ்வுகள் இடம்பெறும்.

---

நல்லூர் மஹோற்சவத்தை முன்னிட்டு சைவத் தமிழ் பண்பாட்டுக்கழகத்தினால் நடத் தப்படும் தெய்வீகப் பேருரை கலை நிகழ்வு, மாணவர் சொற்பொழிவு, கலைஞர் கௌரவிப்பு நிகழ்வுகள் மஹோற்சவ காலங்களில் தினமும் பிற்பகல் 6.30 மணி முதல் இரவு 8 மணிவரை நல்லூர் வடக்கு வீதியில் அமைந்துள்ள நடராஜா பரமேஸ்வரி மணிமண்டபத்தில் நடைபெறும்.

இதன்படி இன்று வியாழக்கிழமை இலக்கிய தமிழருவி இரா கேதீஸ்வரன் வழங்கும் **சொல்லும் பொருளும் சொல்லாப் பொருளும்** என்னும் விடயப் பொருளிலான சொற்பொழிவு இடம் பெறவுள்ளது.

---

நல்லூர் மஹோற்சவத்தை முன்னிட்டு சர்வதேச இந்துக்குருமார் ஒன்றியத்தின் ப்ரம்மகான சபா நடத்தும் தெய்வீக இசைச் சங்கமம் நிகழ்வு மாலை 6.30 மணிக்கு நல்லை ஆதீன புதிய மண்டபத்தில் நடைபெற்று வருகின்றது. இதன்படி இன்று வியாழக்கிழமை புல்லாங்குழல் கச்சேரி இடம்பெறவுள்ளது. இதனை கனடா வாழ் பிரம்ம ஸ்ரீ கிருஷ்ணராஜக்குருக்கள் வழங்கவுள்ளார்.


---

நல்லூர் மஹோற்சவத்தை முன்னிட்டு நல்லூர் சைவ மகா சபையின் ஏற்பாட்டில் நல்லை ஆதீன குருமூர்த்த ஆலய மண்டபத்தில் நல்லைக் குருமணியின் பிரதம வாரிசு கானகதா வாரிதி பிரம்ம ஸ்ரீ சிவ.வை.நித்தியானந்தசர்மா வழங்கும் **பாரதவம்சம்** பற்றிய இசைப் பேருரை இடம்பெறவுள்ளது. இந்நிகழ்வில் இன்று **துரியோதனன் போர்** என்னும் விடயப் பொருளிலான இசைப் பேருரை இடம்பெறவுள்ளது.

---

நல்லூர் கந்தன் மஹோற்சவத்தை முன்னிட்டு மாலை 7.15 மணி தொடக்கம் 7.45 மணிவரையும் யாழ்.சின்மயா மிஷன் ஆச்சிரம வதிவிட ஆச்சாரியார் பிரம்மச்சாரி ஜாக்கிரத சைதன்ய சுவாமிகள் நல்லூர் மகேஸ்வரன் மணி மண் டபத்தில் சொற்பொழிவு ஆற்றி வரு கின்றார். இந்நிகழ்வில் இன்று வியாழக்கிழமை **நல்லூரான் திருவடிக்கு** என்னும் விடயப் பொருளிலான சொற்பொழிவை ஆற்ற வுள்ளார். (7)

# நல்லூரான் திருவடிக்கு தீர்த்தத் திருவிழா



## நீராடும் முருகன்



ஒழுக்கத்தை காக்கும் எழுத்து
வேலின் தீர்த்தம்

ஒற்றுமை நோக்கும் கணிப்பு
நல்லூரின் தீர்த்தம்

வறுமையை நீக்கும் மருந்து
முருகன் தீர்த்தம்

பொறுமையை காக்கும் விருந்து
நல்லூரின் தீர்த்தம்


நல்லை அமிழ்தன்.

## ஊர் குளிர தீர்த்தமாடுவாய்

நீரிலே முருகனாட நீள்நிலம் 'பெரிதும் மாறும்'
நீடு வாழும் தீர்த்தமாக நல்லூர் தீர்த்தம் பேறாகும்,
வேரிலே நீர்குளிர்ந்தது போல், ஊர் குளிர நீராடுவாய்,
வெல்ல வேண்டும் தருமம் என்று வேலோடு ஆடுவாய்

**கே.எஸ்.சிவஞானராஜா, கொக்குவில்**

## வேலன் புகழ் பேசடி



செந்தமிழ் தந்த சண்முகன் நாமம்
அர்த்தம் சொல்லடி
சிந்தையில் மேவும் சஞ்சலம் போகும்
கந்தன் முன் நில்லடி

தந்தையின் காதில் மந்திரம் சொன்ன
தனயனைப் போற்றடி
இந்திரன் மகளை இடமாக வைத்த
அழகனை ஏற்றடி

நிந்தனை செய்வோர் காணியே போக
நீறள்ளிப் பூசடி
வந்திடும் வாழ்வில் வளமுடன் வசந்தம்
வேலன் புகழ் பேசடி

**நி.ஆனந்தன், வண்ணார்பண்ணை.**

## முத்தமிழ் காவலனே முருகா சரணம்



பழந்தமிழன் சங்கிலியன் மண்ணில்
முத்தமிழைக் காப்பவனே போற்றி...

வன்னி மரநிழல் உறையும்
வண்ண மயில் வாகனா போற்றி...

பிரமனை சிறையிட்ட பெரியவனே
பெரும்பிணி தீர்க்கும் ஆறுமுகனே போற்றி

கதிர்வேலை கரம் தாங்கும் வேலவனே
தமிழர்கள் கண்ணீர் துடைப்பவனே போற்றி...

**சேயவள், கிளிநொச்சி.**

## நல்லூர் கந்தன் அநுபூதி

நினைத்தேன் மறந்தே னிலையென் னிதயத்
துனைத்தேன் எனத்தேன் சுவைத்தேன், கவித்தேன்
இணைத்தேன் திளைத்தேன் இளைத்தேன் தினமும்
அணைத்தேன் அருந்"தேன்" அருள்நல் லூரா!

**கலாபூஷணம், சந்தக் கவிஞர். நவ.பாலகோபால்**

# வெளிநாட்டு அழுத்தங்களுக்கு இலங்கை அடிபணியப்போவதில்லை

## ஜனாதிபதி தெரிவிப்பு

(கொழும்பு)

**உரிய காலத்தில் தேர்தல்களை நடத்தி மக்களின் ஜனநாயக சுதந்திரத்தைப் பெற்றுக்கொடுத்த நான் எவ்வாறு ஏகாதிபத்தியவாதியாக இருக்கமுடியும் என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கேள்வியெழுப்பினார்.**

குருநாகலில் நடைபெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 62 ஆவது நிறைவு மாநாட்டில் உரையாற்றியபோதே ஜனாதிபதி மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

தமது விருப்பத்திற்கேற்ப தேர்தல் நடத்துபவரே ஏகாதிபத்தியத் தலைவன்.

யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வந்து வடக்கில் தேர்தல் நடத்தியதுடன் 2005 இல் இருந்து இதுவரை 11 தேர்தல்களை நடத்தியிருப்பதாகவும் ஆசியாவிலேயே அதிகளவு தேர்தல்களை நடத்திய நாடு இலங்கைதான் எனவும் அவர் தெரிவித்தார்.



வடக்கில் கடந்த நான்கு வருடங்களுக்கு முன்னர் எவரும் வாய் திறக்க முடியாதநிலை இருந்தது. அந்த நிலையை நாமே மாற்றினோம். தற்போது சகலரும் சுதந்திரமாக வாழும் சூழல் நாடு முழுவதும் உருவாக்கப் பட்டுள்ளது.

வெளிநாட்டு அழுத்தங்களுக்கோ உள்நாட்டு சதிகளுக்கோ இலங்கை அரசாங்கம் ஒருபோதும் அடிபணியாது. ஜனநாயகத்தை காக்கவும் வெளிநாட்டு அழுத்தங்களை முறியடிக்கவும் அனைத்து மக்களும் ஒன்றுபடவேண்டும்.

நாட்டில் சகல பகுதிகளிலும் அபிவிருத்தித் திட்டங்கள் நடைமுறைப் படுத்தப்பட்டு வருகின்றன. ஒரு முறை நாட்டைச் சுற்றிப் பார்ப்பவர்கள் இதனை தமது கண்களால் கண்டு உணரமுடியும்.

நாட்டின் சகல மதங்களையும் நாம் சமமாகவே பார்க்கின்றோம். பௌத்த மதம் அரசியலமைப்பில் உள்ளபோதும் ஏனைய சகல மதங்களுக்கும் உரிய இடத்தையும் கௌரவத்தையும் வழங்கி வருகின்றோம்.

சிலர் பொய்ப்பிரசாரங்களைப் பரப்பி வருகின்றனர். நாம் முஸ்லிம் மக்களைப் பகைத்துக் கொள்வதாகவும் கிறிஸ்தவ மக்களைப் புறக்கணிப்பதாகவும் புரளிகள் கிளப்பப் படுகின்றன. மக்கள் இவற்றில் தெளிவு பெற வேண்டும் என்றார். (அ-2)

# நாடு கடத்தும் திட்டத்தை கைவிட்டது சுவிஸ் அரசு

(கொழும்பு)

தஞ்சக் கோரிக்கை நிராகரிக்கப்பட்ட இலங்கைத் தமிழர்களுக்கு அச்சுறுத்தல் இருப்பதனால் அவர்களை நாடு கடத்தும் திட்டத்தை சுவிஸ் அரசாங்கம் இடைநிறுத்தியுள்ளது.

தஞ்சக் கோரிக்கை மறுக்கப்பட்ட நிலையில் இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்பட்ட இரண்டு தமிழர்கள் கைது செய்யப்பட்டுள்ளதை அடுத்தே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக சுவிஸ் ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கைக்கு திருப்பி அனுப்பப் படும் தமிழர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தவே இந்த முடிவு எடுக்கப்பட்டதாக சுவிஸ் சமஸ்டி குடியேற்ற பணியகம் தெரிவித்துள்ளது.

கைது செய்யப்பட்டுள்ள இரண்டு தமிழர்களின் நிலை குறித்து அறிந்து கொள்ளும் முயற்சியில் கொழும்பிலுள்ள சுவிஸ் தூதரகம் ஈடுபட்டுள்ளதாகவும் சுவிஸ் ஊடகச் செய்தியில் கூறப்பட்டுள்ளது.

2011 ஆம் ஆண்டுக்குப் பின்னர் சுவிஸ் அரசாங்கம் இதுவரை 24 பேரை பலவந்தமாக இலங்கைக்கு திருப்பி அனுப்பியுள்ளது. 120 பேர் சொந்த விருப்பத்தின் பேரில் சுவிஸில் இருந்து இலங்கைக்குத் திரும்பியுள்ளனர்.

கடந்த மாதம் சுவிஸிலிருந்து திரு ப்பி அனுப்பப்பட்டிருந்த யாழ். அராலி யைச் சேர்ந்த திருமணமாகிய இளைஞர் ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து கைதாகியுள்ளார்.

அதன்பின்னர் அவர் 4ஆம் மாடிக்கு கொண்டுசெல்லப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. அதனையடுத்து யாழிலிலுள்ள அவரது துணைவியார் கொழும்பிலுள்ள சுவிஸ் தூதரகத்தில் முறைப்பாடு செய்துள்ளார். (அ-2)

# இணையத்தளத்தில் தேர்தல் நடத்தினால் மட்டுமே ஐ.தே.கட்சி வெற்றி பெறும்

## *நாமல் எம். பி தெரிவிப்பு*

(கொழும்பு)

இணையத்தளத்தில் தேர்தல் நடத்தினால் மட்டுமே ஐக்கிய தேசியக் கட்சி வெற்றி பெறும் என ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் அம்பாந்தோட்டை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

குருநாகல் மாவட்டத்தில் குளியாப்பிட்டிய பிரதேசத்தில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

ஐக்கிய தேசியக் கட்சியும் ஜே.வியும் இன்று அரசியல் பற்றி பேசுவது கிடையாது. தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் முதல் ஜனாதிபதி வரை இக்கட்சி சேறு பூசும் பிரசாரங்களை மேற்கொண்டு வருவதுடன் கதைகளை புனைந்து எழுதியும் கொண்டிருக்கின்றன.

ஐக்கிய தேசியக் கட்சியின் அரசியல் இலங்கையிலுள்ள கிராமங்களுடன் இல்லை. அந்தக் கட்சியின் அரசியல் சர்வதேசத்துடன் மட்டுமே உள்ளது.

இணையத்தளம் ஒன்றில் தேர்தல் நடத்தினால் மட்டுமே அந்த கட்சி வெற்றி பெற முடியும்.

சர்வதேசத்துடன் தொடர்புகளைக் கொண்டுள்ள ஐக்கிய தேசியக் கட்சிக்கு நாட்டு மக்களின் எண்ணங்கள் என்ன என்பதும் கிராமிய மக்களின் கஷ்டங்கள், சிரமங்கள் எவை என்பதும் புரியாது.

ஆனால், சர்வதேசத்தில் உள்ள மிகப்பெரிய நிறுவனங்களின் தேவைகள் எவை என்பதையும் அவற்றில் உள்ளவர்கள் பற்றியும் ஐ.தே.கட்சியினர் நன்றாக அறிந்து வைத்துள்ளனர் என்றார். (அ-2)

# பாடசாலைகளில் மும்மொழி சங்கங்களை ஸ்தாபிக்க நடவடிக்கை

(கொழும்பு)

நாட்டிலுள்ள அனைத்து பாடசாலைகளிலும் மும்மொழி சங்கங்களை ஸ்தாபிப்பதற்கு தேசிய மொழிகள் ஆணைக்குழு திட்டமிட்டுள்ளது.

பாடசாலைகளுக்குள் மும்மொழிக் கொள்கையை நடைமுறைப்படுத்துவதே இந்தச் செயற்றிட்டத்தினை முன்னெடுப்பதன் நோக்கமென ஆணைக்குழுவின் தலைவர் நிமல் ரணவக்க குறிப்பிட்டுள்ளார்.

பாடசாலைகளில் மும்மொழிப் பயன்பாட்டை மேம்படுத்துவதற் கான நடவடிக்கைகளை இந்தச் சங்கங்கள் முன்னெடுக்குமென அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கல்வியமைச்சர் உள்ளிட்ட கல்வித் துறைசார் பல்வேறு பிரிவினருடனும் கலந்துரையாடி இந்தச் செயற்றிட்டத்தை முன்னெடுக்கவுள்ளதாக தேசிய மொழிகள் ஆணைக்குழு மேலும் தெரிவித்துள்ளது. (அ-2)

# சிறைக்கைதி நெல்சனின் மரணத்திற்கு சிறை அதிகாரிகளே பொறுப்பு

## ஆனந்தசங்கரி கண்டனம்

சிறை அதிகாரிகளின் மனிதாபிமானமற்ற செயலே பிரான்ஸிஸ் நெல்சனின் மரணத்துக்கு காரணமானது. அவர்கள் இருந்த அதிகாரத்தை முறையாக பிரயோகிக்க தவறியமையாலேயே இந்த மரணம் சம்பவித்திருக்கிறது. எனவே சிறை அதிகாரிகளை குற்றவாளிகளாகக் கருதுகிறேன் எனக்கூட்டமைப்பின் இணைத் தலைவர்களில் ஒருவரானவீ. ஆனந்தசங்கரி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் கூறியுள்ளதாவது,

மகசின் சிறைச்சாலையில் கடந்த திங்கட்கிழமை மரணமடைந்த 31 வயதையுடைய தமிழ் அரசியல் கைதி பிரான்ஸிஸ் நெல்சன் தனது இரு பிள்ளைகளை பொருளாதார ரீதியாக மிகவும் நலிவுற்றுள்ள தனது மனைவியின் பொறுப்பில் விட்டுச் சென்றுள்ளார்.

2006ஆம் வருடம் முதல் ஏறக்குறைய ஏழாண்டுகள் சிறையில் தனது வாழ்க்கைக் காலத்தை கழித்த எம் தமிழ் உறவான அப்பாவி தமிழ் இளைஞனுக்கு வேண்டிய மருத்துவ வசதிகளை சிறை அதிகாரிகள் உரிய நேரத்தில் வழங்கியிருந்தால் இந்த இளைஞனின் உயிரைக் காப்பாற்றியிருக்க முடியும்.

அவரின் உடலின் பல பாகங்களிலும் எறிகணை சிதறல் துண்டுகளும் துப்பாக்கிச் சன்னங்களின் துகள்களும் இருந்தமை உறுதி செய்யப்பட்டுள்ளது. இந்த ஒரே ஒரு காரணம் மட்டும் போதும் பிரான்ஸிஸ் நெல்சனை அரசு விடுதலை செய்வதற்கு.

மனிதாபிமானமற்ற செயலால் எம் சகோதரனின் மரணம் நிகழ்ந்திருப்பதால் பிரான்ஸிஸ் நெல்சனின் மர்ணத்துக்கு சிறை அதிகாரிகள் பொறுப்புக்கூறியேயாக வேண்டும். (அ-2)

# 09.2013 05 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1799 - பாஞ்சாலங்குறிச்சியை மேஜர் பானர்மேன் தலைமையிலான படை முற்றுகையிட்டது.
- 1800 - மோல்டா பிரித்தானியாவால் பிடிக்கப்பட்டது.
- 1839 - முதலாவது ஓப்பியம் போர் சீனாவில் ஆரம்பமானது.
- 1880 ரஷ்யாவில் சென் பீட்டர்ஸ்பேர்க்கில் உலகின் முதலாவது மின்சார டிராம் வெற்றிகரமாகச் சோதிக்கப்பட்டது.
- 1882 - ஐக்கிய அமெரிக்காவின் முதலாவது தொழிலாளர் நாள் பேரணி நியூயோர்க் நகரில் இடம்பெற்றது.
- 1902 - யாழ்ப்பாணம் சாவகச்சேரிக்கும் பளைக்கும் இடையில் 14 மைல் நீளமான தொடரூந்துப் பாதை திறக்கப்பட்டது.
- 1905 - ரஷ்ய-ஜப்பானியப் போர்: அமெரிக்க ஜனாதிபதி தியோடர் ரூஸ்வெல்ட்டின் அமைதி முயற்சியை அடுத்து இரு நாடுகளுக்கும் இடையில் அமைதி உடன்பாடு நியூஹாம்ப்ஷயரில் எட்டப்பட்டு போர் முடிவுக்கு வந்தது.
- 1914 - முதலாம் உலகப் போர்: பாரிசின் வடகிழக்கே பிரெஞ்சுப் படைகள் ஜேர்மனியப் படைகளைத் தாக்கி அவர்களை வென்றன.
- 1932 - பிரெஞ்சு மேல் வோல்ட்டா பிளவடைந்து ஐவரி கோஸ்ட், பிரெஞ்சு சூடான், நைஜர் என மூன்று தனிநாடுகளானது.
- 1939 - இரண்டாம் உலகப் போர்: ஐக்கிய அமெரிக்கா போரில் தனது நடுநிலையை அறிவித்தது.
- 1961 - அணிசேரா நாடுகளின் முதலாவது மாநாடு பெல்கிறேட்டில் இடம்பெற்றது.
- 1977 - வொயேஜர் 1 விண்கலம் விண்ணுக்கு ஏவப்பட்டது.
- 1978 - காம்ப் டேவிட் ஒப்பந்தம்: இஸ்ரேலியப் பிரதமர் பெகினுக்கும் எகிப்திய ஜனாதிபதி அன்வர் சதாத்துக்கும் இடையில் மேரிலாந்தில் அமைதி ஒப்பந்த மாநாடு ஆரம்பமானது.
- 1980 - உலகின் மிக நீளமான நெடுஞ்சாலை சுரங்கமான கோதார்ட் வீதி சுரங்கம் (16.224 கிமீ) சுவிட்சர்லாந்தில் திறக்கப்பட்டது.
- 1990 -மட்டக்களப்பு வந்தாறுமூலைப் பல்கலைக்கழகத்தில் அகதிகளாகத் தங்கியிருந்த 158 தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டனர்.

பிறப்புக்கள்

- 1872 - வ. உ. சிதம்பரம் பிள்ளை, விடுதலைப் போராட்ட வீரர் (இ. 1938)
- 1888-சர்வபள்ளி இராதாகிருஷ்ணன், இந்தியாவின் இரண்டாவது குடியரசுத் தலைவர் (இ. 1975)
- 1945 - மு. மேத்தா, கவிஞர்
- 1950 - வீரசிங்கம் துருவசங்கரி, இலங்கையைச் சேர்ந்த அறிவியலாளரும் கண்டுபிடிப்பாளரும் (இ. 2006)

இறப்பு

- 1997 - அன்னை தெரேசா, (பி 1910)

# பிள்ளைகளின் சுய கணிப்பு தேவைகளை பாடசாலைகள் அங்கீகரிக்கின்றனவா?

## புதிதாக சிந்திப்போம்: சமூகத்திற்கான கல்வி




பேராசிரியர் மா.சின்னத்தம்பி

அறிமுகம்

பிள்ளைகள் பெரிய மனிதர்களாக வளர்கிறார்கள். அவர்கள் மனிதர்களினாலும் சூழல்களாலும் தமது கால எண்ணங்களையும் உணர்வுகளையும் தீர்மானித்துக் கொள்ளும்படி வழிப்படுத்தப்படுகிறார்கள். சிலர் அதிக பெறுமதியுடையவர்களாக தங்களை எண்ணிக்கொள்கிறார்கள். தமது உடை, மொழி, நுகர்ச்சி, நட்பு, பொழுதுபோக்கு, தொழில் எல்லாவற்றிலும் தாம் அதிக பெறுமதி மிக்கவர்கள் என்பதை வெளிப்படுத்தவும் நிலை நிறுத்தவும் முயன்று கொண்டே இருக்கின்றனர்.

வேறு சிலர் மாறாக தம்மைத்தாமே பெறுமதி ஏதுமற்றவர்கள் போல மதிப்பிட்டுக் கொள்கிறார்கள். குழந்தைப்பருவத்தி ருந்தே இந்த தாழ்வான நினைப்புக்களும் உணர்வுகளும் அவர்களில் மேலாதிக்கம் செலுத்திவருகின்றன. அவர்கள் தமது உடையிலும் மொழியிலும் அக்கறை கொள்வதில்லை. பெறுமதியற்ற செயல்களை வெட்கமின்றி செய்து கொள்கிறார்கள். தமது மதிப்பைத் தாமே குறைத்துக்கொள்ளும் மாதிரியிலான சொற்களையும் தொடர்பாடலையும் மேற்கொள்கிறார்கள். பெறுமதியற்ற மனிதர்களுடன் நட்பை வலுப்படுத்திக்கொண்டு சமூக ரீதியில் தேய்ந்துபோகும் மனிதர்களாகி விடுகின்றனர்.

ஏன் இத்தகைய முரண்பட்ட வாழ்க்கைப் பாணிகளில் மனிதர்கள் பயணிக்கிறார்கள்? சுயகணிப்பு பற்றிய இந்த வாழ்க்கை மாதிரிகள் எவ்வாறு வளர்ச்சி பெறுகின்றன? பாடசாலைகள் இதில் சரியாக ஈடுபடுகின்றனவா? இவை பற்றி இன்று கலந்துரையாடுவோம்.

சுயகணிப்பு தேவையா?

ஒவ்வொரு மாணவனுக்கும் தொழில் புரிபவனுக்கும் சுய கணிப்பு என்பது மிகவும் முக்கியமானது. மனிதர்களின் ஆளுமை உருவாக்கத்தில் அது மிகப்பெரிய பங்கு வகிக்கிறது. தம்மைப் பற்றிய மரியாதை, தமது ஆற்றல் பற்றிய நம்பிக்கை, தமது வளர்ச்சி பற்றிய உறுதியான எண்ணக் கோர்வைகள் எவ்வாறு உருவாக்கப் படுகின்றன என்பது தனிமனித வளர்ச்சிக்கு முக்கியமானது.

வீட்டில் பிள்ளைகள் எவ்வாறு வளர்க்கப் படுகிறார்கள். பள்ளிகளில் எவ்வாறு வடிவமைக்கப்படுகிறார்கள்? சகபாடிகளினால் எவ்வாறு மெருகூட்டப்படுகிறார்கள்?என்பது மிகவும் அடிப்படையானது. பெற்றோர்களதும் ஆசிரியர்களதும் கிடைக்கின்ற நண்பர் குழாத்தினதும் பங்களிப்பின் தன்மைகள் தான் இந்த சுயகணிப்பு மாதிரியை வடிவமைக்கின்றன.

சுய கணிப்பு என்பது மூன்று பிரதான எதிர்பார்க்கைகளுடன் தொடர்புடையது.

**முதன்மை:** குறித்த சூழலில், குறிப் பிட்ட குழுவில்தான் முந்துரிமை பெறக் கூடியவராயிருக்கமுடியுமா என்பது இது வாகும். தான் முக்கியமானவர் என்று கருது கின்ற தந்தை, தாய், ஆசிரியர், நண்பர், பஸ் கண்டக்டர் தன்னையும் அதேபோல் முக்கியமானவராக நடத்துகின்றாரா? இது பிள்ளைகளிடம் உள்ள ஆழ்மன கணிப்பீடு ஆகும். அவ்வாறு அங்கீகாரம் பெறும்போது உயர்ந்த பெறுமதி கொண்டவர்கள் தாங்கள் என்று நம்பத் தொடங்குகின்றனர்.

**திறமை:** தனக்கு முக்கியமானது என்று கருதுகின்ற ஒரு செயலில் தான் அதிக திறமை மிக்கவன் என்பதை மாணவர்கள் அறியும்போது தம்மீது நம்பிக்கை கொள்கின்றனர். குறிப்பிட்ட பாடத்தில் தான் திறமையானவன், குறித்த விளையாட்டில் முதல் நிலை வகிப்பவன். குறித்த கலையாற்றலில் தனக்கு விசேட திறமையுண்டு. நண்பர்களுக்கு உதவுவதிலும் வழிகாட்டுவதிலும் தனக்கு விசேட திறமையுண்டு என்றவாறு அடிக்கடி உணரும்போது பிள்ளைகள் தமது திறமைமீது அதீத நம்பிக்கை கொள்கின்றனர். இந்த நம்பிக்கைகள் படிப்படியாக அவர்களை வலுவான மனிதர்களாக்கி விடுகின்றது.

**அதிகாரவலு:** தான் உள்ள ஒரு கூட்டத்தில் அல்லது சூழலில் ஆதிக்கம் செலுத்தும் திறமை, கட்டுப்படுத்தும் ஆற்றல் தன்னிடம் இருப்பதை மாணவர்கள் உணரும்போது அதிக மகிழ்ச்சியடைகிறார்கள். அவர்கள் அதிக ஊக்கம் பெறுகின்றார்கள். மனதில் நேர் மனப்பான்மையை உறுதியுடன் கட்டியெழுப்புகிறார்கள்.

இவற்றிலிருந்து சுயகணிப்பு என்பது படிப்படியாக பிள்ளைகளிடம்கட்டியெழுப்பப்படுகிறது.

புதிய திறமைகளைத் தேடுங்கள்

பிள்ளைகளுக்குப் பல்வேறு கோட்பாடுகள், விதிகள் , இலக்கணங்கள், கணக்குகள் என்பவற்றை மாத்திரம் கற்பித்தல் போதுமானதன்று. புலமை அல்லது அறிவு ரீதியான தேவையாகவும் முதன்மையாகவும் அது காணப்படுகின்றது.

எனினும் இன்று ஏராளமான கற்பித்தல் நிலையங்கள் சமூக வரவேற்புடன் வளர்ந்து கிளை பரப்பியுள்ளன. இந்த நிலையில் பொதுத் துறை சார்ந்த பள்ளிக்கூட ஆசிரியர்கள் பிள்ளையிடம் புதிய பரிமாணங்களை வளர்ப்பதில் தமது ஆற்றல், கவனம், நேரம் என்பவற்றைச் செலவிடவேண்டும்.

பாடுதல், எழுதுதல், அரும்பொருட்களைச் சேகரித்தல், சமையல் செய்தல், சிற்பம் செதுக்குதல், திரைப்படம் பார்த்து விமர்சித்தல் போன்ற பல செயற்பாடுகளில் ஈடுபட்டு சிலவகையான நிபுணத்துவ ஆற்றல்கள் தம்மிடம் இருப்பதை மாணவர்கள் இனங் கண்டு கொள்ள வேண்டும்.



கல்வித் தரிசனம்

ஏதோவொரு வேறுபட்ட ஆற்ற லின் சொந்தக்காரன் என்ற சந்தோசம் மற் றும் பெருமையுடன் பல மாணவர்கள் வளர்ச்சி பெறுவதற்கு பாடசாலைகள்போதிய வாய்ப்புக்களை உருவாக்க வேண்டும்.

இப்போதெல்லாம் இத்தகைய புதிய ஆற்றல்க ளுக்கான வாயில் கள் அகலத் திறக் கப்பட்டுள்ளன. தொழிற்சாலை களிலும் அருங் காட்சியகங்களிலும் சுற்றுலா மையங்களி லும் புதிய தேவைகள் பெருகி வருகின்றன. அலுவலகங்களில் மாத்திரமே தொழில் வாய்ப்புக்களை எதிர் பார்த்த காலம் ஒன்று முன்பு இருந்தது.

இப்போது புதியநாட்டம், புதிய எதிர் பார்க்கை, புதிய தொழில் என்ற வளர்ச்சிப் போக்கு காணப்படுகின்றது.

சுய கணிப்பு நிலை பரவலாக வளர்க்கப்படுதவற்கு இத்தகைய புதிய கற்றல் வலயங்கள் திறக்கப்படுவது அவசியமாகின்றது.

மனனம் செய்யும் திறன், பரீட்சை விதிகளின் படி திறமையான பரீட்சை எழுதுதல் என்பது வழமையான ஆற்றல் தான். அதுவும் அவசியமானதுதான்.

ஆனால் எல்லோராலும் அதற்குள் ஜொலிக்க முடிவதில்லையே! பிள்ளைகளிடம் இயல்பாக புதைந்து கிடக்கும் பலதிறமைகள், குதூகலிக்கும் இயல்புகள், இரசனை ஆற்றல்கள், சாதிக்கத் துடிக்கும் வேட்கை போன்ற வேறு பலவும் உள்ளன. அவைகள் மிகப் பெரிய புதையல்கள்.

ஆனால், அகழ்ந்தெடுப்பதற்கான வழிகாட்டல், ஊக்கம் ஆசிரியர்களிடமிருந்துதான் ஊற்றெடுக்க வேண்டும்.

வெட்டப்பட்டு நிலத்தில் கிடக்கும் மரம் ஒன்றை விறகாக மாற்றுவதா, அழகான தளபாடமாக மாற்றுவதா, அருங்காட்சியகத்தில் வைக்கக் கூடிய நுட்பமான கலைச்சிற்பமாக மாற்றுவதா, சுவாமி அறையில் வைத்து புனிதமாக போற்றக் கூடிய கடவுள் சிற்பமாக மாற்றுவதா என்பது பிள்ளையின் ஆற்றலில் மாத்திரம் தங்கியிருக்கவில்லை. அந்த ஆற்றலை நோக்கி பிள்ளையை திசை திருப்பும் ஆசிரியனின் ஆற்றல், ஈடுபாடு, தூய்மை, பெருந்தன்மை போன்றவற்றிலும் தங்கியுள்ளது.

இதனால்தான் வாழ்வில் தடைகளை உடைத்துக் கொண்டு வாழ்வில் மேற் கிளம்பி சாதனைச் சிகரம் தொட்டவர்கள் தம் தந்தையை விட தன் ஆசிரியனைப் பற்றியே தம் சுய சரிதைகளில் மனம் நெகிழ்ந்து எழுதுகின்றனர்.

பலமானவற்றை கண்டறிதல்

பிள்ளைகளிடம் பரபரப்பு, மன அழுத்தம் என்பன அதிகரிக்கும் போதெல்லாம் அதிலிருந்து அவர்களை வெளியே எடுப்பதும் அவர்களைப் பற்றிய சுயமான விழிப்புணர்வை அவர்களிடம் உருவாக்குவதும் அவசியம். அதிலிருந்து சுய கணிப்பு என்ற அடுத்த கட்டத்துக்கு அவர்களை நகர்த்த வேண்டும். இது பெற்றோருக்கு சாத்தியப்படுவதேயில்லை. உணவும் மருந்தும் உடையும். அன்பும் கொடுப்பர்.

–ஆனால் பிள்ளையிடம் புதைந்து கிடக்கும் வைரம் போன்ற தனியாற்றலை சரியாக இனங்கண்டு வழிகாட்டுபவர் நல்ல ஆசிரியர்களே!

பிள்ளைகளிடம் பிரிக்க முடியாதவாறு குணவியல்பாக காணப்படும் பலமான(Strengths) அம்சங்களை தாங்களே கண்டு பிடிக்க ஆசிரியர்கள் உதவ வேண்டும். நல்ல வழிகாட்டிகளாக ஆசிரியர்கள் தம்மை மாற்றிக் கொள்ள வேண்டும்.

மாணவர் தாம் வெற்றியடையக் கூடி யவை என்று கண்டறியக்கூடிய பகுதிகளை அல்லது ஆற்றல்களை தாமாக கண்டறிவதற்கு ஆசிரியர்கள் வழிகாட்ட வேண்டும். உதவிசெய்ய வேண்டும்.

இதற்கான சோதனைப்பட்டியலை தயாரித்து வழங்க வேண்டும். இதில் இரண்டு நிரல்களை ஏற்படுத்த வேண்டும். ஒன்றில் மாணவர்களது பலமானவற்றையும் மற்றொன்றில் பலவீனமானவற்றையும் மாணவர்கள் சுய தேடலின் அடிப்படையில் கவனமாக நிரப்ப வேண்டும்.

பின்வரும் கேள்விகளை மாணவர்க ளுக்கு முன்வைத்து அத்தகைய பட்டியலை சுதந்திரமாக போதியளவு நேரம் எடுத்து நிரப்புவதற்கு ஆசிரியர்கள் இடமளிக்க வேண்டும்.

(I) எந்த வேலையை உங்களால் மிகவும் திறமையாக செய்ய முடியும்?

(II)உங்கள் இயலாமை அல்லது பலவீனம் என்று நீங்கள் உணரும் மூன்று விடயங்கள் எவை?

(III) அத்தகைய உங்களது பலவீனங்களை போக்குவதற்கு நீங்கள் என்ன செய்ய வேண்டும்?

(IV) மற்றவர்களுக்கு உதவி செய்வதற்கு உங்கள் பலமான அம்சங்கள் எவ்வாறு உதவ முடியும்?

(V) மற்றவர்களது எத்தகைய பலமான விடயங்களை நீங்கள் புகழ்வதுண்டு.

(VI)பிறரிடம் உள்ள எத்தகைய பலமான விடயங்கள் அல்லது ஆற்றல்கள் உங்களிடமும் காணப்படுகின்றன?

(VII) மற்றவர்களிடம் காணப்படும் எத்தகைய பலவீனங்கள் உங்களிடமும் உள்ளன?

இத்தகைய பட்டியலை பெரும்பாலும் பதின்மூன்று வயதுக்கு மேற்பட்ட மாணவர்களுக்கு வழங்கி பூர்த்தி செய்யும்படி கேட்க வேண்டும்.

இத்தகைய பட்டியலை வழங்கியபின் இவை தொடர்பாகவும் சுயகணிப்பு தொடர்பாகவும் ஆசிரியர்கள் இயல்பாக கலந்துரையாட வேண்டும்.

மனம் திறந்து தமது திறன்கள், பிரச்சினைகள், பலவீனங்கள் பற்றி கலந்துரையாடும் சூழலை படிபப்படியாக வகுப்பறைகளில் நிதானமாகவும் கட்டுப்பாட்டுடனும் உருவாக்க வேண்டும்.

கலந்துரையாடலை கவனமாக நெறிப்படுத்துபவராகவும் ஆசிரியர்கள் தம்மை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

வாரத்தில் ஒரு பாடவேளையாவது தரம் 10–11 வரையிலான வகுப்பு மாணவர் களுடன் ஆசிரியர்கள் இத்தைகய இடைவினை உறவுகளையும் தொடர்பாடலையும் மேற்கொள்ள வேண்டும்.

பாடசாலை மற்றும் வலய நிர்வாகம் இவை தொடர்பாக கவனம் செலுத்த முடியும்

❖ முடிவுரை

கட்டிளமைப்பருவத்துப் பிள்ளைகள் பலமான அழுத்தங்களுடன் செய்வதறியாது அலைக்கழிக்கப்படுகிறார்கள்.

இணையத்தளங்களும் தொலைபேசித் தகவல்களும் பல சமயங்களில் பெற்றோரை விடவும் ஆசிரியர்களை விடவும் அவர்களது உளவியல் அபிலாசைகளுக்குரிய சுதந்திர வலயங்களை திறந்து விடுகின்றன.

குடும்பங்களில் இருந்தாலும் விடுதிகளில் அல்லது வாடகை வீடுகளில் தங்கியிருப்பது போன்ற உணர்வுடன் அந்நியப்பட்டே அநேகமான கட்டிளமைப் பருவத்தினர் வாழ்கின்றனர்.

இது பல சுய நட்டங்களையும் சமுதாய சீரழிவுகளையும் உருவாக்கி விடுகின்றது. இதனால், தம்மை உணரவும் தம்மை மதிப்பீடு செய்யவும் தமது வளர்ச்சி மையங்களையும் குதூகலச் சுரங்கங்களையும் இனங்காணவும் பாடசாலைகளும் ஆசிரியர்களும் முயற்சித்தல் வேண்டும்.

பாடசாலை வெற்றிகளில் பல நூறு பங்காளர்களை இதன் மூலம் உருவாக்க முடியுமல்லவா?

# புகைத்தல் காரணமாக 54 பேர் உயிரிழக்கின்றனர்

(கொழும்பு)

புகைத்தல் காரணமாக இலங்கையில் தினமும் 54 பேர் இறப்பதுடன் வருடாந்தம் 20 ஆயிரம் பேர் இறப்பதாக சுகாதார அமை ச்சு தெரிவித்துள்ளது. அத்துடன் இலங்கை யில் புகைத்தலுக்கு அடிமை யானவர்கள் தினமும் 210 மில்லியன் ரூபாவை செலவிட்டு வருகின்றனர்.

அதேவேளை புகைத்தல் காரண மான நோய்களுக்கு உள்ளாகி வைத்திய சாலைகளில் அனுமதிக்கப்படும் நபர்களின் மருத்துவ செலவுகளுக்காக வருடாந்தம் ஆயிரத்து 200 கோடி ரூபா செலவிடப் படுவதாகவும் சுகாதார அமை ச்சு குறிப்பிட்டுள்ளது.

(அ-2)


**காணி விற்பனைக்கு**

பரப்பு 3 ½


கரவெட்டி பிரதேச செயலகத்துக்கு முன்பாக உள்ள 3 ½ பரப்பு தோட்டக்காணி விற்பனைக் குண்டு.

தொடர்புகொள்ள : 0776636277,0779263660


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு: 27.10.1930





இறப்பு: 17.08.2012

திதி: 05.09.2013

## வேலுப்பிள்ளை தங்கரத்தினம்

அன்பினில் தெய்வமாய்.....
அரவணைத்த தாயாய்
செம்மையாய் எமை சீர் செய்திட
நல் ஆசானாய்
வந்துதித்து எமை வாழவைத்த
அன்பின் திருவுருவே
ஆண்டுகள் ஓடி மறைந்திடும்
மாறிடுமோ உன் நினைவலைகள்
எம் நெஞ்சில் என்றென்றும்
நீ தாயாய் தெய்வமாய்

தகவல்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

**வேலுப்பிள்ளை மகேந்திரன் (வள்ளுவன்)**
மாவடிச் சந்தி. வட்டுக்கோட்டை.

வாழ்க வையகம்



வாழ்க வளமுடன்

இலங்கை மனவளக்கலை மன்ற அறக்கட்டளை
வண்ணார்பண்ணை தவமையம் வழங்கும்

## சிறப்பு யோகா வாழ்வு பற்றிய பயிற்சிகள்

### அருட்தந்தை வேதாத்திரி மகரிஷி அவர்களால் வடிவமைக்கப்பட்ட முழுமை நல வாழ்வுக்கு மனவளக்கலை யோகா பயிற்சிகள்

உடலும் உயிரும் இசைந்து இயங்கும் நிலையில் இணைக்கப்பெற்று வாழ்ந்து வருபவன் மனிதன். அறிவில் உயர்வு பெற்று உயிரின் மதிப்பும் சிறப்பும் உணர்ந்து நிறைவுபெறுவதே மனிதப் பிறவியின் நோக்கமாகும். அந்நோக்கமானது வெற்றிபெற உடலையும் உளத்தையும் உயிரையும் நலமோடும் வள மோடும் வைத்துக்கொள்வது மனிதராகப் பிறந்த ஒவ்வொருவரு டைய உத்தம கடமையாகும். எம் உடலுக் கும் உயிருக்குமிடையே சிறந்த உறவை ஏற்படுத்தும் பாலமாக மனவளக்கலை யோகாப்பயிற்சி அமைகிறது.

உலகமக்கள் அனைவரும் அமைதியாக வாழ வழி செய்திடவேண்டும் என்ற பெரு நோக்குடனே இம் மனவளக்கலை யோகாப்பயிற்சிகள் படைக்கப்பட்டுள்ளன. பலவருட ஆராய்ச்சிக்குப் பின் அருட்தந்தை வேதாத்திரி மகரிஷி அவர்களால் நமக்கு அளிக்கப்பட்ட இந்த அற்புதமான எளியமுறை உடற்பயிற்சிகள் விஞ்ஞானிகளும் மெய்ஞ்ஞானிகளும் பாராட்டும் வகையில் அமைந்துள்ளன. அதனை நாம் நோக்குமிடத்து...

- **எளியமுறை உடற்பயிற்சிகள்**
- **எளியமுறை காயகல்பப் பயிற்சி**
- **எளியமுறை தியானப் பயிற்சிகள்**
- **அகத்தாய்வு எனும் தற்சோதனைப் பயிற்சிகள்**

இவைதவிர சிறப்புத் தவமுறைகளும் தத்துவ விளக்கங்களும் உங்களுக்கு ஏற்படும் ஐயங்களை செவ்வனவே தீர்த்துக்கொள்வதற்கான விளக்கங்களும் அனுபவங்களை பகிர்ந்துரைக்கவும் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன. அத்துடன் காயகல்பம், உடற்பயிற்சி, தியானம், அகத்தாய்வு மற்றும் பிரம்மஞானப் பயிற்சிகளும் கற்றுக் கொடுக்கப்படவுள்ளன. அதனைக் கற்று எம்மிடையே மறைந்து போயிருக்கின்ற குண்டலினி சக்தியைத் தட்டி எழுப்பி விழிப்படையச் செய்வோமாக!

இவ்விழிப்படைதல் மூலம் அன்புமயமானவர்களாகவும் ஆனந்தமே உருவானவர்களா கவும் வாழ வழி செய்யும் இவ் யோகக்கலையை அனைவரும் கற்றுப் பயன் பெறுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**காலம் : 07.09.2013 சனிக்கிழமை**

*மாலை 04.30 மணி தொடக்கம் (அறிமுகவுரையும் காயகல்பப் பயிற்சியும்) 08.09.2013, 09.09.2013, 10.09.2013, 11.09.2013, 12.09.2013 திகதிகளில் மாலை 05.00 மணி தொடக்கம் (பயிற்சிகள் ஆரம்பம்)*

**இடம் : மூத்தவிநாயகர் கோயில் திருமண மண்டபம்**
கரணவாய் மத்தி, கரவெட்டி. (750, பஸ்வழிப்பாதை, நெல்லியடி, யாழ்ப்பாணம்)

**நிகழ்ச்சி நிரல்**

- இறைவணக்கம் குருவணக்கம்
- தொடக்கவுரை : மனவளக்கலை பேராசிரியர், அருள்நிதி சி.முருகானந்தவேல் அவர்கள் அறங்காவலர் (இலங்கை மனவளக்கலை மன்ற அறக்கட்டளை)
- அறிமுகவுரையும் பயிற்சி வழங்கலும்
  மனவளக்கலை பேராசிரியர் அருள்நிதி S.இந்திரா அம்மா அவர்கள்

**அகத்தாய்வு-III** (தற்சோதனைப் பயிற்சி)
காலம்: 07.09.2013, 08.09.2013 சனி, ஞாயிறு
நேரம்: காலை 09.00 மணி- பிற்பகல் 01.30 மணிவரை
இடம்: வண்ணார்பண்ணை -தவமையம்

**அகத்தாய்வு-II**
காலம்: 14.09.2013, 15.09.2013 சனி, ஞாயிறு
நேரம்: காலை 09.00 மணி - பிற்பகல் 01.30 மணிவரை
இடம்: வண்ணார்பண்ணை - தவமையம்

**அகத்தாய்வு-IV** (தற்சோதனைப் பயிற்சி)
காலம்: 28.09.2013, 29.09.2013 சனி, ஞாயிறு
நேரம்: காலை 09.00 மணி- பிற்பகல் 01.30 மணிவரை
இடம்: வண்ணார்பண்ணை -தவமையம்

**பயிற்சி வழங்குபவர்**
மனவளக்கலை பேராசிரியர் : அருள்நிதி S. இந்திரா அம்மா அவர்கள்
வண்ணார்பண்ணை தவமைய வழி
நாச்சிமார் கோயிலை அடுத்துவரும் அரசடிச்சந்தியிலிருந்து கேசாவில் பிள்ளையார் கோயிலை நோக்கிய முச்சந்தியிலுள்ள ராான்ஸ்போமருக்குப் பக்கத்திலுள்ள முதலாம் ஒழுங்கையிலுள்ளது.
தொடர்புகளுக்கு: 077 772 6732, 0771235646, 0714403268, 0777368745

**இலங்கை மனவளக்கலை மன்ற அறக்கட்டளை**
வண்ணார்பண்ணை தவமையம்,
நாச்சிமார் கோவிலடி, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

அன்பின் அலை எழுகின்றபோது கோப அலை மறைந்து போகும்
மனவளக்கலை எழுகின்றபோது யோகக்கலை நிறைகின்றது
வாழ்க வளமுடன்




**குமரன் சில்க்ஸ்இன் மாபெரும் மலிவு விற்பனை**
Kumaran Silks
(நல்லூர்க் கந்தன் ஆலய உற்சவத்தை முன்னிட்டு)

Wedding Sarees திருமணப் பட்டுப் புடைவைகள்
Bridal Sarees பிறைடல் சாறீஸ்
Casual Sarees கஸ்சுவல் சாறீஸ்
Designer Sarees டிஷைனர் சாறீஸ்
Cotton Sarees கொட்டன் சாறீஸ்
Salwar, Material [Cotton & Silks]
சல்வார் மெற்றீரியல் (கொட்டன் அன் சிஸ்க்)
Blouse, T-shirt, Tops & etc
பிளவுஸ். ரீ-சேட்ஸ். ரொப்ஸ் மற்றும் பல

500/= கொட்டன் சாறீஸ் Cotton Sarees
700/= சில்க்ஸ் சாறீஸ் Silks Sarees

Discount 15% to 25% கழிவு வழங்கப்படும்

Sequence Sarees சீக்குன்ஸ் சாறீஸ் இற்கு 30% கழிவு வழங்கப்படும்
Cotton Sarees இற்கு விசேட தள்ளுபடி உண்டு

No. 788, Point Pedro Road, Nallur, Jaffna. Tel : 021 20 54075. e.mail : kumarantk@gmail.com
இல. 788. பருத்தித்துறை வீதி. நல்லூர். யாழ்ப்பாணம். (முத்திரைச் சந்தி அருகாமை)

(சி-4567)



**புதிய சுவை! புதிய அனுபவம்! புதிய தொழில்நுட்பம்!**

அதிநவீன Pasteurized And Homogenized முறைப்படி தயாரிக்கப்பட்ட 100% சுகாதாரமான ஊட்டச்சத்துக்கள் நிறைந்த ஐஸ்கிறீம் வகைகள் எமது அதிமுக விலையில் நல்லூர் விற்பனை நிலையத்தில் சுவைத்து மகிழலாம். பெறுமதி மிக்க பரிசில்கள் உங்களுக்காக காத்திருக்கின்றன.

**ஷைலோ ஐஸ்கிறீம்**

No.231, Temple Road, Nallur, Jaffna.
T.P. 021 4926003

(3587)

# மந்தான் வீதியில் பேருந்து சேவை இடம் பெறவேண்டும்


## மக்கள் கோரிக்கை

(கரணவாய்)

கரணவாய் குஞ்சர் கடை சந்தியிலிருந்து உட்செல்லும் மந்தான், கல்லுவம், உப்பு வல்லை ஆகிய கிராம மக்களுக்கு பேருந்து சேவையின்மையால் அவர்கள் பல அசௌக ரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர். இக்கிராமங்களுக்கான பேருந்து சேவை ஆரம்ப காலத்தில் இடம் பெற்று வந்தது.

ஆனால் பின்வந்த யுத்த சூழலைக் காரணம் காட்டி முன்னதாக சேவையில் ஈடுபட்ட இ.போ.ச பேருந்து சேவையை இடைநிறுத்தியது. இதுவரையில் சேவை மீண்டும் ஆரம்பிக்கப்படவில்லை. இதனால் அங்குள்ள சுமார் 5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் 3 கிலோ மீற்றர் தூரத்தை கால் நடையாக கடந்து சென்று 750 வழித் தடத்திலே பேருந்து சேவையைப் பெறு கின்றனர்.

இக் கிராமங்களிலுள்ள பாடசாலை மாணவர்களுக்காக காலை 7.30க்கும், பிற்பகல் 2 மணிக்கும் இ.போ.ச சேவையில் ஈடுபடுகின்றது. இவ்வாறாக பாடசாலை சேவையில் ஈடுபடும் பேருந்தையே சிலர் அவசரத் தேவைகளுக்கு பயன்படுத்தி வருகின்றனர். எனவே மீண்டும் பேருந்து சேவையை விரைவில் ஏற்படுத்தி தருமாறு பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-9-60)




# கூட்டமைப்பு பெரும்பான்மை பலத்துடன் வெற்றிபெற்றால் அரசியல்தீர்வு எட்டப்படும்

## இரா. சம்பந்தன் எம்.பி தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

இந்த நாட்டில் ஒரு நியாயமான, நிரந்த ரமான அரசியல் தீர்வு எட்டப்பட வேண்டு மெனில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு வடக்கு மாகாண சபைத் தேர்தலில் பெரும்பான்மை பலத்துடன் வெற்றி பெற வேண்டுமெனத் தெரிவித்தார் அக்கட்சியின் தலைவரும் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான இரா. சம்பந்தன்.

தமிழர்களுடைய பிரச்சினை தற்போது என்றும் இல்லாத அளவுக்கு சர்வதேச மயப்படுத்தப்பட்டுள்ளது.

இதற்கு சர்வதேச சட்டங்கள் ஒப்பந்த ங்களை இலங்கை அரசாங்கம் மீறியதே காரணம்.

வடக்கு மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடும் தமிழ்த்தேசியக்கட்டமைப்பின் தேர்தல் அறிக்கை யாழ். மார்ட்டின் வீதி யிலுள்ள இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைமைக் காரியாலயத்தில் வைத்து நேற்று வெளியிடப்பட்டன.

இதில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், தமிழ் மக்கள் பெரும்பான்மையாக வாழ் கின்ற ஒருமாகாணத்தில் தனிப்பட்ட ரீதியாக முதன் முறையாக மாகாணசபைத் தேர்தல் இடம் பெறுகின்றது.

இந்த தேர்தலில் தமிழ் மக்களுக்கு ஜனநாயக தீர்ப்பளிக்க ஒரு சந்தர்பம் வழங்கப் பட்டிருக்கின்றது.

இந்த மாகாண சபையை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு கைப்பற்றவேண்டியது அவசி யமானது.

இந்த நாட்டில் நியாயமான, நிரந்தரமான ஓர் அரசியல் தீர்வு ஏற்பட வேண்டுமெனில் வடக்கு - கிழக்கை கூட்டமைப்பு கைப்பற்ற வேண்டியது அவசியம் என்று கருதுகின் றோம்.

நாம் முறையான அரசியல் தீர்வை பெறுவதற்கு முதலில் வடக்கு மாகாண சபையின் ஆட்சியை கைப்பற்ற வேண்டும்.

தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு வெளிப்ப டையாக ஒரு தேர்தல் அறிக்கையை வெளியிட்டு தேர்தலில் போட்டியிடுகிறது. ஆளும் கட்சி அல்லது ஆளும் கட்சியுடன் இணைந்து போட்டியிடும் கட்சிகள் உங்கள் மத்தியில் ஒரு தேர்தல் அறிக்கையை முன்வைப்பார்கள் என நான் நினைக்க வில்லை. "அபிவிருத்தி" அவர்களுக்குத் தெரிந்த ஒரேயொரு சொல். அபிவிருத்தி என்றால் மக்களை அபிவிருத்தி செய் வதல்ல? தெருக்களில் தார் போடுவதும் ஒரு சில பாலங்களைக் கட்டுவதும் சில பல மின்சார ஒழுங்குகளைச் செய்வதும் தங்களை அபிவிருத்தி செய்வதும்தான் மக்களை அபிவிருத்தி செய்வதில்லை. இதுதான் அவர்களுடைய ஒரே ஒரு கோஷம். இந்தக்கோஷத்திற்கு எமது தமிழ் மக்கள் துணை போகக்கூடாது.

தமிழ் தேசியப் பிரச்சினையை தமிழ் பேசும் மக்களின் பிரச்சினை என்றும் உள்நாட்டு பிரச்சினை என்றும் இது உள் நாட்டில் தீர்க்கப்படவேண்டுமென்றும் அரசாங்கம் கூறி வருகின்றது.

கடந்த 60 வருடங்களுக்கு மேலாக எமது தலைவர்கள், கட்சிகள் பிரச்சினையை உள்நாட்டில் பேசி தீர்க்க கடும் முயற்சி எடுத்திருக்கின்றனர்.

1983 ஆம் ஆண்டுக்குப் பின்னர் இந்தப் பிரச்சினை சர்வதேச மயமாக்கப்பட்டது. இன்று என்றும் இல்லாத அளவுக்கு சர்வதேச மயமாக்கப்பட்டுள்ளது.

ஏன் என்றால் நியதிகள், இலங்கை அரசாங்கத்தால் மேற் கொள்ளப்பட்டசர்வதேச ஒப்பந்தங்கள், ஐ.நாவின் ஒழுங்கு விதிகள், சட்டங்கள் மீறப்படுகின்றன. இவ்விதமான ஒரு சூழலில் சர்வதேச சமூகம் வெறும் பார்வையாளராக மட்டும் இருக்கமுடியாது என அவர்மேலும் தெரிவித்தார். (அ-6)

## சந்தேகநபருக்கு விளக்கமறியல்

கரவெட்டி மத்தி துன்னாலை கிழக்கு பகுதியின் கிராம சேவகரை வீட்டில் வைத்து தாக்கிய சந்தேக நபர் ஒருவர் கைது செய்ய ப்பட்டு நீதிமன்றில் விளக்கமறியலில் வைக் கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் கடந்த 2ஆம் திகதி திங்க ட்கிழமை இரவு 8மணிக்கு இடம் பெற்று ள்ளது. சம்பவம் தொடர்பில் நெல்லியடிப் பொலிஸ் நிலையத்தில் கொடுக்கப்பட்ட முறைப்பாட்டை அடுத்து பொலிஸார் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டு சந்தேகத்தின் பேரில் ஒருவரைக் கைது செய்து பருத்தித்துறை நீதிமன்றில் ஆஜர்படுத்தினர். நீதிமன்றின் உத்தரவின் படி குறித்த சந்தேக நபர் எதிர்வரும் 13 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளார். (அ-9-60)

## மணல் பகிரங்க ஏலவிற்பனை

(யாழ்ப்பாணம்)

யாழ் நீதவான் நீதிமன்ற வழக்குகளில் பறிமுதல் செய்யப்பட்ட மணல் பகிரங்க ஏலவிற்பனை எதிர்வரும் 7ஆம் திகதி சனிக் கிழமை முற்பகல் நீதிமன்ற வளாகத்தில் நடைபெறவுள்ளது.

குறித்த ஏலவிற்பனையில் மணலை பெற்றுக்கொள்ளவிரும்புபவர்கள் கொடுப் பனவுகளை பணமாகவே செலுத்த வேண் டும் எனவும் அத்துடன் பெற்றுக் கொள்ளும் மணலை அன்றையதினம் மாலை 6 மணிக்கு முன்பாக நீதிமற்ற வளாகத் திலிருந்து அகற்ற வேண்டும், எனவும் நீதிமன்ற பதிவாளர் தெரிவித்துள்ளார். (அ-5)

## இரு குழுக்களுக்கிடையே மோதல்; அறுவர் கைது

அல்வாய் பகுதியில் இரு குழுக்களு க்கிடையே நேற்று முன்தினம் மோதல் ஒன்று இடம் பெற்றுள்ளது.

இதையடுத்து மோதல் சம்பவத்துடன் தொடர்புடைய ஒரு குழுவினரால் நெல்லியடிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப் பட்டது.

சம்பவத்துடன் தொடர்புடைய 6பேரைக் கைது செய்துள்ள நெல்லியடிப் பொலிஸார் இன்று பருத்தித்துறை நீதிமன்றில் அவர் களை ஆஜர்படுத்தவுள்ளனர். (அ-9-60)




## மாணவர்கள் தொடர்பு கொள்க

சமுர்த்தி சமூக அபிவிருத்தி மன்றத் தினரால் இவ் ஆண்டிற்கான புலமைப் பரிசில் திட்டத்தின் கீழ் அதனை வழங்க கரவெட்டி பிரதேச செயலகத்திற்குட்பட்ட மாணவர்களுக்கு விண்ணப்பங்கள் கோரப் பட்டுள்ளன.

வறுமைக் கோட்டின் கீழுள்ள சமுர்த்திப் பயனாளிகளின் தரம் 9,10,11, உயர்தரம் கற்கும் மாணவர்கள் சமுர்த்தி அதிகார சபையில் இதற்கான விண்ணப்ப படிவங் களைப் பெற்று பதிவு செய்ய முடியும். (அ-9-60)



இலங்கை வங்கியால் ஒழுங்கு செய்யப்பட்ட வடமாகாணத்தை சேர்ந்த சிறிய, நடுத்தரதொழில் முயற்சி வாடிக்கையாளர்களுக்கான "சிறிய நடுத்தர தொழில் முயற்சி முன்னோக்கிய பார்வை" எனும் தொனிப் பொருளிலான கருத்தரங்கு அண்மையில் யாழ்ப்பாணம் கிறீன்கிறாஸ் உணவகவிடுதியில் நடைபெற்ற போது..

கந்தனைக் காணாத கண்ணென்ன கண்ணே
கற்பூர ஒளி காணா கண்ணென்ன கண்ணே
– நவாலியூர் சோமசுந்தரப்புலவர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## சூரனுக்கு திருப்பெருவடிவம் காட்டியவன் எங்களுக்கு தன்னையே தந்தான்

திருவாரூரில் பிறந்தால் முத்தி. தில்லையில் வாழ்ந்தால் முத்தி. காசியில் இறந்தால் முத்தி. திருவெண்ணாமலையை நினைத்தால் முத்தி என்ற வரிசையில் நல்லூர் வீதியில் நடந்தால் முத்தி என்று கூற முடியும்.

அந்தளவுக்கு நல்லூர்க் கந்தப் பெருமானின் திருவீதி தெய்வீகமானது. நேற்று கந்தப் பெருமானின் தேர்த் திருவிழாவில் இலட்சோப இலட்சம் அடியார்கள் வேற்பெருமானை வழிபட அலையெனத் திரண்டு வந்த காட்சியை நினைக்கும்கால்; இதயம் நெகிழ்ந்து, கண்கள் ஆறாய்ப் பெருகும். அந்தளவிற்கு கந்தப்பெருமானின் அருளாட்சி நல்லூரில் ஓங்கி நிற்கின்றது.

ஒரு சிறிய வேலுக்கு இவ்வளவு சக்தியா? நல்லூரில் அப்படி என்னதான் இருக்கின்றது என்று எழும் வினாவை யாரிடம் கேட்க முடியும்?

நல்லூரை நோக்கி ஓட்டமும் நடையுமாக அடியார்கள் செல்கிறார்கள். அந்தளவிற்கு வேற்பெருமான் அடியார்களை ஈர்த்தருளுகிறான். நல்லூர்க் கந்தனின் மஹோற்சவத்துக்காக இம்முறை நாடு பூராகவும் உள்ள பொலிஸ் நிலையங்களில் இருந்து பொலிஸார் வரவழைக்கப்பட்டுள்ளனர். கடமையில் ஈடுபட்ட பொலிஸார் கண்ணியமாக நடந்து கொள்கின்றனர் என்பதை கூறித்தானாக வேண்டும்.

அது மட்டுமல்ல; கந்தனின் கோட்டத்தில் காவற்றுறையும் மேலாடை கழற்றித்தான் பணி செய்ய முடியும் என்பது வேற்படைக்கு முன்னால் எந்தப் படையும் சரணாகதியாகி விடும் என்பதற்கு வேறு சான்று தேவையில்லை.

தேரேறும் சண்முகப் பெருமானின் தரிசனம் காண்பதற்காக இலட்சக்கணக்கான மக்கள் அதிகாலை மூன்று மணிக்கு இடம்பிடிக்கும் அதிசயம் வேறெங்கும் காணக்கரியது எனலாம்.

இளைஞர்களின் அரோகரா ஒலியும், அங்கப் பிரதட்சண விரதமும், காவடி எடுத்து நேர்த்திக் கடன் முடிக்கும் மனத் தைரியமுமென எங்கும் பக்தி மயமாகக் காட்சி தரும் நல்லூர்க் கந்தனை வர்ணனை செய்யத் திரண்டிருக்கும் ஊடகங்கள், நல்லூர்ப் பெருமானின் பெருமையை பேசும் மொழியின்றி திணறுவதைக் காண முடியும்.

தேர் ஏறுவதற்காக சண்முகப் பெருமான் உள் வீதியில் அங்கும் இங்குமாக அசையும்போது ஒருமுறை அடியார்களை கடைக்கண்ணால் பார்ப்பார். அந்தப் பார்வையில் மும்மலங்களும் கெட்டு, திருவருள் சக்தியால் ஆன்மா லயிக்கும்.

முகப்பு வாயிலில் சண்முகன் வெளிவீதிக்கு வரும்போது காலைக் கதிரவனின் ஒளி அவன் திருமுகத்தில் பட்டுத் தெறிக்கும். அந்தக் கதிரொளியே அவன் ஆன்மாக்களுக்கு அளிக்கும் ஞான சக்தியாகும்.

அட! சூரனுக்கு முருகன் திருப்பெரு வடிவத்தை காட்டியதாக கந்தபுராணம் கூறுகிறது. ஆனால், நேற்றையதினம் நல்லூரில் முருகன் தன்னையே எங்களுக்குத் தந்துவிட்டான். இனி எங்களுக்கு ஒரு குறையும் இல்லை.

அதட்டியவர்கள், அடிமைப்படுத்தியவர்கள் தாமாக வந்து உரிமை தருவர். வேண்டாம் இனி இனவேற்றுமை. ஒற்றுமையாய் ஓரினமாய் இலங்கையராய் வாழ்வோம் என்று அவர் கேட்பர். இது நடக்கும். இதை நல்லூரான் நேற்று உணர்த்தி நின்றான் என்று உணர்வோம்.

## சமுர்த்தி அதிகார சபையால் பயனாளிகளுக்கு கருத்தரங்கு

(கரணவாய்)

சமுர்த்தி அதிகார சபையின் ஏற்பாட்டில் கொழும்பிலிருந்து வருகை தந்துள்ள விசேட குழுவினரால் சமுர்த்தி வங்கி பயனாளிகளுக்கான கருத்தரங்கொன்று நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமை முதல் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

கரவெட்டி சமுர்த்தி வங்கியின் முகாமையாளர் இ.உதயகுமார் தலைமையில் இடம்பெற்று வரும் இக்கருத்தரங்கில் கரவெட்டி பிரதேசத்தில் 12 கிராம சேவையாளர் பிரிவுகளில் வாழும் பயனாளிகள் கலந்து கொண்டுள்ளனர்.

இதில் கூட்டு காப்புறுதி நிதியம், சமுர்த்தி அதிகார சபையின் அபிவிருத்தி வேலைத்திட்டம், சமுர்த்தி வங்கிக் கடன் நடவடிக்கைகள், சமுர்த்தி திட்டத்தின் ஆரம்ப குறிக்கோள்கள் போன்ற விடயங்களுக்கு விளக்கம் அளிக்கப்பட்டு வருகின்றது.

கரவெட்டி பிரதேசத்தின் கிராம சேவையாளர் பிரிவுகளிலுள்ள சமுர்த்தி வங்கிகளில் பயன்பெறுவோருக்கு அந்தந்த சமுர்த்தி அலுவலகங்களில் இக் கருத்தரங்கு இடம்பெற்று வருகின்றமை சுட்டிக்காட்டத்தக்கது. (அ-9-60)

## ஸ்ரீமதி ரகுநாதனின் இசைக்கச்சேரி

(யாழ்ப்பாணம்)

கர்நாடக சங்கீத இசைக்கலைஞர் ஸ்ரீமதி சுதா ரகுநாதனின் கர்நாடக இசைக் கச்சேரி இன்று காலை வீரசிங்கம் மண்டபத்திலும் மாலை நல்லூர் சங்கிலியன் தோப்பிலும் இடம்பெறவுள்ளது.

இதற்கமைய காலை 9.30 மணிக்கு வீரசிங்கம் மண்டபத்தில் பயிலரங்க நிகழ்வு இடம்பெறும்.

இந்நிகழ்வில் அணிசெய் கலைஞர்களாக வயலின் ஸ்ரீ.பி.ராகவேந்திரராவ், மிருதங்கம் பத்ரி ஸ்ரீசதீஷ்குமார், கஞ்சிரா ஸ்ரீ.பி.எஸ். புருஷோத்தமன், கடம் முனைவர் எஸ்.கார்த்திக் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

மாலை 6.30 மணிக்கு நல்லூர் சங்கிலியன் தோப்பில் நடைபெறும் கர்நாடக இசைக்கச்சேரிக்கு பிரதம விருந்தினராக வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ. சந்திரசிறி கலந்து கொள்வார். (அ-7)

## வெளிநாட்டு பல்கலைகளுக்கு அரசு வரிச்சலுகை வழங்கும்

இலங்கையில் நிறுவப்படும் வெளிநாட்டு பல்கலைக்கழகங்களுக்கு வரிச்சலுகை வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இதன்பிரகாரம் இலங்கையில் நிறுவப்படும் வெளிநாட்டு பல்கலைக்கழங்கள் முதல் 15 ஆண்டுகளுக்கு வரி செலுத்த வேண்டிய அவசியமில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

பிரித்தானியாவின் மத்திய லாங்ஷெயர் பல்கலைக்கழகத்தின் கிளை மீரிகமவில் அமைக்கப்படவுள்ளது. வரிச்சலுகை தொடர்பில் அரசாங்கம் நேற்று முன்தினம் பாராளுமன்றில் சட்டமொன்றை சமர்ப்பித்துள்ளது.

பல்கலைக்கழக சட்டத்தில் திருத்தங்களைக் கொண்டு வருவதன்மூலம் அரசாங்கம் வெளிநாட்டுப் பல்கலைக் கழகங்களுக்கு வரிச்சலுகை வழங்கவுள்ளது. (அ-2)

## தபால்மூலம் வாக்களிக்க மேலும் மூன்று நாட்கள்

(கொழும்பு)

மாகாண சபைத்தேர்தலில் தபால் மூலம் வாக்களிப்பதற்காக மேலதிகமாக மேலும் 3 நாட்களை தேர்தல்கள் செயலகம் ஒதுக்கியுள்ளது.

எதிர்வரும் 9, 10 ஆகிய தினங்களில் தபால்மூல வாக்களிப்பு இடம்பெறும் என தேர்தல்கள் செயலகத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட இரண்டு நாட்களிலும் வாக்களிக்கமுடியாத தபால்மூல வாக்காளர்களுக்காக மேலதிகமாக 3 நாட்கள் வழங்கப்பட்டுள்ளதாக தேர்தல்கள் செயலகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்பிரகாரம் 12, 13, 14 ஆம் திகதிகளிலும் அலுவலக நேரங்களில் சம்பந்தப்பட்ட மாவட்ட தேர்தல் அலுவலகங்களிலும் கொழும்பிலுள்ள தேர்தல்கள் செயலகத்திலும் வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

தபால்மூலம் வாக்களிப்பதற்காக தேசிய அடையாள அட்டை அல்லது தேர்தல்கள் செயலகத்தினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள அடையாள ஆவணமொன்றை சமர்ப்பிக்கவேண்டும் என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

## தங்கம் கடத்த முயன்ற இந்தியர் கைதானார்

(கொழும்பு)

சட்டவிரோதமாக தங்கம் கடத்த முயன்ற இந்தியப் பிரஜை ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து நேற்று அதிகாலை 1.10 மணியளவில் அவர் கைது செய்யப்பட்டதாக சுங்கப் பிரிவு ஊடகப்பேச்சாளர் தெரிவித்தார்.

இவர் 477 கிராம் அடங்கிய தங்கத் தகடுகளை மலவாயிலில் மறைத்து வைத்து விமானத்தில் பயணிக்க முயன்ற வேளையில் கைது செய்யப்பட்டதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

அத்துடன் இரண்டு தங்க வளையல்கள் மற்றும் மோதிரம் ஒன்றும் அந்நபரிடம் இருந்து மீட்கப்பட்டுள்ளது. வளையல்கள் 45 கிராமும் மோதிரம் 15 கிராமும் நிறையுடையவை எனக் கண்டறியப்பட்டுள்ளது.

மீட்கப்பட்ட தங்கத்தின் மொத்தப் பெறுமதி 27 இலட்சம் ரூபா என சுங்கப் பிரிவு ஊடகப்பேச்சாளர் குறிப்பிட்டார். (அ-2)


## சத்திய தரிசனம்



நரசிம்மமூர்த்தி: ஆன்மீகப் பாதையின் ஆரம்பத்தில் இருப்பவர்க்கு உலக ஆசைகளும் இருக்கும். அவரின் இருமை உணர்வு ஒரு தீயவட்டமாக ஆகிவிடுகிறது. நல்வழிக்கு அவர் எங்கே தொடங்குவது?

சுவாமி: சத்சங்கம் நல்லவர்களின் கூட்டுறவு. அதுதான் ஆரம்பம். யாராக இருந்தாலும் சத்சங்கத்திலே ஆன்மீக மகிழ்ச்சியை சிறிதளவாவது உணரமுடியும். உண்மையான சத்சங்கம் என்பது இறைவனுடைய அருகாமை. தெய்வீக இன்பத்தை அனுபவித்த உண்மையான பக்தர்களுடன் இருக்கும்போது ஒருவர் அவருடைய இதயத்தின் தூய்மைக்குத் தக்கவாறு அந்த இன்பத்தை ஒரு சிறி தளவாவது அனுபவிக்கமுடியும். அந்த அனுபவம் ஒருவனை புலன் இன்பங்க ளிலிருந்து விடுவித்து ஆன்மீக இன்பத்தை மென்மேலும் அனுபவிக்க ஊக்குவிக்கும்.

ஒரு மனிதன் புகழப்படும்போது மிகவும் மகிழ்ச்சியில் மயங்கிவிடுகிறான். ஆனால் அவனை யாராவது திட்டினால் சோர்வு அடைகிறான். ஆனால் இறைவனை முழுமையாக நம்புகிறவர்கள் (பக்தர்கள்) இவ்வாறு நடந்து கொண்டால் இது உங்கள் பலவீனத்தின் அடையாளமாகும். ஒரு மனிதன் புகழ்ச்சி அல்லது இகழ்ச்சி, வெற்றி மற்றும் தோல்வி, மகிழ்ச்சி மற்றும் துன்பம் எதுவாக இருந்தாலும் அதைத் தாங்கிக்கொண்டு மேருமலையைப் போல் நிலைத்து நிற்க வேண்டும். எது நடந்தாலும் உறுதியாகவும் மனம் குன்றாமலும் இருக்கும் மனோபாவத்தை வளர்த்துக்கொள்ளவேண்டும்.



## அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

### காலும் முகமும் சுத்தம் செய்த பின்னரே வீட்டிற்குள் நுழைய வேண்டும்

வீடு என்பது நாம் தஞ்சம் புகுமிடம். அதனாலேயே ஆராதனை செய்யுமிடத்தின் புனிதத்தன்மை அறிவுள்ளவர்கள் வீட்டுக்கும் உண்டென்று நம்பியிருந்தனர்.

காலும் முகமும் சுத்தமாகக் கழுவி காலணிகளை வெளியிலே கழற்றிப்போட்ட பின்னரே வீட்டினுள் நுழைய வேண்டும் என்று கேட்கும்போது பெரியவர்கள் இவ்வளவு கண்டிப்பாக இருக்கின்றனரே என்று இளைஞர்கள் மனதுக்குள் முணுமுணுப்பதுண்டு. ஆனால் இந்தக் கண்டிப்பான விதியில் வீட்டின் புனிதத்தன்மை மட்டுமல்ல நமது தனிப்பட்ட சுத்தத்தையும் குறிப்பிட்டுள்ளது என இதை ஆராய்ந்து பார்க்கும்போது புரியும்.

பலவகை அசுத்தங்கள் நிறைந்திருக்கும் சூழ்நிலைகளிலிருந்து நாம் வீட்டிற்குள் நுழைகின்றோம். நமது பாதத்தில் அழுக்கும் நோயணுக்களும் எளிதில் படியவும் செய்யும்.

சுத்தமான தண்ணீரால் காலும் முகமும் கழுவும்போது ஒருவர் தன் உடலிலுள்ள அழுக்குகளை அகற்றி அவற்றை வீட்டிற்குள் கொண்டு செல்லாமல் துரத்துகின்றார்.

நாகரிகம் அதிகமாக போய்ச்சேராத நம் கிராமங்களில் சிலவீடுகளின் முன் வாசலுக்கருகில் கால், முகம், கழுவுவதற்காக ஒரு பாத்திரத்தில் சுத்தநீர் வைத்திருப்பதைக் காணலாம்.

நிர்மாணிக்கப்பட்டு திறக்கப்படாத நிலையில் உள்ள

# பூநகரி அரசினர் பொது வைத்தியசாலை

(பூநகரி)

**பூநகரி அரசினர் பொது வைத்தியசாலை நிர்மாண வேலைகள் நிறைவுபெற்று மூன்று மாதங்களாகியும் இன்னமும் திறக்கப்படாமையால் அப்பகுதி மக்களும் நோயாளர்களும் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.**



கடந்த 2012ஆம் ஆண்டு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவால் அடிக்கல் நாட்டப்பட்டு வேலைகள் நிறைவடைந்து மூன்று மாத காலமாகியும் இன்னமும் இவ் வைத்தியசாலை திறக்கப்படவில்லை.

இதனால் இந்த வைத்தியசாலை தற்போது பூநகரி வாடியடியில் எதுவித வசதிகளுமின்றி தனியார் வீட்டொன்றில் இயங்கி வருகின்றது.

வார நாட்களில் மதியம் வரை இயங்கும் இவ் வைத்தியசாலை வளாகத்தில் குடிநீர் இன்மை, நோயாளர் விடுதியின்மை என்பன காணப்படுவதால் பணியாளர்களும் சிகிச்சைக்கு வரும் நோயாளர்களும் பெரும் துன்பங்களை எதிர்கொள்கின்றனர்.

இங்கு நிரந்தர வைத்தியர் இல்லை. அவ்வப்போது கிளிநொச்சியில் இருந்து ஒவ்வொருவர் வந்து நோயாளரைப் பார்வையிட்டு செல்வர்.

இங்கிருக்கும் ஒரு நோயாளர் காவு வண்டி, இங்கு வைத்தியர் இல்லாதபோது வரும் நோயளர்களை கிளிநொச்சிக்கோ அல்லது சாவகச்சேரிக்கோ எடுத்துச் செல்லும்.

அவ்வேளை, இங்கு வருகை தரும் நோயாளர்களைப் பார்வையிட எவரும் இல்லாத நிலையிலும் கிளி நொச்சிக்கு எடுத்து செல்ல காவு வண்டி மற்றொன்று இல்லாத நிலையிலும் அவர்கள் பெரும் அவல நிலைக்கு உள்ளாகின்றனர்.

இந்நிலையில் வசதிகளுடன் கூடிய புதிய வைத்தியசாலை திறக்கப்படுவது எப்போது என பொது அமைப்புக்கள் கேள்வி எழுப்புகின்றன. (ம-84)




## மருதோடை கிராமத்தில் யானைகளின் அட்டகாசம்

வவுனியா நெடுங்கேணி பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட மருதோடை கிராமத்தில் யானைகளின் அட்டகாசத்தினால் தாம் பாதிக்கப்படுவதாக அக்கிராம மக்கள் தெரிவிக்கின்றனர்.

மாலையிலேயே யானைகளின் அட்டகாசம் தொடங்கி விடுவதாகவும் இதனால் உயிர் அச்சத்துடனேயே தாம் தினந்தோறும் வாழ்வதாகவும் அம் மக்கள் மேலும் தெரிவித்தனர்.

பின்தங்கிய கிராமத்தில் பெரும்பாலான மக்கள் விவசாயத்தையே பிரதான தொழிலாக மேற்கொண்டுள்ளனர்.

காட்டு யானைகள் தமது பயிர்ச் செய்கையை தினந்தோறும் அழித்து வருகின்றனமையால் பொருளாதார ரீதியாக தாம் பெரிதும் பாதிக்கப்படுவதாக அவர்கள் கவலை தெரிவித்தனர்.

எனவே, வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் யானைகளைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளனர். (ம-250)

## கட்டாக்காலிகளால் சிரமத்தை எதிர்கொள்ளும் மக்கள்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு கரைதுறைப் பற்று எல்லைக்குட்பட்ட பிரதேசங்களில் கட்டாக்காலிகள் அதிகமாக நடமாடுவதனால் மக்கள் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

குறிப்பாக கட்டாக்காலிகள் முல்லை.மாவட்ட செயலக முன்றல், சிலாவத்தை சந்தி, முல்லைத்தீவு பட்டணம், முள்ளியவளை பொதுச் சந்தை போன்ற இடங்களில் அதிகமாகக் காணப்படுகின்றன.

இதனால் போக்குவரத்துச் செய்வதில் சிக்கல் ஏற்பட்டுள்ளதுடன் விபத்துக்களும் இடம்பெறலாம் என பயணிகள் விசனம் தெரிவிக்கின்றனர்.

எனவே, இதற்கு தீர்வைப் பெற்றுத் தருமாறு மக்கள் சம்பந்தப்பட்டோரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். (ம-267)

## தற்காலிக அடையாள அட்டை வழங்கும் நிகழ்வு

(புளியம்பொக்கணை)

கபே அமைப்பினால் தேர்தலுக்கு வாக்களிப்பதற்கான தற்காலிக ஆள் அடையாள அட்டை வழங்கும் நிகழ்வு இன்று வியாழக்கிழமை காலை 9 மணிக்கு தர்மபுரம் பொதுநோக்கு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட கண்டாவளை பிரதேச செயலர் பிரிவில் தேர்தலுக்கு வாக்களிப்பதற்கான எந்த வித ஆவணங்களும் அற்றோருக்கே ஆள் அடையாள அட்டைகள் வழங்கப்படவுள்ளன. (ம-263)



ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியத்தின் (unicef) நிதியுதவியுடன் வவுனியா மற்றும் கிளிநொச்சியின் கரைச்சி, பூநகரிப் பிரதேச செயலக பிரிவுகளில் மிதிவெடி அபாயக் கல்வியை வழங்கி வரும் SAADE அமைப்பின் மிதிவெடி செயற்பாட்டின் ஓர் அங்கமாக மிதிவெடியால் பாதிக்கப்பட்டவர்களுக்கான வாழ்வாதார உதவிகள் வழங்கும் நிகழ்வு அண்மையில் பூநகரி– பொன்னாவெளி கிராமசேவையாளர் அலுவலகத்தில் நடைபெற்றது. இதன் போது பொன்னாவெளி கிராமசேவையாளரினால் பயனாளி ஒருவருக்கு உதவித் தொகை வழங்கி வைப்பதை படத்தில் காணலாம்.

## புனரமைக்கப்படாத வீதியால் பயணிப்போர் அசௌகரியம்



(புளியம்பொக்கணை)

கிளிநொச்சி கரடிப்போக்கு சந்தியில் இருந்து ஓவசியர் சந்திவரை செல்லும் 5 கிலோ மீற்றர் நீளமான வீதி புனரமைக்கப்படாதுள்ளமையால் பயணிகள் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

இங்கு மீள்குடியேற்றம் செய்யப்பட்டகாலத்தில் இருந்து இன்று வரை இவ்வீதி புனரமைக்கப்படவில்லை.

இதனால் மக்கள் பெரும் சிரமங்களுக்குள்ளாகி வருகின்றனர். குறிப்பாக பாடசாலை மாணவர்கள் தினமும் சிரமங்களை அனுபவிக்கின்றனர்.

மேலும் பலநூற்றுக்கணக்கான பயணிகளும் சிரமப்படுகின்றனர்.

இவ் விடயத்தை துறைசார்ந்த அதி காரிகள் கவனத்தில் எடுத்து விரைந்து நடவடிக்கை எடுத்து உதவும் படி மக் களும் பயணிகளும் கோரிக்கை ஒன்றை முன்வைத்துள்ளனர். (ம-263)

## வருடாந்த உற்சவம்


(பூநகரி)

பூநகரி ஜெயபுரம் அருள்மிகு வரசித்தி வழிப் பிள்ளையார் ஆலய வருடாந்த உற்சவம் கடந்த ஓகஸ்ட் மாதம் 31 ஆம் திகதி சனிக்கிழமை ஆரம்பமாகி எதிர்வரும் 10 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 9 ஆம் திகதி திங்கட் கிழமை மகா சங்காபிஷேக நிகழ்வு சாவகச்சேரி சிவஸ்ரீ பாலகுமார குருக்கள் தலைமையில் நடைபெறவுள்ளது.

உற்சவ கால 10 நாட்களும் சமய சொற்பொழிவுகளும் சுற்றாடலில் உள்ள ஆலயங்களில் கூட்டுப் பிரார்த்தனை குழுக்களினால் தினமும் பிரார்த்தனை இடம்பெறவுள்ளதென ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (ம-84)

## மின்சார வசதியை ஏற்படுத்தி தருமாறு கோரிக்கை



(குருமன்காடு)

வவுனியா மாவட்டத்தில் உள்ள நெடுங்கேணி பிரதேச செயலாளர் பிரிவிற்கு உட்பட்ட மருதோடை கிராம மக்கள் தமக்கு மின்சார, போக்குவரத்து வசதிகளை செய்து தருமாறு கேட்டுள்ளனர்.

இது பின்தங்கிய கிராமமாக காணப்படுவதோடு, காட்டுப் பிரதேசத்திலும் அமைந்துள்ளது.

போர் முடிவடைந்து பல ஆண்டுகளாகியும் மின்சார, போக்குவரத்து வசதிகள் செய்து தரப்படவில்லை என மக்கள் கவலை தெரிவித்தனர்.

இதனால் இங்கு வாழ்கின்ற மக்கள் பெரும் சிரமங்களை எதிர் நோக்குகின்றனர்.

அத்துடன் பல ஆண்டுகளாக இப்பகுதியின் வீதி திருத்தப்படாது காணப்படுவதோடு, பாதையின் இரு மருங்கிலும் பற்றை காடுகள் காணப்படுகின்றன. இதனால் இரவு வேளைகளில் மக்கள் அவசர தேவை ஏற்படின் பிரயாணம் செய்யமுடியாதுள்ளது.

எனவே, பாதைகளைத் திருத்தியும் மின்சார, போக்குவரத்து வசதி என்பவற்றை ஏற்படுத்தியும் தருமாறு அவர்கள் கோரிக்கை ஒன்றை முன் வைத்துள்ளனர். (ம-250)

# நியூ ஸ்ரார் பிறிமியர் லீக் ஓல்ட் கோல்ட்ஸ் வெற்றி



## கானுஜனின் ஹற்றிக் சாதனை

நியூஸ்ரார் விளையாட்டுக் கழகம் 2ஆவது ஆண்டாக நடத்தும் மேற்படி வெற்றிக் கிண்ணத்திற்கான சுற்றுப் போட்டியின் இரண்டாவது தகுதிகாண் போட்டி கடந்த ஞாயிற்றுக் கிழமை கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றபோது ஓல்ட் கோல்ட்ஸ் அணி ஸ்கந்தா ஸ்ரார் அணியை 2 விக்கெட்டுகளால் வென்றுள்ளது.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஸ்கந்தா ஸ்ரார் அணி 19 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 131 ஓட்டங் களைப் பெற்றது.

சன்ஜயன் 24, சிறிகரன் 26 ஓட்டங்களைப் பெற்றனர்.

ஜெயசுதன் 03, நிரோஸன் -01, கஜேந்திரன் 01 , பிரசாந்த் 04 இலக்குகளைக் கைப்பற்றினர்.

132 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு களமிறங்கிய ஓல்ட் கோல்ஸ் அணி 19.1 ஓவர்களில் 8 இலக்குகளை இழந்து 137 ஓட்டங்களைப் பெற்றது.

சிறிகுகன் 35,சீராளன் ஆட்டமிழக்காது 31 ஓட்டங்களைப் பெற்றனர்.

நிரோயன் 02, கானுஜன் 04 (ஹற்றிக் உட்பட),(இத் தொடரில் முதலாவது ஹற்றிக் ) கிருஸ்ணா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

அணிகள் சம வெற்றிகளைப் பெறும் பட்சத்தில் புள்ளிகள் அடிப்படையில் அணிகள் தெரிவு செய்யப்படும்.

இப் போட்டியின் மூலம் ஓல்ட் கோல்ஸ் அணி 4.37 புள்ளிகளையும் ஸ்கந்தா ஸ்ரார் அணி 2.11 புள்ளிகளையும் பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# குடிநீர் விநியோகத்திற்கு தற்காலிகமாக தடை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பிரதான வீதியில் அமைந்துள்ள யாழ்.மாநகர சபைக்குட்பட்ட பிரதான குடிநீர் விநியோகத் தாங்கியிலிருந்து பொது மக்களுக்கு விநியோகம் செய்யும் குடிநீர் குழாயின் கட்டுப்பாட்டு வால்வில் ஏற்பட்ட உடைவு திருத்தம் காரணமாக குடிநீர் விநியோகம் தற்காலிகமாக தடைப்பட்டுள்ளதாக யாழ்.மாநகரசபை நீர் விநியோகப் பகுதி அறிவித்துள்ளது.

குறித்த திருத்த வேலை தொடர்ந்து நடைபெற்று வருவதாகவும் திருத்த வேலைகள் முடிவடைந்த பின்னர் குடிநீர் விநியோகம் நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.(செ-2)

# இந்திய மீனவருக்கு ஒரு வருட சிறை

(கரவெட்டி)

வடமராட்சி கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்ட இந்திய மீனவர்கள் 34 பேருக்கு 5 வருடத்துக்கு ஒத்திவைக்கப்பட்ட ஒருவருட கால சிறைத் தண்டனை விதித்து பருத்தித்துறை நீதிமன்றம் நேற்று தீர்ப்பளித்துள்ளது.

வடமராட்சி கடற்பரப்பில் கடந்த யூலை மாதம் 30-ம் திகதி அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்ட இந்திய மீனவர்கள் 34 பேரையும் இலங்கைக் கடற்படையினர் அண்மையில் கைது செய்திருந்தனர்.

இவர்களுக்கான வழக்கு விசாரணை நேற்றைய தினம் பருத்தித்துறை நீதிமன்றத்தில் நீதவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் முன்னிலையில் எடுத்துக் கொள்ளப் பட்டது.

வழக்கினை விசாரித்த நீதவான் இவர்களுக்கு 5 வருடத்துக்கு ஒத்திவைக்கப்பட்ட ஒருவருட சிறைத்தண்டனை விதித்து தீர்ப்பளித்தார். (செ-24)

# தேர்த் திருவிழாவில் சங்கிலி திருட்டு

(யாழ்ப்பாணம்)

வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர் கந்தசுவாமி கோவிலின் நேற்றைய தேர்த் திருவிழா உற்சவத்தின் போது ஒரு பவுண் தங்கச் சங்கிலி திருடப்பட்டுள்ளதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இலட்சக்கணக்கான பக்தர்கள் பங்கேற்ற இத்திருவிழாவில் சனநெரிசலில் காலை 7.30 மணியளவில் இத்திருட்டு இடம்பெற்றதாக முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நல்லூர்க் கந்தசுவாமி கோவில் திருவிழாவை முன்னிட்டு இம்முறை அறுநூறுக்கு மேற்பட்ட பொலிஸார் சிவிலிலும், சீருடையிலும் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்தனர்.

கடந்த வருடத்தினை விட இம்முறை ஆலய சூழலில் இடம்பெறும் திருட்டுச் சம்பவங்கள் பொலிஸாரின் தீவிர கண்காணிப்பினால் மிகவும் குறைவடைந்துள்ளன.

இதேவேளை, நேற்றைய தினம் தேர்த் திருவிழாவின்போது பாதுகாப்பு தரப்பினரால் ஹெலிகொப்டர் மூலம் பூக்கள் சொரியப்பட்டன. இதன்போது தாழ்வாகப் பறந்த ஹெலியின் காற்றாடி வேகத்தினால் ஆலய வீதியில் இருந்த மரம் ஒன்றின் கிளை முறிந்து விழுந்ததில் அடியவர் ஒருவர் காயமடைந்ததுடன் அவர் உடனடியாக யாழ்.போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டார்.

இதேவேளை,மேலும் சனநெரிசலில் சிக்குண்டு மூன்று பேரும், சைக்கிளால் விழுந்து ஒருவருமாக மொத்தம் 5 பேர் தேர்த் திருவிழாவின் போது காயங்களுக்கு உள்ளாகி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (செ-6)

# இராணுவ...

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பை யுத்தின் மூலம் இலங்கை அரசாங்கம் தோற்கடித்தமைக்கு இந்திய அரசாங்கம் நன்றி தெரிவிப்பதாக சுப்ரமணியன் சுவாமி கொழும்பில் தெரிவித்துள்ளார்.

இலங்கை வந்துள்ள அவர், உள்ளூர் தொலைக் காட்சி ஒன்றுக்கு வழங்கிய பேட்டியில் இதனைக் கூறியுள்ளார். (செ-11)

# ஐ.நாவின் நடவடிக்கை...

ஐக்கிய நாடுகள் செயலாளர் பான கீ மூனின் அறிக்கை நேற்று ஐக்கிய நாடுகளின் தலைமையகத்தில் வெளியிடப்பட்டது.

அதில் இலங்கை தொடர்பான ஐக்கிய நாடுகளின் நிபுணர் குழுவின் பரிந்துரைகளை கொண்டு அங்குள்ள பிரச்சினைக்கான தீர்வைக் காண விரும்புவதாக பான் கீன் குறிப்பிடடுள்ளார்.

இலங்கையின் இறுதிப் போரினபோது ஐக்கிய நாடுகள் சபை உடனடியாக உரிய முறையில் செயற்படாது தோல்வி கண்டது என்று ஐக்கிய நாடுகளின் நிபுணர் குழு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்தநிலையில் நிபுணர் குழுவின் பரிந்துரையின்படி, இலங்கையின் மனிதாபிமான நடவடிக்கைகளை பலப்படுத்த ஐ.நா. நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என பான் கீ மூன் தமது வருடாந்த அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

எனவே இந்த பணிக்காக ஐக்கிய நாடுகளின் உறுப்பு நாடுகள் ஒத்துழைக்க வேண்டும் என்று அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

பொறுப்புக்கூறலை பாதுகாத்தல் என்ற அடிப்படையில் செயற்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அண்மையில் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டிருந்த ஐ.நா.ஆணையாளர் நவநீதம்பிள்ளை இலங்கை அரசு மீது பல்வேறு குற்றச்சாட்டுக்களை சுமத்தியிருந்த நிலையில் பான் கீ மூனின் இந்த அறிக்கை வெளியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.(செ-11)

# நல்லூருக்குச் சென்ற...

வேளை காலை 8 மணிக்கும் 10.40 மணிக்குமிடையில் இந்தத் திருட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

யாழ்.கந்தர்மடம் பகுதியில் இடம்பெற்ற மேற்படி சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது, நல்லூர்க் கந்தனின் தேர்த்திருவிழாவான நேற்று வீட்டிலிருந்த அனைவரும் காலை 8 மணியளவில் கோவிலுக்குச் சென்றுள்ளனர்.

இந்நிலையில் முற்பகல் 10.40 மணியளவில் மீண்டும் வீட்டுக்கு திரும்பிவந்தபோது வீட்டின் அறைகளிலிருந்த அலுமாரிகள் உடைக்கப்பட்டு ஆடைகள் உள்ளிட்ட பொருட்கள் பரப்பப்பட்டிருந்ததைக் கண்டு அதிர்ச்சியடைந்துள்ளனர்.

இது தொடர்பாக 119 என்ற பொலிஸ் அவசர இலக்கத்திற்கு தொடர்பு கொண்டு தெரிவிக்கப்பட்டதையடுத்து மோப்ப நாய்களுடனும் தடவியல் நிபுணர்களுடனும் வருகை தந்த பொலிஸார் சம்பவம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டனர்.

இதன்போது வீட்டின் யன்னல் உடைக்கப்பட்டு திருடர்கள் உள்நுழைந்து திருடிக் கொண்டு சென்றதை அறிந்துள்ளனர்.

இதில் மூன்று தங்கச் சங்கிலி, ஒரு மோதிரம், ஒரு சோடிக் காப்பு, ஒரு லப்டொப் வகை கணனி, இரண்டு புகைப்படக் கருவி, ஒரு பல்லூடகக் கருவி, இரண்டு பெறுமதியான தொலைபேசிகள் என சுமார் 10 இலட்சம் ரூபாய் பெறுமதியான பொருட்கள் திருட்டுப் போயுள்ளதாக வீட்டின் உரிமையாளரான யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் விரிவுரையாளரான பா.முரளிதரன் பொலிஸாரிடம் முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

இதேவேளை யாழ்.கந்தர்மடம் பகுதியில் ஒரு சில வாரங்களுக்கு முன்பு சுமார் 13 இலட்சம் ரூபாய் பெறுமதியான தங்க நகைகள் மற்றும் பொருட்கள் திருடப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (செ-6)

# இந்திய தூதுவர் சின்...

தொடக்கம் 12.30 மணிவரை இடம்பெற்ற மேற்படி கலந்துரையாடலின்போது,

யுத்தத்திற்கு பின்னரான காலப் பகுதியில் வடக்கு மாகாணத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் இந்திய அரசாங்கத்தினால் முன்னெடுக்கப் பட்டுவரும் அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாகவும்கலந்துரையாடப்பட்டதாக தெரியவந்துள்ளது.

இந்தச் சந்திப்பின்போது,

வடக்கு மாகாண சபையின் பிரதம செயலாளர் திருமதி விஜயலக்சுமி ரமேஷ், ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன், யாழ். இந்தியத் துணைத் தூதர் வி.மகாலிங்கம், யாழ்.இந்திய துணைத் தூதரகத்தின் உதவித் துணை தூதர்எஸ்.டி.மூர்த்தி உள்ளிட்டவர்களும் பங்கு கொண்டிருந்தனர்.

ஆளுநருடனான சந்திப்புக்கு முன்னர் இந்திய உயர்ஸ்தானிகர் சின்ஹா யாழ. அரியாலைப் பகுதியிலும் தென்மராட்சி எழுதுமட்டுவாள் பகுதியிலும் இந்திய வீட்டுத் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட வீடுகளையும் சென்று பார்வையிட்டார்.

இதனையடுத்து மாலை 6.30 மணியளவில் நல்லூர் சங்கிலியன் தோப்பில் இடம்பெற்ற இந்திய நாட் டியக் கலைஞர் ஸ்ரீமதி லீலா சாம்ஸனின் பரத நாட்டிய ஆற்றுகை நிகழ்விலும் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு சிறப்பித்திருந்தார்.

இதேவேளை இன்றைய தினம் இந்தியத் தூதுவர் முக்கிய சந்திப்புக்களில் ஈடுபடவுள்ளார் எனவும் தெரியவந்துள்ளது. (செ-6)


## நெஞ்சை விட்டகலா ஓராண்டு நினைவஞ்சலி



மலர்வு 1922.10.22 உதிர்வு 2012.09.15

அமரர்

கதிரன் கந்தையா

கடந்த 15.09.2012 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர் அமரர் கதிரன் கந்தையா அவர்களின் ஓராண்டு நினைவஞ்சலி 05.09.2013 வியாழக்கிழமை இன்று பகல் 11.30 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

துரை வீதி,
இணுவில் தெற்கு.

குடும்பத்தினர்.

(3861)

## ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானம் தெல்லிப்பழை

### வருடாந்த மஹோற்சவம் - 2013

### முதலாம் திருவிழா கொடியேற்றம்





தேசம் போற்றும் தெல்லை நகர் தேவி
பாவ வினை அகற்றி பரிவு காட்டும் பத்தினி
நாடி வந்தவர் நலம் காக்கும் நளாயினி
கொடியேறி கோல விழாக் காணும் கொற்றவையே
பாடிப் பரவிப் பக்தர்கள் பணிவர் பன்னிரு நாளும்

\- அடியவர்

அனுசரணை:
இளம் சட்டத்தரணி,
கேசவன் சயந்தன் (சாவகச்சேரி)

தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கம்,
தெல்லிப்பழை.

(சி-4608)

# துன்புறுத்துவது அருவருக்...

ஐ.நாவுடன்பேசியவர்கள் பழி வாங்கப்படுவது மிகவும் கவனத்துக்குரிய ஒரு விடயம் எனவும் தெரிவித்த அவர், இது தொடர்பில் ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக்குழுவுக்கு தான் முறையிடப் போவதாகவும்கொழும்பில் ஊடகவியலாளர் ஒருவரின் கேள்விக்குப் பதிலளித்த போது அவர் கூறி இருந்தார்.

இந்நிலையில், இது குறித்து கருத்து வெளியிட்ட மனிதவுரிமைகள் கண்காணிப்பகத்தின் ஆசியப் பிராந்தியப் பணிப்பாளர் பிரட் அடம்ஸ், ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளரை நாட்டுக்கு அழைத்து உபசரிக்கும் அதேவேளையில், அவரைச் சந்திபவர்களை தமது படைத்தரப்பினரைக் கொண்டு துன்புறுத்துவது அருவருப்பான ஒரு செயற்பாடு என வர்ணித்துள்ளார்.

ஐநாமனிதஉரிமைகள் ஆணையாளருடன்பேசியவர்களைத் துன்புறுத்தும் செயற்பாடுகளில் ஈடுபடுபவர்கள் தண்டனைகுள்ளாக்கப்படுவார்கள் என இலங்கை அரசாங்கம் அறிவிக்க வேண்டும்.

அத்துடன், இவ்வறான செயற்பாடுகளில ஏற்கெனவே சம்பந்தப்பட்டவர்கள் தண்டனைக்குள்ளாக்கப்படுவதை இலங்கை அரசாங்கம் உறுதிப்படுத்த வேண்டும் என பிரட் அடம்ஸ் மேலும் தெரிவித்துள்ளார். (செ-11)


## After A/Level

IT துறைக்கான உயர்கல்வி வெற்றிக்கான ஆரம்ப அடித்தளம்



Join @ ESOFT for
IT & English
(Dual Diploma)

DiTEC INTERNATIONAL
DiE

Diploma in Information Technology
Diploma in English

3 சர்வதேச ரீதியாக அங்கீகரிக்கப்பட்ட ஒரே ஒரு IT டிப்ளோமா
இலவச கற்கை நெறிகளுடன்

FREE Pendrive

Accelerated Skills Acquistion Program
Diploma in Computerized Accounting
Banking in Financial Accounting

புதிய பிரிவுகள்
2013.09.06 காலை 9 : 00 மணி

(C-4597)

ESOFT METRO CAMPUS - JAFFNA
No.137, K.K.S Road, Jaffna
Tel: 021 222 4142 | 077 309 9 308

ESOFT — Shaping Lives, Creating Futures.
ESOFT METRO CAMPUS
Sri Lanka's Largest IT Education Network

www.esoft.lk 50 நாடளாவிய கிளைகள் 2012ல் மட்டும் 20,000 மாணவர்கள்



## Dutch, Deutsch, French



தூதரக பரீட்சைக்கான ஜேர்மன் - Deutsch (டொச்) மற்றும் நெதர்லாந்து - Dutch (டச்) புதிய வகுப்புகள்நடைபெறுகின்றன.

- ✱ French, Italian, English (A-1 Exam) வகுப்புகளும் நடைபெறுகின்றன.
- ✱ வடமாகாணத்தில் அரசாங்க அங்கீகாரம் பெற்று ஜேர்மன் கலாசார நிலையத்தின் அனுசரணையுடன் இயங்கும் ஒரே வெளிநாட்டு மொழிக் கல்வி நிறுவனம் எங்களுடையதே.
- ✱ Dutch மற்றும் Deutsch தூதரக பரீட்சைகளில் நீங்கள் சித்தியடைவதை தற்பொழுது நாம் 100% உத்தரவாதப்படுத்துகின்றோம்.
- ✱ Audio, Video வசதிகளுடன் குளிரூட்டப்பட்ட வகுப்பறைகள்.

**Vivekananda Academy**

221/1, மின்சார நிலைய வீதி யாழ்ப்பாணம். *(Gov. Reg.No: W/A 76795)*

Tel: 0213216928, 0774842464 ,0212220393

(C-4603)




## After A/L...

யாழ் மற்றும் நெல்லியடி நகரங்களில்

BCAS Campus வழங்கும் உயர்கல்வி மற்றும் தொழில் வழிகாட்டல்

## Seminar & Counseling 2013

போட்டி நிறைந்த நவீன உலகின் சவால்களை வெற்றி கொள்ளும் வகையில் GCE A/L இன் பின்னர் உங்கள் உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி என்பவற்றை எவ்வாறு திட்டமிடலாம் என்பது பற்றிய பெறுமதிமிக்க நேரடி ஆலோசனைகளை வழங்குவதற்காக அனுபவம் மிக்க உயர்கல்வி ஆலோசகர்கள் உங்கள் நகரங்களிலேயே உங்களைச் சந்திக்கின்றார்கள். உயர்கல்வித் துறையில் 14 வருடத்திற்கும் மேற்பட்ட அனுபவத்தைக் கொண்ட சர்வதேச அங்கீகாரம் பெற்ற இலங்கையின் முன்னணி உயர்கல்வி நிறுவனமான BCAS Campus வழங்கும் உயர்கல்வி மற்றும் தொழில் வழிகாட்டல் கருத்தரங்கு



- ▶ A/L பரீட்சை முடிவுகள் வெளிவரும் வரையான காலப்பகுதியை உயர்கல்வி வெற்றிக்காக எவ்வாறு. பயன்படுத்திக் கொள்வது?
- ▶ நவீன உலகளாவிய தொழில் சந்தையில் உருவாகி வரும் புதிய புதிய தொழில்வாய்ப்புகள் எவை?
- ▶ உங்களது தனிப்பட்ட திறன் மற்றும் ஆர்வம் என்பவற்றுக் கேற்ப எதிர்கால தொழில் இலட்சியங்களை எவ்வாறு வரையறை செய்வது?
- ▶ உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பல்கலைக் கழக வாய்ப்புகளை அடிப்படையாகக் கொண்டு உங்கள் உயர்கல்வி துறையினைத் தெரிவு செய்யும் போது கவனிக்க வேண்டிய விடயங்கள் என்ன?
- ▶ உலகளாவிய தொழிற்சந்தைகளில் உயர்வருமானம் பெறும் தொழில்வாய்ப்புகளை பெறுவதற்கான வழிமுறைகளும் அதற்காக வேண்டப்படும் திறன்களும் எவை?
- ▶ நீங்கள் உயர்கல்வியைத் தொடர்கின்ற போது அதனை வெற்றிகரமாக பூர்த்தி செய்யும் வகையில் நீங்கள் கடைப்பிடிக்க வேண்டிய கற்றல் நுட்பங்கள் யாவை? அதற்கேற்ப உங்கள் நினைவாற்றல் திறன்களை வளர்த்துக் கொள்வது எவ்வாறு?
- ▶ உயர்கல்வி மற்றும் எதிர்கால தொழில் வெற்றிகளை உத்தரவாதப்படுத்தும் வகையில் உங்கள் ஆங்கில மொழித்திறனையும் ஏனைய மென் திறன்களையும் வளர்த்துக் கொள்வதற்கான மிகச் சிறந்த வழிகள் என்ன?
- ▶ நீங்கள் பல்கலைக் கழகமொன்றில் உயர் கல்வியைத் தொடர்கின்ற காலப்பகுதியில் ஏனைய தொழில்சார் (Professional Qualification) கல்வித் தகைமைகளை பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்புகள் என்ன?

**யாழ்ப்பாணத்தில்...**

செப்டம்பர் 07 ஆம் திகதி சனி — வீரசிங்கம் மண்டபம் — மு.ப.09.00 - பி.ப 01.00

**நெல்லியடியில்...**

செப்டம்பர் 07 ஆம் திகதி சனி — நெல்லை முருகன், திருமணமண்டபம் — பி.ப. 02.00 - 05.00

இக் கருத்தரங்கில் எமது அனுபவமிக்க உயர்கல்வி ஆலோசகர்களை மாணவர்களும் பெற்றோர்களும் தனிப்பட்ட முறையில் சந்தித்து ஆலோசனைகளை பெற்றுக் கொள்ள முடியும்.

BCAS CAMPUS
BRITISH COLLEGE OF APPLIED STUDIES

அனுமதி முற்றிலும் இலவசம்

அழையுங்கள்: 0777 102131

(C-4604)



## BRITISH COLLEGE OF HIGHER STUDIES

BCHS

சர்வதேச பாடத்திட்டத்தின் தராதரத்திற்கு அமைய
நவீன தொழில் நுட்பத்துடன் வழங்கும்
புதிய கற்கை நெறிகள்

**Spoken English With Grammar - Quick Learning Course** (1 ½ Months)

ஆங்கிலத்தில் சரளமாகக் கதைக்க விரும்புவர்களுக்காகவே நடாத்தப்படுகிறது. தொழில் புரிபவர்களுக்கு பிற்பகல், சனி மற்றும் ஞாயிறு வகுப்புக்கள் உண்டு.
A/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கு இது மிகவும் சிறந்தது.
வகுப்புக்கள் யாவும் புதிய தொழில் நுட்பத்திற்கமைவாகவும் (Video & Audio Visuals) கூடுதலான பயிற்சிகளுடன் நடாத்தப்படுகிறது.

**Diploma In English** (2 Months)

ஒரு தொழில் தேடுவதாயினும் சரி உயர் கல்வியினைத் தொடருவதாயினும் சரி ஆங்கிலத்தின் தற்காலத்தேவையும் அதிலே உங்களின் புலமை என்பதும் இன்றியமையாதது. இத்தேவைகேற்ப எமது பாடத்திட்டங்களும் வகுப்புக்களும் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. தொழில் புரிவோர் மாணவர்களுக்கென வகுப்புக்கள் உண்டு.

**IELTS** Toping centre for registering more IELTS candidates in Jaffna & Approved centre for IELTS online Registration system for Exam
< We gurantee minimum 6.0 band and above > Duration: 2 ½ Months

**BI Exam - Student Visa மூலம் UK செல்பவர்களுக்கானது**

City & Guilds இன் B1 பரீட்சை ஏனைய ஆங்கிலப் பரீட்சைகளை விட மிகவும் இலகுவானதுடன் இது G.C.E. (O/L) English இற்கு ஒப்பானது. இது British High Commission னால் முற்றிலும் அங்கீகரிக்கப்பட்டதுடன் எமது கல்லூரியிலேயே பரீட்சைக்கும் தோற்றமுடியும்.

**A1 Exm - Sponsor / Settlement Visa** மூலம் UK செல்பவர்களுக்கான பரீட்சை

- ◈ U.K. அரசாங்கத்தினால் சிபார்சு செய்யப்பட்டது
- ◈ எமது கல்லூரியிலேயே பரீட்சைக்கு தோற்ற முடியும் சான்றிதழின் வலிது கால எல்லை அற்றது.
- ◈ நம்பிக்கைக்குரிய சர்வதேச பரீட்சை
- ◈ ஏனைய பரீட்சைகளை விட மிகவும் இலகுவானது

**Young Learners for English (YLE)** [வயதெல்லை : 7 - 12]

இது ஒரு சர்வதேசப் பரீட்சை என்பதுடன் University of Cambridge வழங்கும் சான்றிதழ்

| Batch - 1 | Batch - 2 | Batch - 3 | Batch - 4 |
| --- | --- | --- | --- |
| 07.09.2013 | 09.09.2013 | 14.09.2013 | 16.09.2013 |

மேலதிக விபரங்களுக்கும் இலவச ஆலோசனைகளுக்கும் இன்றே எம்மைத் தொடர்பு கொள்ளவும்.


(C-4595)

Jaffna Branch:
No. 15, Sirambiyady Lane,
off Stanley Road, Jaffna. Tel: 021 222 4550

Vavuniya Branch:
No. 3, 6th Lane, Vairavarkovil Veethy,
Vairavarpulliyamkulam, Vavuniya.
Tel: 024 324 5287

Hot Lines : 0777222422 0777585913, 0714299935, 0777730074





வாழ்க்கையில் வசந்தம் உருவாக நல்லூர்க் கந்தனை வேண்டுகின்றோம்.

இலங்கையின் தலைசிறந்து விளங்கும் முன்னணியான நிறுவனம்

## World Express Services

உலக நாடுகளுக்கான துரித பொதிகள் மற்றும் கடிதங்கள் அனுப்ப எங்களை நாடுங்கள்




தலைமை அலுவலகம்:
338, அளுத் மாவத்தை வீதி, கொழும்பு - 15
தொ. பே.: 0112520894

கிளை : 277, பலாலி வீதி, யாழ்ப்பாணம். தொ. பே. 021 222 0356
(Central Nursing Home முன்பாக)

கிளை : 180/5 புகையிரத நிலைய வீதி, வைரவ புளியங்குளம், வவுனியா.
தொ. பே. : 024 490 3200

e.mail : worldexpress.ser@gmail.com www.worldexpressservices.com

(C-4318)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 05.09.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.